# இலக்கியச் செல்வம்

ம.பொ.சிவஞானம்

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

முதற் பதிப்பு: ஜூலை, 1955.
உரிமை பதிவு செய்யப் பெற்றது.

## ம. பொ. சி.
### எழுதிய நூல்கள்

★

விலை ரூ. 2-0-0

| | ரூ. | அ. |
|---|---|---|
| முரசு முழங்குகிறது | 1 | 4 |
| இலக்கியத்தின் எதிரிகள் | 0 | 8 |
| வீரபாண்டியக் கட்டபொம்மன் | 1 | 12 |
| கப்பலோட்டிய தமிழன் | 1 | 12 |
| வானொலியில் ம. பொ. சி, | 1 | 8 |
| தமிழன் குரல் | 1 | 4 |
| எங்கள் கவி பாரதி | 0 | 8 |
| சுதந்தரப் போரில் தமிழகம் | 0 | 8 |
| தமிழர் கண்ட காந்தி | 0 | 8 |
| பிரிவினை வரலாறு | 0 | 8 |
| தமிழரசா, திராவிடஸ்தானா ? | 0 | 8 |
| கயத்தாற்றில் கட்டபொம்மன் | 0 | 4 |
| தலைவர் ம. பொ. சி. [தொகுப்பு நூல்] | 1 | 12 |

நவபாரத் பிரஸ், சென்னை—1

# பதிப்புரை

இலக்கியம், அரசியல் இரண்டு துறைகளிலும் பேசவும், எழுதவும் ஒருங்கே திறமை பெறுவது மிகக் கடினம். அந்த நல் வாய்ப்பு திரு. ம. பொ. சி. அவர்களுக்கிருப்பதை தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள்.

அரசியலைப் போலவே இலக்கியத்தையும் புதிய பார்வையில் அவர் நோக்குகிறார். பாமரனுக்கும் பயன்படும்படி பண்டைத் தமிழ் இலக்கியங்களின் பெருமையை—சங்க இலக்கியங்களின் சிறப்பை, தமது ஆராய்ச்சி மிக்க எழுத்தாலும் பேச்சாலும் திரு. ம. பொ. சி. விளக்கி வருகிறார்.

பல்வேறு இலக்கியங்களைப் பற்றி அவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல், இதை வெளியிடும் நல்வாய்ப்பை அளித்த திரு. ம. பொ. சி. அவர்களுக்கு என் நன்றி.

**சோம. சுவாமிநாதன்**

இன்ப நிலையம்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| காவியமும் கற்பனையும் | ... | 5 |
| முற்போக்குப் புலவர்கள் | ... | 10 |
| அரசரும் புலவரும் | ... | 16 |
| கோயில் இல்லா ஊர் | ... | 22 |
| வீரத் தாய் | ... | 28 |
| மங்கல மரபு | ... | 33 |
| நந்தன்; ஓர் விவசாயி | ... | 38 |
| கண்ணீரிலே கலந்த கவிதை | ... | 45 |
| நல்ல நாடு | ... | 53 |
| தொழிலரசு | ... | 56 |
| இலக்கியத்தில் 'சோஷலிஸம்' | ... | 60 |
| போர்களப் புலவன் | ... | 68 |
| விடுதலை இந்தியாவுக்குப் பாரதியின் செய்தி | ... | 75 |
| புரட்சிக் கவி பாரதி | ... | 82 |
| சங்கத் தமிழ் | ... | 87 |
| சங்கத் தமிழ் வளர்ப்போம்! | ... | 93 |
| சங்க காலத்து ஆடை | ... | 99 |
| சமயமும் தமிழும் | ... | 104 |
| கம்பன் கண்ட தமிழகம் | ... | 109 |
| கட்டிடக் கலை | ... | 117 |
| இமயத்தில் எங்கள் கொடி | ... | 124 |
| வாழும் நாள் என்நாளோ? | ... | 132 |

# காவியமும் கற்பனையும்

பண்டைக் காலத் தமிழ் இலக்கியங்கள் என்றாலே, "அவை யனைத்தும், பாட்டாளி மக்களைச் சுரண்டிப் பிழைத்த பூர்ஷ்வாக்களின் சிருஷ்டிகள்" என்று கூறிப் புறக்கணிக்கின்றனர், பொருளாதாரப் புரட்சியாளர்கள். "மக்களை ஏமாற்றிப் பிழைத்த புரோகிதர்களின் கற்பனைக் குப்பைகள்" என்கின்றனர், சமூக சீர்திருத்தவாதிகள் ஆம்; பண்டைத் தமிழ் இலக்கியங்கள் அனைத்துமே இன்றைய விஞ்ஞான அறிவுக்கு விரோதமானவை என்ற முடிவுக்கே இந்த இருசாராரும் வருகின்றனர். இவர்களுடைய கூற்றுக்கள் சிறிதளவே உண்மை கலந்த பெரும் பொய் என்று கூறலாம்.

தமிழ் இலக்கியங்களை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று, சங்க கால இலக்கியம். மற்றொன்று, புராண கால இலக்கியம். சங்க கால இலக்கியங்களில் கற்பனைகளும் வருணனைகளும் அதிகம் இரா. விஷயங்கள் உள்ளது உள்ளபடியே உணர்த்தப் பெறுகின்றன. ஆனல், புராணகால இலக்கியங்களை அப்படிச் சொல்வதற்கில்லை. அவற்றில் கற்பனைகள் மலிந்திருக்கின்றன. அதற்குக் காரணம் உண்டு. சங்க கால இலக்கியங்கள் எல்லாம் வெறும் தனிப் பாடல்களே. அவை, சரித்திர நிகழ்ச்சிகளைப்பற்றி சான்றோர் எழுதிவைத்த கவிதைக் குறிப்புகளே. புராண கால இலக்கியங்களோ, பெரும்பாலும் காப்பியங்கள். ஆகவே, சரித்திர நிகழ்ச்சிகளைத் தொகுத்து காவியம் செய்கின்றபோது, அவற்றோடு கற்பனைகளும் கலக்க வேண்டியது அவசியமாகி விடுகிறது. இல்லையேல், காவியம் சுவையற்றதாகி விடும் அல்லவா?

'மழை', இயற்கைச் சக்தி தரும் உதவி என்றே கூறு கின்றன சங்க இலக்கியங்கள்.

கார்கோண் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறி

—முருகு: 7, 8.

முழங்கு கடல்முகந்த கமஞ்சூல் மாமழை

—நற்றிணை: 347—1.

கமஞ்சூல் மாமழை கார்பயந் திறுத்தென

—அகம்: 134.

என்ற வரிகள், வானுலாவும் மேகக் கூட்டம் கடலிலிருந்து நீர் முகந்து சென்று, பின்னர் மழையாகப் பொழிவதாகக் கூறுகின்றன. இது, இன்றைய விஞ்ஞானிகளின் கருத்துக்கும் ஒத்ததாகும். மற்றும்,

வான்முகந்தநீர் மலைப்பொழியவும்
மலைப்பொழிந்தநீர் கடற்பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்......

என்ற பட்டினப்பாலை வரிகள், "வானம், கடலிலிருந்து முகந்த நீரை மலைமீது பொழிகின்றது; மலையில் பொழிந்த நீர் (நிலத்தில் ஆறாகப் பாய்ந்து இறுதியில்) கடலில் கலக்கின்றது" என்ற அறிவியல் சாத்திரத்தின் உண்மையை உள்ளது உள்ளபடியே உணர்த்துகின்றன.

பிற்காலத்தில் தோன்றிய புராண காவியங்களில், மழையை ஆண்பாலாக்கி, அதற்கு 'வருணதேவன்' என்றும் பெயர் சூட்டப்பட்டது. அந்த வருணனுக்கு வழிபாடு நடத்தினால் பருவமழை தவறாமல் பெய்யும் என்ற நம்பிக்கையும் நாளடைவில் தோன்றி நிலைத்து விட்டது. மழை, காற்று, தீ, நீர் ஆகிய இயற்கைச் சக்திகளை

புராண காப்பியங்களின் பாத்திரங்களாக்கியதால், அந்தச் சக்திகளை ஆண்பால், பெண்பாலாகக் கற்பனை செய்வதும் அவசியமாகிவிட்டது போலும்!

கள்ளையும் தீயையும் சேர்த்து—நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்

என்ற வரிகளில், புராண காலப் புலவர்கள் நீர், நெருப்பு, வான் போன்ற இயற்கைச் சக்திகளைக் காவியங்களின் பாத்திரங்களாக்கிய செய்தியைப் பாரதியாரும் நமக்கு நினைப்பூட்டுகிறார்.

மற்றும், புராண காலத்தில் பருவமழை வருவதற்கும் தவறுவதற்கும் மக்களையே காரணமாக்கினர் மதவாதிகள்.

நல்லார் ஒருவ ருளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை

என்றார் ஒரு பெரியார். நீதி மன்னர் நெறியினர்க்கெனவும், வேதமுணர்ந்த வேதியர்க்கெனவும், மாதர் கற்புடை மங்கையர்க்கெனவும் மாதம் மும்மாரி பொழியுமென்றார் மற்றொரு ஞானியார்.

இவை யெல்லாம் வெறும் கற்பனைகளே. என்றாலும், மக்களிடையே ஒழுக்கத்தை வளர்ப்பதற்கென்றே, அப்பெரியார்கள் இந்த உபதேச மொழிகளைப் புகன்றிருக்கின்றனர்.

சங்க கால இலக்கியங்களிலும் கற்பனைகளே இல்லையென்று கூறிவிட முடியாது. அங்கும் இலைமறைகாயெனக் கற்பனைகள் இடம்பெற்றிருக்கின்றன.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

என்ற குறட்பா, 'மாதர் கற்புடைய மங்கையர்க்கோர் மழை' என்ற புராண காலத்துக் கருத்தையே போதிக்கின்றதல்லவா? மற்றும்,

மலைவான் கொள்கென உயர்பலி தூஉய்
மாரியான்று மழை மேக்குயர்கெனக்
கடவுள் பேணிய குறவர் மாக்கள்

என்ற புறநானூற்று வரிகள், சங்க காலத்தில் வாழ்ந்த மலைக் குறவர்கள், மழைவரம் வேண்டித் தெய்வத்தைப் பிரார்த்தித்ததாகத் தெரிவிக்கின்றன.

காவிரி, வைகை போன்ற ஆறுகளைப் பற்றிய வரலாறுகள் சங்க இலக்கியங்களில் ஒரு விதமாகவும், புராண இலக்கியங்களில் வேறு விதமாகவும் கூறப்படுகின்றன. "மலையில் பொழிந்த பெருமழை வெள்ளமெனப் பெருகிக் கடலை நோக்கி ஓடுகின்ற பாதைதான் ஆறு" என்கின்றன சங்க இலக்கியங்கள். காவிரி யாற்றுக்கும் இந்த இலக்கணம் பொருந்தும். ஆனால், பிற்கால புராண இலக்கியங்கள் காவிரியாற்றின் வரலாற்றை வேறு விதமாகக் கூறுகின்றன.

தவாநீர் காவிரிப் பாவைதன் தாதை
கவேரன்..............

அதாவது, 'கவேரன்' என்ற ஒரு ராஜரிஷியின் மகளான மாயை என்பவள், பிரமதேவனின் கட்டளைப்படி நதி வடிவு கொண்டாள் எனவும், அந்தக் கவேர கன்னியின் பெயரே காவிரி எனத் திருந்தியதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

புராண காலத்துக் கவிதைகளையும் காவியங்களையும் நுணுகி ஆராய்ந்தால், கற்பனைக்குள் மறைந்து கிடக்கும் உண்மையை அறிய முடியும். ஆராய்ச்சி அறிவு அற்ருர்க்கு கற்பனைகளெல்லாம் உண்மையாகவே தோன்றும் இப்படிப்பட்டவர்களை நினைந்து,

அணிசெய் காவியம் ஆயிரங் கற்கினும்
ஆழ்ந்தி ருக்கும் கவியுளம் காண்கிலார்
என்ன கூறிமற் றெங்கன் உணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ளம் எரிவதே!

என மனம் நொந்து பாடினர் பாரதியார்.

# முற்போக்குப் புலவர்கள்

தமிழ்நாட்டில், "முற்போக்கு" அரசியல் வாதிகளில் பலர், என்ன காரணத்தாலோ தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடுவதில்லை. அதன் விளைவாக, முற்போக்குத் துறையில் இலக்கிய வளர்ச்சி பெரிதும் தடைப்பட்டிருக்கிறது.

'தமிழ் இலக்கியங்கள்' என்றாலே, "அத்தனையும் பழமை விரும்பிகளின் பொழுது போக்குக்கான நூல்கள்" என்று அரசியல் முற்போக்காளர்கள் எண்ணுகின்றனர். புராணங்களைக் கவனத்தில் வைத்தே இப்படிக் கூறுகின்றார்கள் போலும்! இவர்கள், சங்க இலக்கியங்களை அறிந்திருந்தால் — ஆராய்ந்திருந்தால், இப்படிச் சொல்ல மாட்டார்கள். இந்தியாவிலுள்ள பிறமொழிகளிலெல்லாம், புராண காலத்தில்தான் இலக்கியங்கள் பிறந்தன. ஆனால், தமிழ்மொழி ஒன்றில் மட்டும் இதிகாச—புராணங்களுக்கு முற்பட்ட காலத்திலேயே, காவியங்களும் கவிதைகளும் தோன்றி இலக்கியக் களஞ்சியத்தை நிரப்பி விட்டன.

நிலப் பிரபுத்துவம், மூடப் பழக்க வழக்கங்கள், வெறி பிடித்த சாதி வேற்றுமைகள், ஆண்டான்—அடிமை மனப்பான்மை ஆகியனவெல்லாம் புராணகாலத்தில்தான் மலிந்தன வென்று சொல்லப்படுகிறது. ஆனால், 'சங்க காலம்' எனப்படும் பண்டை நாளில், இந்தக் குறைபாடுகள் அதிகம் இல்லை. எப்போதோ சில சமயங்களில், யாரோ சிலரிடத்து இத்தகைய குறைகளைக் கண்ட

போதும் புலவர் பெருமக்கள் அவற்றைக் கண்டித்திருக்கின்றனர்.

பசித்தவர்களுக்குத் தானம் செய்தால், கோவில்களைக் கட்டி குளங்களை வெட்டினால், இறந்த பிறகு மோட்சலோகத்தில் இடம் பெறலாம் என்று அந்நாளிலும் சிலர் எண்ணினர். அவர்களை,

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகர்

என்று நையாண்டி செய்தார், புறநானூற்றுப் புலவர் ஏணிச்சேரி முடமோசியார். வள்ளுவரோ, தமக்கே உரிய அன்பு வழியில்,

நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்எனினும் ஈதலே நன்று

என, அந்த அறவிலை வணிகர்களுக்கு அறிவு புகட்டினர்.

"நம்மாலாவ தொன்றுமில்லை; எல்லாம் தெய்வத்தின் செயல்" என்ற உயர்ந்த கொள்கை, உழைக்க மறுக்கும் சோம்பேறிகளுக்கும் உபயோகப்பட்டது. அந்நிலை கண்ட வள்ளுவர்,

தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்

என்ற குறளில், தெய்வ சக்தியினும் அதனால் படைக்கப்பட்ட ஜனசக்தியின் வலிமையே பெரிது என்கிறார்.

மனிதரில், பிறப்பு வழி ஒருவர் பெரியாரென்றும் மற்றொருவர் சிறியாரென்றும் கூறுதல் மடமை என்பது தமிழர் மரபு. கணியன் பூங்குன்றனார் என்ற புலவர்,

பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

என்ற வரிகளில் மனித சமத்துவத்தை வற்புறுத்துகிறார்.

சங்க காலத்தில், தனிவுடைமைக் கொடுமை நாடெங்கும் படர்ந்திருக்கவில்லை. என்றாலும், தன் தன் வாழ்வே பெரிதென எண்ணும் "தன்னல வாழ்வு" அப்போதே தலையெடுக்க ஆரம்பித்து விட்டது. இதன் விளைவாக அன்றாட வாழ்வுக்கே திண்டாடுகின்ற மக்கள் மத்தியில் அடுத்த தலைமுறைக்கும் தேடி வைக்கும் சிறுமதியாளர் பெருகினர். அவர்களின் சுயநலத்தைக் கண்டித்து,

உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவுமெல்லாம் ஓரொக்கும்மே

என்று பாடுகின்றார், நக்கீரனார் என்ற புறநானூற்றுப் புலவர்.

மனிதனுக்குத் தனக்கென வேண்டுவது உண்ண உணவும் உடுப்பதற்கு இரண்டு ஆடையுமே. மற்றவை எல்லாம் சமுதாயத்தின் பொதுச் சொத்தாகவே இருத்தல் வேண்டு மென்பது அப்புலவரின் எண்ணம். இந்த நியதியை மீறி,

துய்ப்பே மெனினே தப்புந பலவே

"அகப்பட்டவற்றை யெல்லாம் நாமே அனுபவிக்க வேண்டும் என்ற தன்னல எண்ணம் தடிப்பேறிவிட்டால் சமுதாயத்தின் பொது நலன்களெல்லாம் அழிந்துவிடும்" என்றும் அப்புலவர் எச்சரிக்கின்றார்.

'புலவர்கள்' என்றாலே, 'மன்னனைப் போற்றிப் புகழ்ந்து பொருள் பெற்று வாழ்ந்தவர்கள்' என்ற தவறான எண்ணம் நிலவி வருகின்றது. புலவர்கள்,

போற்றினும் போற்றுவர் பொருள் கொடாவிடில்
தூற்றினும் தூற்றுவர்

என்ற தனிப்பாடல் ஒன்றும் இந்தத் தவறான எண்ணத்துக்குத் துணைபுரிகின்றது.

தமிழினம் அரசுரிமை இழந்து, தமிழகம் அன்னியருக்கு அடிமைப்பட்ட காலத்தில், ஆதரிப்பாரற்ற புலவர்கள் பொருள் கொடுத்தவரையெல்லாம் போற்றிப் புகழ்ந்திருக்கலாம். ஆனால், மூவேந்தர்கள் தமிழகத்தை ஆண்ட காலத்தில், புலவர்கள் பொருளைவிடக் கடமையையே பெரிதாகக் கருதினர். அவர்கள் புவியாளும் மன்னர்களைப் போற்றியதுண்டு. ஆனால், தவறிழைத்த அரசர்களைத் தூற்றத் தவறியதில்லை. மன்னர்களைக் கொடுங்கோல் வழிச் செல்லவிடாது, செங்கோல்வழி இழுத்துச் செல்வதில் பண்டைப் புலவர்கள் கண்ணுங் கருத்துமா யிருந்தனர்.

மதுரை மருதன் இளநாகனார் என்ற புலவர், பாண்டியன் நன்மாறனை,...........

இல்லோர் கையற
நீ நீடுவாழிய நெடுந்தகை

"இல்லை என்று சொல்லும் ஏழை மக்கள் இல்லாதபடி, நீ நெடுங்காலம் வாழ்வாயாக!" எனக்கூறி வாழ்த்துகிறார். மற்றும்,

கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய புகன்மறவரும்
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
அறநெறி முதற்றே யரசின் கொற்றம்

"பாண்டி வேந்தே! நீ நால்வகைப் படைபலம் உடையை. ஆயினும், நின்வெற்றி அந்தப்படை பலத்தில் இல்லை. அறத்தின் பலத்தையே பொறுத்தது" என்றும் அறிவுரை கூறுகின்றார்.

பண்டைக் காலத்தில் மழை பொய்த்தாலும், பயிர் வளம் குன்றினாலும், அவற்றிற்கெல்லாம் மன்னன் நீதி

பிறழ்ந்தமையே காரணம் என்றெண்ணி அவனை நிந்தித்தனர் மக்கள். புலவர்களேயன்றி, மக்களும் நல்ல அரசியல் அறிவுடையோராக இருந்தனர். செங்கோலுக்கும் கொடுங்கோலுக்கும் உள்ள வேற்றுமை அவர்களுக்கு நன்கு தெரியும். செங்கோலைப் போற்றி, கொடுங்கோலைத் தூற்றும் குணமுடையோர் மக்கள். தங்கள் மன்னவன்,

கோணிலை திரியாக் கோலோன் ஆகுக!

கொடுங்கோல் வழிப்படாத செங்கோலனாகவே என்றென்றும் இருக்க அருள்புரிய வேண்டுமென்று இறைவனை வேண்டினர். தங்கள் மன்னன் ஆளும் நிலம் முழுவதும்,

பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க......

கருணை புரியுமாறும் கடவுளை வேண்டினர்.

பகல் இருளாயினும் ஆகலாம்; வேதம் நெறி பிறழ்ந்தாலும் பிறழலாம். ஆனால், தங்கள் மன்னன் நெறி பிறழக்கூடாது என்றே பழங்காலத் தமிழ் மக்கள் பிரார்த்தித்தனர். இவை யனைத்தும் பண்டைப் புலவர்கள் கூறும் செய்திகளே.

மன்னன் தவறு செய்த பொழுது புலவர்கள் அத்தவற்றினை எதிர்த்துப் போராடிய செய்தி, சங்க இலக்கியங்களில் எத்தனை யெத்தனையோ உண்டு. சங்க காலப் புலவர்கள் தமக்கென வாழாது மனித சமுதாயத்தில் தர்மம் தழைக்கச் செய்யவே வாழ்ந்தனர்.

ஏவலாளர்கூட செங்கோலுக்கு மாறான கொடுங்கோலைப் போற்றும் குணமுடையார் அல்லர். சிலப்பதிகாரத்தில் கணவனை இழந்த கண்ணகியின் வரவை மன்னனுக்குத் தெரிவிக்கும் வாயிற் காவலன்,

வாழியெங் கொற்கை வேந்தே வாழி!
தென்னம் பொருப்பின் தலைவ வாழி!
செழிய வாழி! தென்னவ வாழி!

என்றெல்லாம் தனது மன்னனை வாழ்த்துவோன்,

பழியொடு படராப் பஞ்சவ வாழி!

என, தான் வாழ்த்தும் மன்னவன் பழியறியாதவன் என்று நம்பிக்கையோடு வாழ்த்துகிறான்.

அரசரே யன்றி, தமிழகத்து அமைச்சர்களும் செங்கோல்வழிச் செல்லும் மனமுடையோராய் இருக்கவேண்டுமென்றே புலவர்கள்விரும்பினர். தங்கள் மன்னன், திரியாச் சுற்றமொடு நாடாள்கின்றான் என்றே நம்பினர். ஆம், மன்னனேயன்றி, அவனுக்குற்ற மந்திரிகளும் நெறி பிறழாதவர்கள் என்பது புலவர்களின் நினைப்பு. கம்பரும்,

நலமுதல் நலியினும் நடுவு நோக்கும்

குணமுடையோரே அமைச்சராவதற்குத் தகுதியுடையோர் என்றார்.

சங்க இலக்கியங்களை ஆராயுமிடத்து, பண்டைப் புலவர்கள், மக்களின் அறிவைப் பெருக்கினர்; மன்னர்களை நீதி வழிச் செலுத்தினர்; தாங்களும் நெறியோடு வாழ்ந்தனர். ஆம், சங்க காலப் புலவர்கள், கசடறக் கற்றவர்கள்; கற்க வேண்டியவற்றைக் கற்றவர்கள்: கற்றவற்றை யெல்லாம் வாழ்க்கையில் கடைப் பிடித்தவர்கள். அதனாற்றான், சங்க காலத் தமிழ் இலக்கியங்கள் இந்த இருபதாம் நூற்றாண்டில்கூட மக்கள் முன்னேற்றத்துக்கு வழிகாட்டும் முற்போக்கு இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

# அரசரும் புலவரும்

தமிழகத்தில் எந்த நாளில் அரசு தோன்றியதோ, அந்த நாள் முதற்கொண்டே அரசவைப் புலவர்கள் வாழையடி வாழையாக இருந்து வந்துள்ளனர். தமிழ் மூவேந்தரின் அவைக்களத்தில் முக்காலமும் அறிந்த புலவர்கள் எக்காலத்திலும், இடையருமல் இருந்து வந்திருப்பதைத் தமிழ் இலக்கியங்களால் அறிகிறோம். பேரரசர்களான மூவேந்தர்களே யன்றி, சிற்றரசர்களும் தத்தம் அவைகளில் புலவர்களை அமர்த்தி வந்திருக்கின்றனர்.

அரசவைப் புலவர்கள் இன்ன சமயத்தவராக, அல்லது இந்த சாதியினராக இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இருந்ததில்லை. அரசர் சைவராக இருந்தால், அவரது அவைக்களப் புலவர் சமணராகவோ அல்லது பௌத்தராகவோ இருப்பதும் உண்டு. ஆம், அரசவைப் புலவர் பீடத்தில் அமருவதற்கு புலவரின் அறிவும் ஒழுக்கமும் முக்கிய அம்சங்களாகக் கருதப்பட்டனவே யன்றி, அவரது சாதியோ சமயமோ கவனிக்கப்படவில்லை.

அரசவைப் புலவரின் ஊதியம் அல்லது சன்மானம் இன்னதென அரசர்கள் நிர்ணயித்திருந்ததாகத் தெரியவில்லை. புலவர்கள் வேண்டியபோதெல்லாம் அவர்கள் திருப்திப்படுமளவுக்குப் பொருள் கொடுத்து வந்தனர் அரசர்கள். புலவர்களும், தேவைப்படும்போதன்றி, மற்ற நேரங்களில் கையேந்திப் பொருள் பெறும் கருத்துடையோர் அல்லர். தம்முடைய அன்றாடத் தேவைக்கு அதிகமாக அரசர்கள் பொருள் கொடுத்த போதும்,

பிறருக்கும் அதைப் பகிர்ந்து ஈந்து மகிழ்ந்ததன்றிச் சேமித்து வைக்கும் வழக்கம் புலவர்களிடம் இருந்ததில்லை.

அரசவைப் புலவர், அரசரின் உத்தியோகப் பற்றற்ற ஆலோசகராகவே கருதப்பட்டார். ஆட்சி முறையில் எந்த விஷயத்தைப் பற்றியேனும் சிக்கல் நேர்ந்தால், புலவருடன் ஆலோசித்து அரசன் அதைச் சீர் செய்து கொள்வான். அரசன் கேளாவிடத்தும் அவசியமான போது தாமே வலிந்து சென்று அறிவுரை கூறுவர் அரசவைப் புலவர்கள். இதற்குச் சான்று கூறும் சம்பவங்கள் தமிழ் இலக்கியங்களில் எத்தனை எத்தனையோ!

பண்டைநாட் புலவர்கள் பொது அறிவும் பொருள் அறிவும் நிரம்பப் பெற்றிருந்தனர். பெரும்பாலான புலவர்கள், செடி-கொடி-மரம் முதலிய தாவரங்களின் தோற்றம், வளர்ச்சி, வாழ்வு முதலியவற்றை நன்கு உணர்ந்திருந்தனர். ஊர்வன, பறப்பன, நடப்பன போன்ற உயிரினங்களின் மன இயல்புகளையும் தெள்ளத் தெளிய அறிந்திருந்தனர். மண்ணியல் (Geography), விண்ணியல் (Astronomy) நுட்பங்களைப் பற்றிய விஞ்ஞான அறிவும் உடையவர்களாயிருந்தனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இத்தகைய சிறப்பியல்புகளைச் செந்தமிழ்ப் புலவர்கள் பெற்றிருந்தனர் என்பது வியப்புக்குரியதாகும்.

அரசர், தனித்தனியே பல அமைச்சர்களிடம் பெறக் கூடிய ஆலோசனைகளை அரசவைப் புலவர் ஒருவரிடம் மட்டுமே பெற முடிந்தது! அரசவைப் புலவர், அரசியலாரின் அன்றாட நிர்வாகங்களில் வலிந்து சென்று தலையிடுவது வழக்கமில்லை. அரசர் தமக்குரிய அறவழியினின்றும் தவறுகின்ற சமயங்களில்தான் அரசவைப் புலவர் வலிந்து சென்று அறிவுரை கூறுவர்.

மொழித் துறையில் அரசவைப் புலவரை அரசர்கள் பயன்படுத்திக் கொண்ட முறை பெரிதும் பாராட்டத்தக்க தாகும். சிந்திச் சிதறிக்கிடந்த செந்தமிழ்ப் பாடல்களை யெல்லாம் ஒன்றாகத் தொகுத்து நூலாக்கும் பணியை அரசவைப் புலவர்கள் மூலம் நிறைவேற்றினர் அக்கால அரசர்கள். காலமாறுபாடு காரணமாக ஏடுகளிலுள்ள பல சொற்கள் வழக்கிழந்துவிடுவது இயற்கை. அப்படி வழக் கிழந்த சொற்களால் தமிழ் இலக்கியங்கள் வாழ்விழந்து விடக் கூடாதென்ற நல்லெண்ணத்துடன் பழைய இலக்கிய நூல்களுக்கு உரை இயற்றவும் செய்தனர். மற்றும், அரசர்கள் தமக்கு ஓய்வு கிடைத்த போதெல் லாம் அவைக்களப் புலவரிடம் இலக்கியப் பயிற்சி பெற்ற னர்; இலக்கிய நயங்கள் பற்றியும் உரையாடி இன்புற் றனர்.

அரசர்கள் தமது அவைக்களப் புலவர்களிடம் வைத் திருந்த மதிப்பு அளவிடற்கரியது. இதற்கு இலக்கியங் களில் எண்ணற்ற சான்றுகள் உண்டு.

அரசரும் அமருவதற்கு உரிமையற்றது முரசுகட்டில். ஆகவே, அதில் பிறர் அமருவது அரச நிந்தனையாகக் கருதப்பட்டு மரண தண்டனை விதிப்பது மரபு. அத்தகைய தனி மதிப்புள்ள முரசு கட்டிலில் **மோசிகீரனர்** என்ற புலவர் ஒரு நாள் வெளியிற் சென்று அலுத்து வந்த காரணத்தால் படுத்து உறங்கிவிட்டார்! உறங்கிய புலவர் சிறிது நேரத்திற்குப் பின் கண்விழித்துப் பார்த்தார். அவர் கண்ட காட்சி அவருக்கே திகைப்பை அளித்தது. உறங்கிக் கொண்டிருந்த அவைக்களப் புலவருக்கு அரசர் வெண்சாமரம் வீசிக் கொண்டிருந்தார்! ஆம்; தவறு செய்த புலவரின் தலையை வெட்டி வீழ்த்த வேண்டிய வேந்தனின் கைகள் வெண்சாமரை வீசின.

தான் உண்ணுவதற்கெனத் தேடிக் கொணர்ந்த உயிர் வளர்க்கும் நெல்லிக் கனியை கவியரசி ஔவை பெருமாட்டிக்கு ஈந்து மகிழ்ந்தான் அதியமான் என்னும் சிற்றரசன்.

அரசவைப் புலவர் தம்மைப் புகழ்ந்து பாடுவதைப் பெரிதும் விரும்பினர் முன்னைய அரசர்கள். புலவரிடம் தாங்கள் வாழ்த்துப் பெறாத நாளெல்லாம் வாழாத நாட்கள் என்றே கருதினர்.

தலையாலங்காலத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போருக்குப் புறப்படுங்கால், "யான் மாற்றாருடன் நடத்தும் மறப்போரில் தோற்றுப் போவேனாயின், புலவர்கள் என்னைப் பாடாது விலக்கட்டும்!" என்று வஞ்சினம் கூறினான். ஆம், தமிழ்வேந்தர் போர்முனையில் வெற்றியை விரும்பியது நாடாள்வதற்காக மட்டுமன்று; நாவன்மை மிக்க புலவர்களின் பாராட்டைப் பெறுவதற்குமாகும்.

அரசவைப் புலவர், அரச குடும்பத்தினரில் ஒருவராகவே கருதப்பட்டார். அரசரேயன்றி, அரச குடும்பத்தினரில் எவரும் தாம் வேறு, அரசவைப் புலவர் வேறு என்று எண்ணியதில்லை. அரசியாருக்கும் அரசருக்கும் நேரும் ஊடல்களைத் தீர்த்து அவர்களிடையே உறவை வளர்த்த புலவர்கள் பலரைப் பற்றி இலக்கியங்களில் அறிகிறோம்.

போர் முனையில் அரசருடன் இருப்பதும் புலவரின் கடமையாகக் கருதப்பட்டது. தமது மன்னரின் வெற்றியையும் மாற்றாரின் வீழ்ச்சியையும் பாடுவதில் அரசவைப் புலவருக்குத் தனி மகிழ்ச்சியுண்டு. "கலிங்கத்துப் பரணி" என்ற ஜெயங்கொண்டார் பாடிய போர்க்கள இலக்கியமே இதற்குச் சிறந்த சான்று.

தமது அரசர் போர்முனையில் வெட்டுண்டு இறப்ப ரேல், அவரது பிரிவாற்ருமல், அரசவைப் புலவர் வடக் கிருந்து (உண்ணு நோன்பிருந்து) உயிர் விடுவதும் உண்டு.

அறவழியில் நின்று நாடாளும் வேந்தன் அவை யையே விரும்புவர் அக்காலப் புலவர்கள். தமது அரசன, அரசு நெறி பிழைப்பானுயின் அதை எடுத்துக் காட்டித் திருந்தும்படி தூண்டுவர். திருந்த மறுப்பின், "அரச வைப் புலவர்" என்ற பட்டத்தைத் துறப்பதோடு அவ னது நாட்டை விட்டும் வெளியேறி விடுவர்.

சோழன் குலோத்துங்கன், தமது கருத்தை ஏற்கக் கம்பர் மறுத்தமைக்காக, "புலவர், போற்றினும் போற்று வர் பொருள் கொடாவிடின் தூற்றினும் தூற்றுவர்" என இழிவு படுத்திக் கூறியபோது, 'மன்னவனும் நீயோ! வள நாடும் உன்னதோ! என்னை விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ?" என்று வெகுண்டுரைத்துப் பட்டத் தைத் துறந்ததோடு, சோழ நாட்டை விட்டே கம்பர் வெளியேறிய செய்தி நாடறிந்ததாகும்.

பண்டைப் புலவர்கள் ராஜ தந்திரத்தில் சிறந்து விளங்கினர். எனவே, அவசியமேற்படு மிடத்து தமது அரசர் சார்பாகப் பகையரசரிடம் தூது செல்வதும் உண்டு. அதியமான் என்னும் அரசரின் சார்பாக ஔவைப் பிராட்டியார், தொண்டைமான் என்ற அரசரிடம் தூது சென்றது இதற்கு எடுத்துக் காட்டாகும்.

அரசவைப் புலவர்கள், தம்மை ஆதரிக்கும் அரசர் களையே யன்றி, அவருக்குப் பகைவரல்லாத பிற தமிழ் வேந்தர்களின் ஆற்றலையும் அரசு நெறியையும் போற்றிப் புகழ்வதும் உண்டு. ஒரு அரசரின் அவைக்களப் புலவ ரென்பதற்காகத் தமது அறிவையும் ஆற்றலையும் அந்த அரசருக்கே உரிமையாக்கி விடுவதில்லை. இமை எங்கிருக்

தாலும் கண்டிப்பதும் திறமை எங்கிருந்தாலும் பாராட்டு வதும் அவர்தம் கடமையாக இருந்து வந்தது. சுருங்கச் சொன்னால், அக்காலப் புலவர்கள், அரசர்களால் ஆதரிக்கப்பட்டாலும் அவர்கள் குடி மக்கள் சார்பில் பேசுவதையே தமது கடமையாகக் கொண்டிருந்தனர். மக்களுக்குத் தீங்கிழைக்கும் மன்னனை மதிப்பது புலவர் மரபன்று.

பண்டைத் தமிழ் வேந்தர், ஒருவருக்கு மேற்பட்ட புலவர்களையும் தமது அவையில் அமர்த்திக்கொண்டதுண்டு. புதுப் புதுப் பாடல்கள் இயற்றும் புலவர்களுக்குப் பொன்னும் மணியும் தந்து அரசர் பூரிப்படைவர் "பட்டினப் பாலை" இயற்றிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற புலவருக்குப் பதினாறு நூறாயிரம் பொற்காசுகள் பரிசு தந்தான் கரிகால் வளவன். பதிற்றுப்பத்துள் இரண்டாம் பத்தைப் பாடிய குமட்டூர்க் கண்ணனாருக்கு 500 ஊர்களை அன்பளிப்பாகத் தந்தான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். பதிற்றுப்பத்துள் ஐந்தாம் பத்தைப் பாடித் தமக்கு அரசு நெறி புகட்டிய பரணர் என்னும் புலவருக்குக் 'குட்டுவன் சேரல்' என்ற தனது மகனையே காணிக்கையாகத் தந்தான் கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்.

பாண்டிவேந்தன் ஒருவன், இரண்டாம் குலோத்துங்கனுக்கு மணம் செய்வித்துத் தன் மகளுக்காகச் சீதனச் சொத்துக்கள் தந்தபோது புகழேந்திப் புலவரையும் சேர்த்துக் கொடுத்ததாக வரலாறு கூறுகின்றது.

★

# கோயில் இல்லா ஊர்

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ருள் ஔவை மூதாட்டி.

"அடடா, இப்படியும் சொல்லி மூட நம்பிக்கையை வளர்க்கலாமா?

"ஆஸ்பத்திரி இல்லா ஊரில்...பள்ளியில்லா ஊரில்... ஆறு இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்றல்லவோ ஔவை மூதாட்டி சொல்லியிருக்க வேண்டும்" என்று கூறி, தீட்டிய மரத்திலேயே கூர் பார்ப்பதுபோல் ஔவையாருக்கே அறிவு போதிக்கின்றனர் சில அன்பர்கள்.

கவிதையின் குறிக்கோளே, அது தோன்றிய காலத்தின் சூழ்நிலையை வைத்தே நிச்சயிக்க வேண்டும். அப்படிக்கின்றி, படிப்போரின் காலத்துச் சூழ்நிலைக்குச் சாதகமாக படிக்கப்படும் பாடல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று வாதாடுவதும், அப்படி எழுதப்படவில்லை என்பதற்காக பண்டைக் கவிஞரை வசை பாடுவதும் மூடத்தனம் மட்டுமல்லாமல், முரட்டுத்தனமுமாகும்.

பண்டை நாளில், கோயில்கள் மக்களின் அகத் தூய்மைக்கே அன்றி, புறத் தூய்மைக்கும் பெரிதும் பயன் பட்டன. தமிழ் நாட்டிலுள்ள மிகப் பழைய காலத்துக் கோயில்களெல்லாம், ஆற்றேரங்களிலும் மலைகள் மீதும் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இறை வழிபாட்டில் நம்பிக்கையுடையோர், விடியற்காலையில் படுக்கை

விட்டெழுந்து, ஆற்று நீரில் மூழ்கிக் குளித்து உடலை யும் உடையையும் தூய்மையாக்கிக் கொள்வர். புறத் தூய்மை பெற்ற பின்னர், அகத் தூய்மை பெறுவதற் காக நல்ல நல்ல எண்ணங்களை எழுப்புகின்ற ஞான மார்க்கப் பாடல்களைத் தமிழ்ப் பண்ணோடு பொருந்தப் பாடிக்கொண்டு ஆலயங்களைச் சுற்றி வருவர். இது ஆற்றோரத்தில் வாழ்ந்த மக்களின் ஆலய வழிபாட்டு முறையாகும்.

அப்படியே, மலைக்கோயில் உள்ள ஊர்களில், தெய்வ பக்தி உள்ளவர்கள் விடியற்காலையில் ஆற்று நீரிலோ, மலை அருவியிலோ, இரண்டுமில்லா ஊராயின் வீட்டிலோ குளித்துவிட்டு, அழுக்கற்ற ஆடை அணிந்து, பாவம்—பழுதற்ற சிந்தனைகளை எழுப்பும் பாடல்களைப் பாடிக் கொண்டு இறை வழிபாட்டுக்கென மலைமேல் ஏறுவர்; அல்லது பல மைல் சுற்றளவிற்குப் பரந்து கிடக்கும் மலையடிவாரத்தைச் சுற்றி வருவர்.

பாடுவோர் வாயினிக்கும், கேட்போர் செவியினிக்கும் தீந்தமிழ்ப் பாடல்களைப் பாடிக்கொண்டு, விடியற்காலையில் இளங் குளிர்காற்று உடலுக்கு இன்பந்தர அணியணி யாக மலையேறும் அல்லது மலையடிவாரத்தைச் சுற்றி வரும் பழங்காலப் பக்தர்களை, அழுக்கு நெஞ்சற்ற மக்கள் இன்றும் தம் அகக் கண்களால் காணலாம்.

கோயிலைப் பன்முறை சுற்றி வருவதும், இறை வன் முன்பு சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழு வதும், தெய்வ பக்திக்காக மட்டுமன்றி, தேகப் பயிற்சிக் காகவும் வகுக்கப்பட்ட திட்டங்களாகும்.

ஔவை தோன்றி, 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று பாடல் எழுதிய காலத்தில் 'ஸ்தல

யாத்திரைகள் காரணமாக அன்றி, ஒரு ஊர் மக்கள், மிகத் தொலைவிலுள்ள மற்றோர் ஊருக்குச் செல்லும் வழக்கம் இருக்கவில்லை.

அந்தக் காலத்தில் மாட்டு வண்டியும், குதிரையும் தான் போக்குவரத்து சாதனங்கள். ஆனால், அந்தச் சாதனங்களை, உல்லாசச் சவாரிக்கும் ஊர் சுற்றிப் பார்ப்பதற்கும் அன்றி, ஸ்தல யாத்திரைக்காக உபயோகிக்கக் கூடாதென்பது சமய சம்பிரதாயம். ஆகவே, யாத்திரீகர்கள் காண விரும்பும் ஸ்தலம் பல நூறு மைல்கள் தொலைவில் இருப்பினும், பாதசாரிகளாகவே பல வாரங்கள் அல்லது பல மாதங்கள் நடந்து செல்வது வழக்கம். அந்நாளில் ஸ்தல யாத்திரீகர்கள் தனியே செல்வதில்லை. பலபேராகக் கூட்டம் சேர்ந்து சென்றனர். அப்படிச் செல்வதால் வழி நடக்கும் களைப்புத் தெரியாது; வழிப்பறிக் கள்வரின் பயம் இருக்காது. யாத்திரீகர்கள் வழியிலுள்ள ஊர்கள் தோறும் தங்கித் தங்கிச் செல்வர். அதனால், தங்கும் ஊரில் உள்ள தமிழ் மக்களோடு யாத்திரீகத் தமிழர்கள் உரையாடவும் உறவு கொள்ளவும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. தமிழகத்தின் வடகோடியிலுள்ள தமிழர்கள் தென் கோடியிலுள்ள குமரியில் தீர்த்தமாடச் செல்வதும், தெற்கெல்லையிலுள்ள தமிழர்கள் வடகோடியில் வேங்கட மலைமீதுள்ள நெடுமாலைத் தரிசிக்கப் போவதும் வழக்கம். இதனால், வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட தமிழ் நிலம் முழுவதும் தமிழ் மொழி தழைக்கவும், தமிழர்கள் அடிக்கடி சந்தித்துத் தொடர்பு கொள்ளவும் ஸ்தல யாத்திரை பெரிதும் துணை புரிந்தது.

இந்நாளில், பணம் ஒரே இடத்தில் தேங்கிக் கிடக்காமல், நாடு முழுவதும் சுற்றுவதற்கும் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுவதற்கும் பாங்குகள் துணைபுரிந்து வருகின்

றன. ஆனால், ஔவை மூதாட்டி "கோயிலில்லா ஊரில்..." என்ற பாட்டெழுதிய காலத்தில் நாட்டில் பாங்குகள் கிடையா. ஆகவே, பணம் ஒரே இடத்தில் தங்கியிராமல் தமிழகம் முழுவதற்கும் பரவுவதற்கும், அதன் மூலம் வாணிபம் வளருவதற்கும், பக்தி காரணமாக நிகழ்ந்த ஸ்தல யாத்திரைகளே பெரிதும் பயன்பட்டன.

தமிழ மக்களிடையே ஒரே விதமான பண்பாடும், பழக்க வழக்கங்களும் நிலவுவதற்குக் கூட ஸ்தல யாத்திரை நன்கு பயன்பட்டது.

இந்த ஸ்தல யாத்திரைக்கு மக்களை ஊக்கப் படுத்தி உற்சாக மூட்டும் சாதனங்களாக இருந்தன ஸ்தல புராணங்கள்.

கோயில்கள் தோன்றியிராவிடில், ஸ்தல புராணங்கள் எழுதப்பட்டு ஸ்தல யாத்திரைகள் நிகழ்ந்திராவிடில், இன்று நாம் காணும் சிறந்த நகரங்களை இழந்திருப்போம். திருத்தணி, திருப்பதி, திருக்காளத்தி, பழனி, திருவரங்கம் காஞ்சி, திருவண்ணாமலை, திருவாரூர் போன்ற நூற்றுக் கணக்கான நகரங்கள் அங்குள்ள கோயில்களை யொட்டியே உருவாயின என்பதை மறக்கக் கூடாது.

ஏனைய மாகாண மக்களை விட தமிழர்கள் அதிக நாகரீக முள்ளவர்களாகவும், கலையறிவுடையவர்களாகவும் இருப்பதற்குக் காரணம் இந்நாட்டில் கோயில்கள் பயன் படுத்தப்பட்ட முறையே ஆகும்.

கோயில் சுவர்களில் கல்வெட்டுச் செய்திகள் இருப்பதைக் காணலாம். புலவர்களின் தொண்டு, அரசர்களின் வீரம், வள்ளல்களின் கொடை ஆகிய சிறப்புக்குரிய செய்திகள் எல்லாம் அந்தக் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டிருப்பதைப் படிக்கலாம். வரலாற்றுச் செய்திகளை அறிய

'கேள்வி'யும் ஒரு சாதனமாகும். அதாவது, வாய்வழியாகச் சொல்லி செவி வழியாகக் கேட்பது. ஆனால், அதில் உண்மையை மறைப்பதற்கும், பொய்யைப் புகுத்துவதற்கும் இடமுண்டு. வரலாற்றுச் செய்திகளை ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்தாலும் அதில் இடைச்செருகல் ஏற்படச் சந்தர்ப்பமுண்டு. ஆனால் கல்வெட்டுச் செய்திகளில் இந்தத் தவறுகள் ஏற்படுவதற்குச் சந்தர்ப்பம் இல்லையல்லவா!

மற்றும், வரலாற்றுச் செய்திகள் ஓலைச் சுவடிகளில் இருந்தால், அந்தச் சுவடிகள் இருக்கும் இடத்தைத் தேடிப் பிடித்து வாங்கிப் படிக்க வேண்டிய கஷ்டமிருக்கும். கோயில் சுவர்களில் உள்ள கல்வெட்டுச் செய்திகள், யாரும், எந்த நேரத்திலும், எவர் தயவுமின்றிப் படித்துத் தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும்.

ஆம்; தமிழ் நாட்டுக் கோயில்கள் ஆசிரியர் இல்லாமலே, பொய் கலவாத வரலாற்றுச் செய்திகளைக் கற்பிக்கக் கூடிய சரித்திரப் பள்ளிகளாகத் திகழ்ந்தன.

நீதி நூற்கள் எழுதிய ஔவை காலத்தில், ஸ்தல யாத்திரீகர்கள்—நாடு விட்டு நாடு செல்லும் அகதிகள்—தூர தேசங்களுக்குச் செய்தி கொண்டு செல்லும் தூதர்கள்—ஆதரிப்பாரற்ற அங்கவீனர்கள் ஆகியோருக்கு இலவசமாக உண்வளிக்கும் அன்ன சத்திரங்களாகவும் கோயில்கள் பயன்பட்டு வந்தன.

ஊர்ப் பஞ்சாயத்து சபைக் கூட்டம், கல்வி கற்பிக்கும் பள்ளிக்கூடம், இசையரங்கு, நடன அரங்கு ஆகிய ஊருக்குப் பொதுவான நிகழ்ச்சிகள் எல்லாம் ஆலய மண்டபங்களிலே நடைபெற்றன.

அன்னியர் படையெடுக்கும் காலத்தில், போர் முனை புகச் சக்தியற்ற முதியோர்—பெண்டிர்—குழவிகள் ஆகியோர் அடைக்கலம் புகும் பாதுகாப்பு ஸ்தலங்களாகவும் ஆலயங்கள் பயன்பட்டன.

அந்நாளில், இவ்வளவு நலன்களும் கோயில்கள் மூலம் கிடைத்ததால் தான் "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று ஔவையார் கூறினார்.

# வீரத் தாய்

பாண்டி நாடு வீரத்திற்குப் பெயர் பெற்றது. அந் நாட்டுக் குடிமக்கள் பகைபயமின்றி வாழ்ந்து வந்தனர். ஆனால், பகை யறியாப் பாண்டி நாட்டில் ஒருநாள் பகை தோன்றிவிட்டது. மாற்றானின் படைகள் பாண்டி நாட்டுத் தலைநகரின் மதிற்புறத்தைச் சூழ்ந்துவிட்டன. பகை மன்னனின் போர்ப்பறை கேட்டு, "வந்தது போர்!" என்று வீரமறவர் தோள்களைத் தட்டி ஆரவாரித்தனர். பாண்டி நாட்டுக் குடிமக்களோ, அறநெறி பிசகாது ஆட்சி புரியும் தங்கள் அரசனுக்குற்ற பகையை அழிக்கப் படை திரண்டு போர் புரிந்தனர்.

போர், பல நாட்கள் நடந்தது. எனினும். முடிவு பெற வில்லை. வழக்கம் போல் ஒருநாள் அதிகாலை மாற்றானின் பறையொலி கேட்டது. அன்றைய போருக்கு வீட்டுக் கொரு ஆள் வெளிப்பட வேண்டுமென அரசரின் ஆணை யும் வீதிதோறும் அறிவிக்கப்பட்டது.

மறவர் குடியைச் சேர்ந்த பெண்ணொருத்தி, மாற்றா னின் பறையோசையையும், மன்னவனின் ஆணையையும் காதால் கேட்டாள். அவளது தந்தை முந்தா நாள் போரில் யானையுடன் சமர் புரிந்து அதனால் கொல்லப் பட்டான். நேற்றைய போரில் அவளது கணவன் மாற்றா னுடைய படைகளின் அணிவகுப்பைப் பிளந்து கடும்போர் புரிந்தபோது கொல்லப்பட்டான். இன்றும் பகைவனின் பறையோசை அவளது உள்ளத்தை உறுத்தியது. அரசனது ஆணையும் அவளது கடமையை உணர்த் தியது.

அவள் குடும்பத்தில் அவளது ஒரே புதல்வனைத் தவிர வேறு ஆண் மகனில்லை. அவனும் என்றுமே போர் முனையைக் கண்டறியாத இளம் பாலகன். என் செய்வாள்? மாற்றானின் போர் முரசோ மறவர் குலத்தின் மானத்தை அறைகூவுகின்றது. அந்த அறைகூவலைக் கேட்டு அவள் ஆத்திரம் கொண்டாள்.

இந்நிலையில், தோழர்களுடன் வெளியே சென்றிருந்த அவளது மகன் இல்லம் திரும்பினான். அவன் தன் தாயின் கோபத்தால் சிவந்த கண்களிலிருந்து சிந்தும் நீர்த் துளிகளைக் கண்டு திடுக்கிட்டான். தன்னை ஈன்றாளின் துயருக்குக் காரணம் இன்னதென அறிய அவன் விரும்பினான்.

மகன்: அன்னையே, வேல்வரினும் கண்ணிமைக்காத வீரமறவர் குலத்தைச் சேர்ந்த தாங்கள், கண்ணீர் சிந்தக் காரணம் என்ன?

தாய்: ஆ, என் வீரச் சிங்கமே! என் துயரைத் தீர்க்க இளம் பிள்ளையாகிய நீ வல்லவனோ!

மகன்: ஈன்றெடுத்த தாயே, உமது மனத்துயருக்குள்ள காரணம் எத்தகையதாயினும் அதைப் போக்க இப்போதே, இக்கணமே தயார். அஞ்சாமல் சொல்லும்.

தாய்: மகனே! பாண்டி நாட்டைப் பகைவன் முற்றுகையிட்டு பல நாட்களாகின்றன. கூற்றுவனுக்கு உயிர் கோடி கொடுத்தாயிற்று. இன்னமும் பகைவனை முறியடித்தபாடில்லை. முந்தா நாள் போரில் உன் பாட்டனும், நேற்றைய போரில் உன் தந்தையும் வீரப்போர் புரிந்து விண்ணுலகெய்தினர். இன்றும் மாற்றானின் போர்முரசு மறவர் நாட்டில் ஒலிக்கக் கேட்கிறேன். இன்றைய போருக்கு வீட்டுக்கொரு ஆள் வேண்டுமென்று

மன்னனது ஆணையும் வீதியில் அறிவிக்கக் கேட்டேன். ஆ, என் செல்வமே! நான் என் செய்வேன்? போருக்கனுப்பும் பருவமுடைய ஆண்மகன் நமது இல்லத்தில் இருப்பின் அனுப்பி மகிழ்வேன். இல்லை. ஆகவே, வருந்துகின்றேன்.

மகன் : அன்னையே! நீ பாக்கியசாலி. இதோ உன் வீரப் புதல்வன் இருக்கின்றேன். மாற்றானின் அறைகூவலை ஏற்று, மன்னனின் ஆணையை மதித்து, இப்போதே போர்க்களம் புகுகின்றேன்.

தாய் : அச்சமறியாத என் ஆண் சிங்கமே! உன் வீரத்தைக் கண்டு மகிழ்கின்றேன். ஆயினும், நீயோ சிறு பிள்ளை. மாற்றானின் படைபலம் எங்கே; நீ எங்கே! வேலொழுகும் போர்க்களத்தில் பாலொழுகும் பாலகனை இப் நீ போராட வல்லவனோ?

மகன் : தாயே! நன்று, நன்று நின் வார்த்தை. வீரத்திற்கு வயது கணக்குண்டோ? அடிமைத்தனம் இன்னதென்று அறியாத பாண்டி நாட்டு மக்களை அடிமைப் படுத்த முயல்பவரை அழிக்காமல் விடுவதா? பொருநரைத் தேய்த்துப் போரற்றிருந்த பாண்டி நாட்டின் வாயிலில் போர் வந்துவிட்ட தென்றால், மறவர் குலத்தவர் பொருந்தி வாழ்வரோ? நான் என்றும் இறக்கக் கூடியவனே. ஆனால், யான் பிறந்த மறவர் மரபோ அழிவற்றது; பழியற்றது. ஆகவே, அழிவற்ற என் மரபின் மானத்தைக் காக்க அழியக் கூடிய என் உடலை அர்ப்பணிக்க நேரினும் அஞ்சேன். மற்று, அதை விரும்பிப் பெறுவேன். வீரனுக்குத் தோல்வி ஏது? மரணந்தான் ஏது? நமது பகைவர் பாண்டி நாட்டுத் தலைநகரின் மதிலை அழிக்கலாம். அதில் வாழும் மக்களின் மானத்தை அழிக்க முடியாது. நேற்றும், அதற்கு முன் தினமும் என் தந்தை

யும் பாட்டனும் சென்ற போர்க்களத்திற்கு இதோ யானும் செல்கின்றேன்.

தாய்: என் கவலையைத் தீர்த்த கண்மணியே! உன் வீரத்திற்கு மெச்சினேன். விருப்பத்திற்கும் இசைந்தேன். ஆனால், ஒன்று சொல்கிறேன், கேள்! பகைவனின் படையைப் பிளந்து சென்று பின்வாங்காது போர் புரிந்து வெற்றிகொள். இல்லையேல், மாற்றான்விடும் வேலாயுதம் உன் மார்பை முத்தமிடட்டும். மறவர்குலத்தின் வீரம் விளங்கப் போர் புரிவாயாக. தமிழன்னை உன்னைக் காப்பாள்.

அன்னையின் ஆசி பெற்று மகன் போர்க்களம் புகுந்தான். காலையில் போர்க்களம் சென்ற மகனின் முடிவைப் பற்றி மாலையில் தாய்க்குச் செய்தி கிடைக்கிறது. அவள் மகன் போர்க்களத்தில் பின் வாங்கி ஓடுகையில், புறமுதுகில் அடிபட்டு மாய்ந்தான் என்பதே அச்செய்தி.

இந்த அவச் சொல்லைக் கேட்டு அவள் மனம் பதறியது. சினங்கொண்ட அவள் சீறி எழுந்து, "இதோ, போர்க்களம் செல்வேன். அங்கு என் மகன் புறமுதுகில் அம்புபட்டு மாண்டு கிடப்பது உண்மையாயின், அந்தப் பேடி மகனுக்குப் பால் கொடுத்த என் முலையை அறுத்தெறிவேன்" என்று சபதம் செய்து வளையல் அணிந்த கையில் வாளேந்திப் போர்க்களம் புகுந்தாள்.

போர்க்களத்தில் மகன் மார்பில் அம்புபட்டு மல்லாந்த வண்ணம் மண்மேல் படுத்திருப்பதைக் கண்டாள். தன்னுயிர் கொடுத்துத் தமிழரின் மானத்தைக் காத்த வீர மகனே அங்கு அவளுக்குக் காட்சி அளித்தான்.

அங்கிலே கண்டு அந்த வீரத்தாயின் உள்ளம் பூரித்தது. மாண்டு கிடந்த மகனை மார்புறத்தழுவி முத்தமிட்டாள். அவனை ஈன்றபொழுது கண்டு களித்ததைவிட, மார்பில் அம்புபட்டு மாண்டு கிடந்த காட்சியே அவள் மனதுக்கு உவகை யளித்தது.

இனறைய தமிழ்ப் பெண்களுக்கு வழிகாட்டி மறைந்த அந்த வீரத்தாயின் புகழ் வாழ்க!

---

குறிப்பு:— புறநானூற்றில் 278, 279 பாடல்களைத் தழுவி எழுதியது.

# மங்கல மரபு

தமிழ் இனத்தவரிடையே நிலவிவரும் பழக்க வழக்கங்கள் பலப்பல. அவை ஒவ்வொன்றும் தமிழ் இனத்தவரின் பழம் பெருமையை விளக்குவனவாகும். பழக்க வழக்கங்கள் என்றாலே, அவை அனைத்தும் மூட நம்பிக்கையிலிருந்து முளைத்தவையே என்று முடிவு கட்டி விடுகின்றனர் சிலர். இது தவறு. எந்தக்காலத்திலும், எந்த ஒரு செயலும், அவசியத்தை முன்னிட்டே தோற்றுவிக்கப் பெறுகின்றது. ஆனால், அவசியம் இல்லாதபோதும் வெறும் பழக்கத்திற்கு அடிமைப்பட்டு அதை அனுஷ்டிப்பதால்தான் அது மூட நம்பிக்கையாகிறது. இன்று தமிழர் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களில் சில அவசியமற்றனவாகவும், தள்ளத் தக்கனவாகவும் இருக்கலாம். ஆனால், ஆதியில் அவசியத்தை முன்னிட்டே அவை தோன்றின. மேலும், பண்டைய பழக்க வழக்கங்கள் எல்லாமே இன்றைக்குத் தேவையற்றவை என்று கூற முடியாது. அவற்றில் தேவைப் படுவனவும் பல உண்டு.

தமிழர் வாழ்க்கையோடு நீக்கமற நிறைந்துள்ள பழக்க வழக்கங்களின் வரலாற்றை ஆராய வேண்டும். எந்த ஒன்றையும், அது பழமையாகட்டும், அல்லது புதுமையாகட்டும்; ஆராய்ச்சியின்றி ஏற்பதோ அல்லது மறுப்பதோ அறியாமையாகும். இந்தக் கண்ணோட்டத்துடன் தமிழர் பழக்க வழக்கங்கள் சிலவற்றை ஆராய்வோம்:

பார்ப்பது, படிப்பது, கேட்பது ஆகிய எல்லாம் அமங்கலத்தை நினைவூட்டாத மங்கலமாகவே இருக்கவேண்டும்

என்று கருதினர் நமது முன்னோர். இந்த நல்ல எண்ணத்தை யொட்டி எழுந்த பழக்க வழக்கங்கள் பல.

தமிழ்ப் புலவர்கள், கவிதையோ காவியமோ எழுதப் புகுந்தால், துவக்கச் சொல்லை மங்கலச் சொல்லாக அமைப்பது மரபு. உலகம், திங்கள், திரு, சீர் ஆகியன வெல்லாம் இலக்கியங்களில் வரும் மங்கலச் சொற்களாகும்.

"உலகு, ஆதிபகவனை முதலாக உடைத்து" என்பது திருக்குறளின் முதல் வாக்கு.

"உலகம் உவப்ப" என்பது, திருமுருகாற்றுப்படையில் முதலில் வரும் திருவாக்கு.

"உலகம் யாவையும்" என்பது, கம்ப ராமாயணத்தின் கருச்சொல்.

"உலகெலாம்" என்பது, பெரிய புராணத்தின் துவக்க மொழியாகும்.

பண்டைப் புலவர்கள் உலகத்தின் ஒரு பகுதியாகவே தாங்கள் வாழும் நாட்டைக் கருதினர். உலக நன்மையை அடிப்படையாகக் கொண்டே தம்முடைய நலத்திற்கு, தாம் பேசுகின்ற மொழியின் வளத்திற்கு, தம்மைப் பெற்றெடுத்த நாட்டின் வாழ்வுக்குப் பாடுபட்டனர். ஆகவே, 'உலகம்' என்ற ஒப்புயர்வற்ற சொல்லை மங்கலச் சொல்லாக்கினர்.

தம் அன்றாட வாழ்க்கையில் எந்தச் செயலில் ஈடுபட்டாலும் 'இறை', உணர்வோடு அதாவது தெய்வ சிந்தனையோடு ஈடுபடுவது பண்டைத் தமிழரின் வழக்கம். இன்றுகூட, இந்தப் பழக்கம் எல்லாத் தமிழரிடத்தும் இல்லாவிடினும், பெரும்பாலோரிடம் இருக்கக் காணலாம். உண்ணப் புகும்போதும், உறங்கப் படுக்கும்போதும்,

விழித்து எழும்போதும் தாம் வழிபடும் தெய்வத்தின் பெயரைச் சொல்லுவது சர்வ சாதாரணம். ஆம்; 'உலகம்' என்பதைப் போலவே, கடவுள் பெயரைக் குறிக்கும் சொல்லையும் மங்கலச் சொல்லாகவே கருதுவது தமிழர் மரபு. சாதாரணமாக, கடிதம் எழுதும்போதுகூட, துவக்கத்தில் கடவுட் பெயரை எழுதுவதை இன்றளவும் காண்கிறோம். சிலர், பிள்ளையார் சுழி, அதாவது கடவுட் சின்னத்தை வரைவதும் உண்டு. இந்தப் பழக்கம் உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்; அதைத் தூய்மைப்படுத்தும் பரம்பொருளோடு தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும் என்ற நல்ல நோக்கத்தை ஒட்டி எழுந்ததாகும்.

அமங்கலச் சொல்லானது வழுக்கியும் வாயில் வரக் கூடாது என்பது தமிழருடைய வழக்கம்.

ஒழுக்க முடையார்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்

என்பது, வாய்மொழிக்கு வள்ளுவர் வகுத்த வரம்பு.

குடும்பத்தில் யாரேனும் ஒருவர் இயற்கை எய்திவிட்டால், அதைப் பிறருக்குக் கடித மூலமோ, அச்சுத்தாள் மூலமோ தெரிவிக்கும்போது, 'இறந்துவிட்டார்'—'செத்து விட்டார்'—'மாண்டு போனார்' என்பன போன்ற அமங்கலச் சொற்களால் அறிவிப்பது மரபன்று. இயற்கை எய்தியவர் சைவராயின், 'சிவலோக பதவியடைந்தார்' என்றும், வைணவராயின், 'வைகுந்த பதவி அடைந்தார்' என்றும், அல்லது பொதுப்படையாக 'இறைவனடி சேர்ந்தார்' என்றும் குறிப்பிடுவதே வழக்கம். இப்பழக்கம் பகுத்தறிவுக்கு முரணானதென்று கூறலாம். ஆனால், பகுத்தறிவு—பண்பாடு ஆகிய இரண்டும் ஒரு ரூபாயின் இரண்டு பக்கங்களைப் போன்றவை. ரூபாயின் ஒரு பக்கம்

நன்ருக இருப்பினும், மற்ெருரு பக்கம் முற்றும் தேய்ந்து போயிருப்பின், அது செல்லுவதில்லே. அதுபோல, மனித வாழ்க்கைக்குப் பகுத்தறிவு, பண்பாடு இரண்டுமே தேவைப்படுகின்றன. பகுத்தறிவு மட்டும் பேசிப் பண்பாட்டை மறப்பதோ, அல்லது பண்பாட்டை மட்டும் வற்புறுத்திப் பகுத்தறிவை இழப்பதோ மதியுடையார் செயலன்று.

இல்லம் தேடி வரும் பிச்சைக்காரர்களுக்கு, 'இல்லே' என்று சொல்லாமல் ஈவது தமிழர் வாழ்வாங்கு வாழ்ந்த காலத்தின் வழக்கம். ஆனல், ஈவதற்கு ஒன்றுமில்லாதபோது கூட, 'இல்லே' என்று சொல்லாதது தமிழர் பண்பாடு. ஈவதற்கு வசதியோ வாய்ப்போ இல்லாத நேரத்தில் யாரேனும் பிச்சை கேட்டால், "இந்த வேளை போய்விட்டு வாருங்கள்" அல்லது "அடுத்த வீட்டில் கேளுங்கள்" என்று சொல்வது நம் தமிழ்ப் பெண்களிடம் தொன்று தொட்டு இன்று வரை இருந்து வரும் வழக்கமாகும். வறுமை—வளம் ஆகிய இரண்டில் எந்த ஒன்றும், யாரிடமும், எந்தக் காலத்தும் நிலைத்து நிற்பதில்லை; மாறி மாறி வருவன. ஆகவே, இன்று பிறருக்கு ஈவதற்கென்று நம்மிடம் ஒன்றும் இல்லாவிட்டாலும் என்றுமே அந்த நிலேயில்தான் இருப்போம் என்று எண்ணிவிடக் கூடாது. நாளை இருக்கும் என்ற நம்பிக்கையோடு வாழ வேண்டும்.

உறவினர் அல்லது நண்பர் இல்லத்திற்குப் போய்த் திரும்பும்போது, 'போகிறேன்' என்று சொல்லிவிட்டு வருவதே பகுத்தறிவு. ஆனல், அச் சொல் மீளாப் பிரிவையும் குறிப்பதால், 'போய் வருகிறேன்' என்று சொல்லிவிட்டு வருவது தமிழர் பண்பாடு. ஆனல், இழவு இல்லங்களுக்குச் சென்று திரும்பும்போது, 'போய்

வருகிறேன்' என்பது, 'மீண்டும் மற்றொரு இழவுக்கு வருகிறேன்' என்று பொருள்படுகின்றது. ஆகவே, சொல்லிக் கொள்ளாமல் வந்து விடுவதே வழக்கமாக இருந்து வருகிறது.

ஏதேனும் ஒரு அலுவல் காரணமாக வெளியே செல்லும்போது, 'விதவை' எதிரே வரக் கண்டால், உடனே முகத்தைச் சுளித்துக் கொண்டு வீடு திரும்பும் வழக்கம் இந்நாளைய மக்களிடமும் இருந்து வருகிறது.

அதற்குக் காரணம் விதவைப் பெண்மீது கொண்ட வெறுப்பல்ல; அனுதாபமே! பண்டை நாளில் கணவனை இழந்த விதவையர், வெள்ளாடை பூண்டு வேதனை நிறைந்த உள்ளத்தோடு வாழ்க்கை நடத்துவது வழக்கம். ஆகவே, உற்சாகமும் உணர்ச்சியும் கொண்டு செயற்படும் உள்ளத்துடன் இல்லத்தை விட்டுக் கிளம்புவோர் எதிரே விதவை வரக்காணின் வேதனைப்படுவது வழக்கமாக இருந்திருக்கலாம். இந்த அர்த்தமற்ற பழக்க வழக்கங்களெல்லாம் இந்நாளில் வெற்றுச் சடங்குகளாகவே நிலவி வருகின்றன.

# நந்தன் : ஒரு விவசாயி

நந்தன் கதையை அறியாத தமிழர் இல்லை. ஆனால். புராண முறைப்படி அறிந்திருக்கிறோமே ஒழிய, பொருளாதார முறைப்படி அறிந்தோமில்லை. நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் பொருளாதாரக் கண்கொண்டு நுணுகி ஆராய்வோருக்கு, தீண்டாமை தோன்றிய காரணமும், அதன் விளைவாகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே நிலப் பிரபுக்கள் காலின் கீழ் வீரத்தமிழர்களான தீண்டாத மக்கள் எப்படி நசுக்கப்பட்டார்கள் என்பதும் நன்கு விளங்கும். இனி, கதையை ஆராய்வோம்.

நந்தன் ஒரு விவசாயி. அவனை அடிமை கொண்ட அந்தணர் பெரிய நிலச்சுவான்தார். அவருக்கு நாற்பது வேலி நிலம் உண்டு. அந்தக் கால முறைப்படி நந்தன் முறிச் சீட்டின் மூலம் பெற்றோரால் அடிமையாக்கப் பட்டவன். எனவே, வேதியருக்கும் நந்தனுக்கும் உள்ள தொடர்பு, பார்ப்பான்—பறையன் என்பதல்ல ; ஆண்டான்— அடிமை என்ற வர்க்கத் தொடர்பேயாம். சோழநாட்டு ஆதனூர்ச் சேரிதான் நந்தனுக்கு இருப்பிடம்; செத்த மாடுதான் சிறப்பான உணவு ; காடனும் மாடனும்தான் கதிகாட்டும் கடவுளர்கள் ; சேரி இருப்புதான் சிவலோக வாழ்வு. நந்தன் தீண்டாதவனாயினும் அறிவும் ஆண்மையும் அவனிடம் சிறந்து விளங்கின. எனவே, சமூகக் கொடுமை, சாதிச் சழக்கு, சாத்திரப் பொய்ம்மை ஆகியவைகளை நினைந்து நினைந்து அவன் மனம் நொந்தான். இந்தக் கொடுமைகளி லிருந்து விடுதலை பெற விழைந்தான்.

“ தில்லை யென்றொரு பதியுண்டு ; அங்கே அருள் வடிவான ஆண்டவன் சதா ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறான் ; அங்கே சென்று பக்தி செய்தார்க்குப் பரகதி உண்டு” என்றெல்லாம் நந்தன் கேள்விப்பட்டிருக்கிறான். எனவே, நரகம் ஒத்த சேரி வாழ்வி லிருந்து, நாயினும் கேடான அடிமைத்தனத்தி லிருந்து விடுதலை பெற்றுத் தில்லை வெளியிலே கலந்துவிடத் தீர்மானித்தான் நந்தன். ஆனால், நினைத்ததைச் செய்யும் சுதந்திரம் நந்தனுக்கு இல்லை. அவன் ஓர் ஆண்டைக்கு அடிமை. ஆண்டையின் அனுமதியின்றித் தில்லை செல்ல முடியாது. ஆகவே, நந்தன் மிராசுதாரரை அணுகி,

“ஆதிபரா பரமென்னும் திருச்சிற்றம்
பலத்தைக்கண் டானந்திக்க
வேதமொழி விளங்கிவரும் திருவாயால்
விடைகொடுத்து விடுவீர் ”

என்றான். நந்தனின் இந்தப் புதிய நிலைமை எசமான ருக்கு நடுக்கத்தை உண்டுபண்ணியது. “ அடே, பறையா! சிதம்பரம் என்ற சொல் உன் வாயில் வரலாமா? ஆடு மாடு தின்னும் புலையனுக்கு ஆண்டவன் தரிசனமா ? அறியாமல் சொன்னாய்; மன்னித்தேன். இனியும் சொன்னால் அடிப்பேன் ; கூலியைப் பிடிப்பேன்” என்று அதட்டினார். ஆனால், நந்தன் அஞ்சவில்லை. விடாமல் வந்து வந்து ஆண்டையைத் தொந்தரவு செய்து அனுமதி வேண்டி னான். மிராசுதாரருக்கு நந்தனின் மனப்போக்கு விந்தை யாக இருந்தது. எனவே,

“அந்தரங்கமுள்ள சொந்தப் பறையனைப்
அண்டி யிருப்பதுபோய்ச் சண்டை பிடிக்கவந்தாய்”

என்று சொந்தம் பாராட்டிப் பேசினார். அந்தணருக்கு ஆத்திரமெல்லாம் நந்தன் பண்ணையை மறந்துவிட்டானே

என்பதுதான். ஆகவே, நந்தனுடைய உழைப்புத் திறமையைச் சொல்லி மெச்சிப் புகழ்ந்தார். "நந்தா! உன் கால்பட்டால் என் பண்ணை பசுமை கொண்டு விடுமேடா" என்று பசப்பினார்.

" கதிரொரு முழமே நீளும்;
கட்டுமுக் கலமே காணும்
துதிபெறு நந்தா உன்கை
தொட்டதே தங்க மாகும்"

என்றும் நந்தனின் உள்ளம் குளிர உரையாடினார். ஆம் பறையனின் பாதம் பண்ணையில் பட்டால் பசுமை பெறும்; ஆனால், அதேகால் தில்லையில் பட்டால் தீய்ந்து விடும். பறை அடித்தவன் கை பயிரைத் தொட்டால் தங்கமாகும்; ஆனால், அக்கை பகவானைத் தொட்டால் பாவமாகும். என்ன விந்தையான வாதம்! நந்தன் மிராசுதாரரின் மாய வாதத்தில் மயங்கிவிடவில்லை. சிதம்பரம் போய்த்தான் தீரவேண்டும் என்று பிடிவாதம் செய்தான்.

நந்தனை இனி ஏமாற்ற முடியாதென்று கண்ட மிராசுதார் மூர்ச்சையாகி விடுகிறார். மீண்டும் மூர்ச்சை தெளிந்தெழுந்து, எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்தும் பயன்படாமல் போகவே, ஆத்திரத்துடன் சாத்திரமும் கோத்திரமும் கூறுவாரானார்.

"புத்திசொல்லிக் கேளாத மூடா உன்றன்
புரட்டெல்லாம் நானறிவேன் போடா
பக்தியென்றும் சித்தியென்றும் பறையர்க்கேது
பார்ப்பாரத் தெய்வமது பாலிக்காது!
குற்றமுண்டுன் சாதியிலே வழக்கமில்லாக்
கொள்கையது சேரியிலே கூடாதப்பா"

என்று மிரட்டினார். நந்தனும்,

"சாரு நரை திரை நீரு மருந்தது
சாதியைப் பாராது"

என்று ஆகமம் உணர்ந்த அந்தணருக்கு அறிவு புகட்டினான். பார்த்தார் மிராசுதார். தம்முடைய பசப்பெல்லாம் பலிக்காது என்பதை உணர்ந்து நந்தனைப் பார்த்து "நந்தா! உன் கூலியைக் கூட்டித் தருகிறேன். நீ போய்க் காடனையும் மாடனையும், கள்ளும் கறியும் வைத்துக் கை தொழுது கும்பிடு. அதிலேயே உனக்கு முக்தி உண்டு" என்று இனிமையாய்க் கூறினார். ஆனால், நந்தன் விரும்பியது கூலி உயர்வல்ல; கொடுமையினின்று விடுதலை! எனவே, மிராசுதாரரின் தொடர்பால் தனக்குற்ற அல்லலை யெல்லாம் அடுக்கிக் கூறுவான்:

"காலில் நகம் முளைத்த நாள் முதலாய் உமக்கு அடிமைப்பட்டேன். உள்ளங்காலில் வெள்ளெலும்பாட ஓடி ஓடி உழைத்தேன். கண்டபயன் என்ன? நீங்கள் கொடுத்த அற்ப உணவை உண்டு உண்டு உறங்கியதே யல்லாமல் வேறொன்றும் கண்டிலேன். எட்டும் இரண்டும் கூட்டுவதற்கு உரிய ஏட்டறிவைக்கூடப் பெற்றிலேன்" என்று கூறி கண்ணீர் பொழிந்து கதறி அழுதான். இனி, வஞ்சனையாலும் வசைச் சொல்லாலும் வழிப்படுத்த முடியாது என்பதை அறிந்த மிராசுதார் நந்தனைத் தடிகொண்டு தாக்கினார். அடி பொறுக்காத நந்தன் அலறி ஓடவே, கற்களை எடுத்துக் கண்டபடி வீசினார். நந்தன், "அடித்தது போதுமையே, அடிமை வேலை செய்யும் என்னுடன் வாதோ" என்று சொல்லி அலறி அழுதான்.

ஆத்திரம் கொண்டமட்டும் அடித்துச் சலித்த மிராசுதார் நந்தனைப் பார்த்து, தமது இறுதிக் கோரிக்கையை எடுத்துரைத்தார். "அடே மூடா! பண்ணைக்குச் செல். நாற்பது வேலி பயிரைக் கவனி. நாற்றைப் பிடுங்கி நடவு

நடு. களத்தில் படுத்துக் காவல் செய். அப்புறம் சிதம்பரம் செல்ல அனுமதி தருவேன். இங்கே நில்லாதே, போ!" என்று ஆணையிட்டு அப்பால் சென்றார்.

ஆண்டையின் மனத்தை மாற்றுவது அரிது என்று அறிந்தான் நந்தன். ஆண்டை அடித்த அடிகளோ அவன் உடலைப் புண்படுத்தின. அம்பலத்தரசைக் காண முடியவில்லையே என்ற கவலை அவன் உள்ளத்தைப் புண் படுத்தியது. எனவே, "ஐயோ! ஆண்டை அடித்த அடியால் ஆலையில் பட்ட கரும்பென என் அங்கம் நைந்து போச்சே! வேதனை உடலுடன் எப்படி வேலை செய்வேன்? நாற்பது வேலி பூமி பயிரிடுவது எப்போ? தில்லைநாதனைக் காண்பதெப்போ?" என்று அழுதவண்ணம் ஒரு தனி இடத்தை நாடி மரத்தடியில் சாய்ந்தான். ஆம், அவன் உள்ளத்தைப் பறிகொண்ட தெய்வமும் அவனைக் காக்கவில்லை. அவன் உழைப்பைப் பறிகொண்ட ஆண்டையும் அனுமதி தரவில்லை. எனவே, இறைவனையும் எசமானையும் நிந்திக்கலானான்:

"பாவி எனக்கோ அந்தப் பார்ப்பான் மனமிரங்கான்"

* * *

பத்து வருட காலமாகப் பார்ப்பானைக் கேட்டேன்
சித்தமிரங்கிப் போய்வா என்றொரு
நல்லசேதி சொல்லக்காணேன்

என்று ஆண்டையை நிந்தித்தான். பின்னர்,

"தில்லையம்பல வாணத் தெய்வம் புலையர்க்காகக்
கல்லாய்ச் சமையலாச்சுதே"

* * *

"அடிமுடி ஒன்றுமில்லா அம்பலத் தரசே உன்பால்
கொடியன் நான் வந்தாலென்ன குறையுமோ
அதனால் நீதி
நடனஞ்செய் பார்ப்பான்கையில் நடுங்கவோ
விடுத்தாய்'

என்று கதியற்ற திண்டாதங்களைக் காப்பாற்றத் தவறிய கருணையற்ற தெய்வத்தைக் கனன்று பேசினான். சோர்வுற்ற நிலையில் தான் பிறந்த பறைக்குலத்தவர் படும் பாட்டையெல்லாம் நினைந்து, "பாவிப் புலையனாய் இனியும் பிறப்பேனோ? இப்பாரினில் இருப்பேனோ? ஆற்றிலே குளத்திலே வீழ்வேன். என் ஆவியைத் தொலைத்திடுவேன்" என்று ஆண்டையையும் ஆண்டவனையும் வெறுத்ததோடு தம் ஆவியையே வெறுக்கலானான்.

இதற்குமேல் கதை ஆண்டவனது அருள் வழியில் செல்லுகிறது. சோர்வுற்ற நந்தன் அயர்ந்து உறங்க, கடவுள் கனவில் காட்சி அளிக்கிறார். ஒரு நள்ளிரவிலே சிவ கணங்கள் நாற்பது வேலி பூமியையும் நடவு செய்து விடுகின்றன. தம் ஆசை நிறைவேறிய அதிசயத்தை அறிந்த மிராசுதார் ஆனந்தமடைந்து, நந்தன் தில்லை செல்ல அனுமதி தருகிறார்.

விவசாய நந்தன் அன்று தன் மரபுக்கு உற்ற கொடுமையை அமைதியான முறையில் எதிர்த்துப் போராடினான். நந்தன் அம்பலத்தரசை நாடியதற்கு அந்தண மிராசுதாரின் கொடுமையே காரணம் என்பதை அவன் வாய்மொழிகளே அறிவிக்கும். சேரியின் கொடுமை அவனுக்குச் சிதம்பரத்தை நினைவூட்டியது. ஆண்டையின் அடக்குமுறை ஆனந்த மூர்த்தியை நாடச் செய்தது. இது அன்றைய நிலை.

சாதி, சமயம், சாத்திரம், பழக்க வழக்கம் என்று பாசாங்கு செய்து நந்தனை மயக்கப் பார்த்தார் மிராசுதார். பலிக்காது போகவே, நாற்பது வேலி பூமி நடவு நட்டான். பிறகு சிதம்பரம் செல்ல அனுமதி தந்தார். இங்கேதான் வேதியரின் வேடம் கலைந்து சுரண்டல் உருவத்தில் மிராசுதாரர் காட்சியளிக்கிறார்.

# கண்ணீரிலே கலந்த கவிதை

இறந்தார்க்கு இரங்கி, இருப்பார் அழுவது மனித வர்க்கம் முழுவதுக்குமான பொதுப் பண்பு. என்றாலும், இறந்தாரைப் பற்றித் தம்முடைய இதயத்தே எழும் எண்ணங்களை இசையோடு கலந்து வெளியிட்டு அழுவது தமிழகத்தைத் தவிர வேறு நாடுகளில் இல்லை. அதனாற்றான் தமிழினத்தின் பெருமை கூற வந்த நாமக்கல் கவிஞர்,

> இழவில் அழுதிடும் பெண்கூட
> இசையோ டழுவது கண்கூடு

என்று ஒப்பாரிக் கலையை உவமை கூறினார்.

இறந்தவரின் பிணத்தைக் கூடத்தின் நடுவே கிடத்தி, அதன் இரு மருங்கிலும் பெண்கள் வரிசையாக அமர்ந்து எதுகை இடறாமல், மோனை முறியாமல் கவி பாடி, அழுவதை இன்றும் தமிழகத்தில் கண்டு வருகிறோம். கணவனை இழந்த பெண்கள் தம் இரு கைகளாலும் மார்பில் அறைந்துகொண்டு அழுவார்கள். தான் பெற்ற பெண்ணையோ பிள்ளையையோ இழந்த பெண்கள், வயிற்றில் அடித்துக்கொண்டு அழுவார்கள். சாதாரணமாக, வட்டமாக நின்று கைகளைக் கோத்துக்கொண்டு இடைவிடாது சுற்றிக்கொண்டே சாய்ந்தாடி அழுவதும் ஒப்பாரிக் கலையின் மற்றொரு வகையாகும்.

ஒப்பாரிக் கலை, தமிழகத்தில் தொன்று தொட்டே இருந்து வருவதாகத் தெரிகிறது. புறநானூறு 25-ம்

பாடலில் போர்க்களத்தில் கணவரைப் பலி கொடுத்த மனைவியர்,

"முலைபொலி யாக முருப்ப நூறி"

முலை விளங்கும் மார்பில் அனல் எழும்படியாக தம் கைகளால் பலமாக அறைந்துகொண்டு அழுததாகக் கூறப்படுகிறது. பண்டைப் புலவர்கள் தாம் இயற்றும் காவியங்களிலும் இந்த ஒப்பாரிக் கலைக்கு இடமளித்துள்ளனர். சிலப்பதிகாரத்துள், கொலைக்களத்தே வெட்டுண்டு கிடந்த கோவலனின் பிணத்தின் மீது விழுந்து அழுகின்ற கண்ணகி,

மன்பதை அலர்தூற்ற
மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன்யான்
அவலங் கொண்டழிவலோ!
பார்மிகு பழிதூற்றப்
பாண்டியன் தவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணு
இதுவென உரையாரோ!

என்றெல்லாம் பாடி அழுகிறாள். இந்த வரிகள் தற்காலப் பெண்கள் பாடும் ஒப்பாரிப் பாவனையில் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

கவியரசர் கம்பரும், தாம் இயற்றிய இராம காவியத்தில் இந்த ஒப்பாரியைக் குறிப்பிட்டிருக்கிறார். தயரதன் இறந்த செய்தியைப் பரதன் மூலம் அறிந்த சீதை,

மண்ணெனுஞ் செவிலிமேல்
வைத்த கையினள்
பண்ணெனுங் கிளவியாற்
பன்னி யேங்கினள்

இடது கையை நிலத்திலூன்றிய வண்ணம், பண்ணோடியைந்த பாடல்களைப் பாடி தனது ஆற்றாமையை வெளிப்படுத்தி அழுதாளாம்.

மைந்தன் இந்திரசித்தும், மன்னன் இராவணனும் இறந்துபட்டபோது, அவர்களுடைய உடலருகே அமர்ந்து மண்டோதரி அழுகின்ற இடங்களிலும் ஒப்பாரிக் கலையின் அழகை வெகு அருமையாகக் கையாண்டிருக்கிறார் கம்பர்.

சாதாரணப் பெண்கள் பாடும் ஒப்பாரிப் பாட்டில் உள்ள கருத்துச் செறிவும் கற்பனை அழகும் கவிச் சக்கரவர்த்திகளைக்கூட மயங்க வைத்ததுண்டு. கம்பரைப்பற்றி கர்ண பரம்பரையாக வழங்கிவரும் கதையொன்று இதற்குச் சான்று கூறுகிறது. அந்தக் கதை வருமாறு :

> ஒரு சமயத்தில் கம்பர் ஒரு கிராமத்தில் தங்க நேரிட்டது. அப்போது ஒரு நாள் அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்து வெளியேசென்றார். வழியில் ஒருவீட்டினின்று இளம்பெண் ஒருத்தியின் அழுகுரல் கேட்டது. அவ்வழுகையினூடே ஒப்பாரியாக, "சில்லென்று பூத்த" என்ற சொற்றொடர் அவள் வாயினின்றும் வெளிக்கிளம்பியதும் அடுத்த வார்த்தைகள் வெளிவராதவாறு யாரோ அவள் வாயைப் பொத்தி அழுகையை அடக்கியதாகத் தெரிந்தது. அதை அறிந்த கவிச் சக்கரவர்த்தி கம்பர், "சில்லென்று பூத்த" என்ற சொற்றொடர் கவிச்சுவை வாய்ந்ததாயிருந்தமையால், அதன் பின்னர் அவள் சொல்ல விரும்பியது எதுவாக இருக்கலாம் என்பதை அறிய ஆவல் கொண்டார். ஆனால், அவரது கற்பனைக்கு அது எட்டவில்லை. அக்கம் பக்கத்து வீட்டார்களை அணுகி தமது மனநிலையைத் தெரிவித்து,

அதைத் தெரிந்துகொள்ள என்ன செய்யலாமென்று கேட்டார். அவர்கள், அந்த அழுகுரல் சமீபத்தில் தன் நாயகனை இழந்த இளம் விதவையினுடையது எனவும், நாயகனை நினைந்து அதிகாலையில் விழித்தெழுந்து அழுவது வழக்கம் எனவும், அங்ஙனம் அழுவதை நிறுத்துவது பக்கத்திலிருக்கும் வயதான பெண்களின் கடமை எனவும் தெரிவித்தனர். கவிச் சுவையில் ஆர்வம் கொண்ட கம்பர், மறுநாளும் அங்கே சென்று அந்த வீட்டின் தெருத் திண்ணையில் தங்கியிருந்தார். வழக்கம்போல அழுகைக்குரல் ஒப்பாரி ஓசையுடன் வெளிக்கிளம்பிற்று. அவரது அதிர்ஷ்டவசமாக அவள் வாயைப்பொத்த ஆட்கள் சற்று பின்தங்கி வர நேரிட்டது. அவ் விதவைப் பெண்,

சில்லென்று பூத்த சிறு நெருஞ்சிற்
காட்டினுள்ளே — என்னை
நில்லென்று சொல்லி நிறுத்தி வைத்துப்
போனீரே !

என்று பெருமூச்செறிந்து புலம்பி அழுதாள். அந்தப் பாட்டின் சொற்சிறப்பும் பொருட் செறிவும் கம்பரைப் பரவசப்படுத்தின.

படித்தறியாப் பாமரப் பெண்கள்கூட இந்த ஒப்பாரிக் கலையில் மிகப் பண்பட்டு விளங்குகிறார்கள். இறந்தவரின் வாழ்க்கை வரலாற்றுக் கேற்பத் தமக்கு அவரோடிருந்த தொடர்புக்குப் பொருந்தப் பாடியழும் திறமை கல்வியறிவற்ற பெண்களுக்கும் அமைந்திருப்பது அதிசயிக்கத் தக்கதாகும். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?" என்று ஆணினம் நீதியற்ற வகையில் பெண்ணி

னத்தை அடக்கி வைத்தது. ஆனால், ஔவையின் வழி வந்த பெண் குலம் தனது கலைத்திறத்தை இன்னும் அடியோடு இழந்துவிடவில்லை.

இக்காலப் பெண்களின் ஒப்பாரிப் புலமைக்குச் சில எடுத்துக்காட்டுகள் கூறுகின்றேன்.

ஒரு அம்மையாரின் மருமகள் திருமணமாகி மாமி வீடு வந்த எழுநாட்களுக்குள் இறந்துவிட்டாள். உயிர் நீப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னர்கூட அம்மங்கை இறந்துவிடுவாளென்று எவரும் எண்ணியதில்லை. எதிர்பாராத நிலையில் மருமகளைப் பறிகொடுத்த அவ்வம்மையார், தன் உள்ளத்தில் தோன்றிய எல்லையற்ற துக்கத்தை ஒப்பாரியில் பாடியதைக் கேட்டேன். இறந்தவளின் திருமணத்திற்குப் பந்தல்கால்கள் நட்ட குழிகள் மறையா முன்னமே, அப்பெண்ணின் வாழ்க்கை முடிந்துவிட்டது. திருமணப்பந்தலில் மணமக்கள் மாற்றிக்கொண்ட பூமாலைகள் சருகாக உலர்ந்து வீட்டுச் சுவற்றில் தொங்கிக்கொண்டிருந்தன. பலவித வண்ணங்களால் சித்திரம் எழுதப்பட்டு மணப்பந்தலில் வைத்திருந்த கூறைப்பானைகள் வீட்டின் ஒரு மூலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இந்தக் காட்சிகளையெல்லாம் கல்லையும் உருக்கும் வண்ணம் அவ்வம்மையார் கவிதையாகப் பாடுவதைக் கேளுங்கள்:

பந்தக்கால் நட்ட இடம்—அங்கே
பள்ளம் மறையலையே
முகூர்த்தக்கால் நட்ட இடம்—அங்கே
மே(ா)டு உயரலையே
பூமாலை சூட்டியல்லோ—உன்பெற்றார்
புண்ணியனைத்தேடி வைத்தார்—அந்தப்
பூமாலை வாடுமுன்னே—நீ
பொன்னுலகம் போனதென்ன?

*மணவறையில் கைப்பிடித்த கணவனுடன் பள்ளியறை புகுந்த பத்தாம் நாளுக்குள் பிணமான நிலைகண்டு இரங்கி யழும் அவ்வம்மையார், பழி கூறிப்பாடும் பகுதியைப் பார்ப்போம்.*

கூறைசால் கொண்டுவந்த
குயவனும் கண்குருடா ?
சேலை நெசவு செய்த
சேணியனும் கண்குருடா ?

*என்று, நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்துத் தொழில் புரியும் குயவரையும் சேணியரையும் குறைகூறி அழுத மறுகணமே, 'வேதம் ஓதி வேள்வி பெருக்கிச் சித்துகள் புரியும் வித்தைகள் அறிவோம்' என்று பேசும் புரோகிதரின் சாத்திர ஞானத்தையும் சாடிப் பாடுங்கால்,*

பஞ்சாங்கம் பார்க்க வந்த
பார்ப்பானும் கண்குருடா ?

*என்று கூறிப் பதறியழுதார்.*

*மற்றொரு சமயம், அவ்வம்மையாரின் பேத்தி ஒருத்தி இறந்து விட்டாள். பல மாதம் பாடுபட்டு மருத்துவம் செய்தும் பலனற்றுப் போன நிலைமையைப் பாட்டாகத் திட்டுவதைப் பாருங்கள்:*

பாடி வைத்தியன்—அவன்
பஸ்பத்தால் தீருமென்றான்
ஓச வைத்தியன்—அவன்
ஒருநாளில் தீருமென்றான்
சூஊா வைத்தியன்—அவன்
சூரணத்தால் தீருமென்றான்
மலையாளத்து மாந்திரிகன்—அவன்
மந்திரத்தால் தீருமென்றான்

தேவி கோவில் பூசாரி—அவன்
திருநீற்றால் தீருமென்றான்
(மருத்துவம் முடிவடைந்தது)
ஆகாச மாத்திரையை—நீ
அள்ளியுண்ண நீதியுண்டோ

*[பாடி—ஓர் ஊர்; ஓசர்—ஒரு சாதியினர்; சூளை—சென்னையில் ஒரு பகுதி]*

*பெண்கள், இறந்தாருக்கு ஏங்கி அழுவதோடல்லாமல், இருந்தாரைத் தாக்கிப் பாடுவதும் உண்டு. இதை மேற் சொன்ன அம்மையாரைக் கொண்டே அறிந்தேன். அவ் வம்மையாரின் அண்ணன் பரம சாது. அண்ணியாரோ, வாய்ப்பட்டி. கணவனையும் நடுங்க வைக்கும் காளிதேவி என்றாலும் தகும். எனவே, தமது அண்ணியாரை இழவு இல்லங்களில் சந்திக்க நேர்ந்த போதெல்லாம் அவ்வம்மையார், அவரைத் தாக்கிப் பாடி அழுவதுண்டு. அதில், தன் அண்ணனின் அப்பாவித்தனத்திற்கு வருந்தி யழும் பின்வரும் பாட்டு ஓர் எடுத்துக் காட்டு:*

காரைமுள்ளு கிரைமுள்ளு—அவள்
கைநிறைந்த ஊவாமுள்ளு—அந்த
ஊவாமுள்ளுப் பாவியப்படை—என் அண்ணன்
ஊடாட வல்லவனோ?

*இவ்வம்மையார் தற்குறியல்ல; தமிழில் நன்கு எழுதப் படிக்கத் தெரிந்தவர். தேவாரம், திருவாசகம் போன்ற சமயப் பாடல்களைப் பழுதின்றிப் பாடும் பயிற்சியுடைய வர். அப்படியிருந்தும், குடும்பக் கலைகளான ஒப்பாரி, தாலாட்டுப் போன்ற பாடல்களையும் நன்கு மதிப்பவர்.*

*ஒப்பாரி பாடியழும் வழக்கம் பொதுவாகத் தமிழ்ப் பெண்கள் எல்லோரிடமும் இருந்து வருகிறது. என்றாலும்,*

பழங்குடித் தமிழ் மக்களிடமே இது ஒரு 'கலை' என்று கூறக் கூடிய அளவுக்குச் சிறந்து விளங்குகிறது. பெண் பிறப்பே பாவப் பிறப்பு என்ற எண்ணம் வளர்ந்து வந்ததன் விளைவாகப் பெண்கள் சம்பந்தப்பட்ட எல்லாக் கலைகளும் ஏளனத்துக்கும் இழிவுக்கும் உள்ளாகி விட்டன. மேலும், நாகரீக வளர்ச்சி காரணமாக ஒப்பாரி, தாலாட்டு ஆகிய இசையோடியைந்த குடும்பப் பாடல்கள் தமிழகத்தில் மறைந்து வருகின்றன. ஆனால், பண்டை நாள் பழக்க வழக்கங்களுக்கு மதிப்புத் தரும் பெண்கள் மேற்சொன்ன அம்மையாரைப் போன்று ஒரு சிலரேனும் இருந்து வருகின்றனர். அவ்வம்மையார் வேறுயாருமில்லை; என்னை ஈன்ற அன்னையார்தான். மணப்பந்தலில் அணிந்து கொண்ட மாலை வாடாமுன்னர் மனைவியை இழந்தவன், பந்தக்கால் நட்ட பள்ளம் மறையுமுன்பே பத்தினியை இழந்தவன் நானே தான்!

# நல்ல நாடு

தமிழகத்தை நான்கு வகையாகப் பிரித்தனர் பண்டைப் புலவர்கள். மலையும் மலை சார்ந்த இடமும் ஒரு வகை. காடும் காடு சார்ந்த இடமும் மற்றொரு வகை. வயலும் வயல் சார்ந்த இடமும் இன்னொரு வகை. கடலும் கடல் சார்ந்த இடமும் பிறிதொரு வகை. இந்நான்கும் முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாகும். இதனாலேயே நிலத்திற்கு நானிலம் என்றும் பெயர் வந்தது.

இந்நால்வகை நிலங்களில் சிறந்த நிலம் எது? இந்தக் கேள்விக்கு புறநானூற்றுப் பாடல் ஒன்றில் ஔவையார் பதிலளிக்கின்றார். நிலத்தைப் பார்த்துச் சொல்வது போன்று அமைந்துள்ள அப்பாடல் பின்வருமாறு:—

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

[அவல் - பள்ளம்; மிசை - மேடு; எவ்வழி - எந்த இடத்தில்]

நிலமானது, ஒன்று நாடாக இருக்கட்டும்; ஒன்று காடாக இருக்கட்டும், ஒன்று பள்ளமாக இருக்கட்டும்; ஒன்று மேடாக இருக்கட்டும். எந்த நிலத்தில் மக்கள் நல்லவர்களாக இருக்கின்றனரோ அதுவே நல்ல நிலம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஔவை கண்ட இந்த முடிவு எக்காலத்துக்கும், எந்நாட்டிற்கும் பொருந்துவதாகும்.

ஔவை கூறும் நல்லோர் யாவர்? அன்பு, அறிவு, ஆண்மை ஆகிய மூன்று குணங்களும் ஒரு சேர வாய்க்கப் பெற்றவரே நல்லோர் எனப்படுவர். இம்மூன்றில் ஒன்று குறையினும், அவர் உருப்பால் மனிதரேயாயினும் உள்ளத்தால் மனிதத் தன்மையில் குறையுடையவரே.

அன்புள்ளம் மட்டும் இருந்து அறிவும் ஆண்மையும் இல்லாதவராயின், அத்தகையோர் தீயோரால் வஞ்சிக்கப்படுவர். எனவே, அவரால் நாட்டிற்கு நன்மை இராது.

அறிவுத் திறம் பெற்றிருந்தும் அன்பும் ஆண்மையும் இல்லாதவராயின், அத்தகையோர் சூழ்ச்சி மனம் படைத்தவராய் பிறரை வஞ்சிப்பர். மேலும், அவரெல்லாம் மக்கள் மனவழி தாம் இயங்காது, தம்வழி மக்கள் இயங்கவேண்டுமென்று எண்ணுவர். அன்புள்ளமின்றி சூழ்ச்சி வயப்பட்டுள்ள அறிவு, உலகத்தோரால் நம்புதற்குரியதன்று.

இனி, ஆண்மை மட்டும் இருந்து, அன்பும் அறிவும் இல்லாதவராயின் அத்தகையோர் முரடர் எனப்படுவர். அவரால் நல்லோருக்குக் கேடு விளையும். எனவே, அத்தகையோர் உலகத்தினரால் வெறுக்கப்படுவர்.

பகுத்தறிவு, பரந்த அன்பு, சிறந்த ஆண்மை ஆகிய மூன்று குணங்களும் பொருந்தியவரே நல்லோரெனப்படுவர். அத்தகைய நல்லோராலேயே ஒரு நாடு சிறப்பெய்தும். இம்மூன்று நற்குணங்களும் ஒருவரிடத்தே சமமாகக் காணப்படுவதும் அரிதெனலாம். ஒன்று மிகுந்து ஏனைய இரண்டும் குறைந்தும் இருப்பது இயற்கையே.

அன்பால் மிகுந்திருப்பவர், உயிர்கள் எல்லாம் தொழும் உத்தம ஞானியாகின்றனர்; அறிவால் மிகுந் திருப்பவர், உலகத்திற்கு வழிகாட்டி நடத்திச் செல்லும் ஒப்பற்ற தலைவராகின்றனர்; ஆண்மை மிகுதியாக உள்ளோர், தீயோரை அழித்து நல்லோரைக் காத்து நிற்கும் சிறந்த வீரராகின்றனர்.

இத்தகைய ஞானிகளும், தலைவர்களும், வீரர்களும் நிரம்பிய நாடே **நல்ல நாடு.**

அதனால்தான், "அன்பினோடு அறிவு சேர்ந்த ஆண்மை வேண்டும் நாட்டிலே" என்றார் நாமக்கல் கவிஞர்.

# தொழிலரசு

ஔவையார், சிறந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர். இவரது காலத்தைப் பற்றி ஆராய்ச்சியாளரிடையே கருத்து வேற்றுமை இருக்கிறது. 'ஔவை' என்ற பெயரால் சங்க காலத்தில் ஒருவரும் இடைக்காலத்தில் இன்னொருவரும் வாழ்ந்ததாகக் கூறுவர் ஆராய்ச்சி யாளரிற் சிலர்.

பொதுவாக ஔவையின் பெயரால் நம்மிடையே உலவி வரும் பாடல்கள் பல. 'தனிப்பாடற்றிரட்டு' என்னும் நூலி லும் ஔவையின் பெயரால் சில பாடல்கள் காணப்படு கின்றன. அவற்றில் 'நூல் எனிலோ கோல் சாயும்...' எனத் துவங்கும் வெண்பா 'தொழிலரசு'க் கொள்கையை வற்புறுத்துகின்றது.

பண்டைத் தமிழகத்தில், தமிழ் இனம் நால்வகை உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது. அவை. அரசர்- அந்தணர் - வணிகர் - வேளாளர் என்பனவாம். அரசர் நாடாள்வதையும், அந்தணர் ஓதல் - ஓதுவித்தலை யும், வணிகர் வியாபாரம் செய்வதையும், தொழிலாளர் பொருளுற்பத்தி செய்வதையும் தொழிலாகக் கொண்டி ருந்தனர்.

தனிப்பாடற்றிரட்டில் ஔவையின் பெயரால் காணப் படும் வெண்பா, மேற்சொன்ன நால்வகை சாதியினரில் அரசியலை நடத்தும் அமைச்சனாக வருவதற்குத் தகுதி யுள்ள சாதியார் யார் என்பது நன்கு ஆராயப்பட்டுள்ளது. நான்காம் சாதியினராகிய தொழிலாளரே நாடாளத்

தக்கவர் என்பது அறிவுக்கும் அனுபவத்திற்கும் பொருந்தும் வகையில் ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அவ்வெண்பா, அரசன் ஒருவனுக்கு அறிவுரை கூறுவது போல் அமைந்திருக்கிறது. அதன் முதலடி,

நூலெனிலோ கோல் சாயும்

"நூலறிவு, அதாவது சாத்திரம் படித்த சமயவாதிகள ஆட்சி நடத்தினல் செங்கோல் முறை பிறழும்" என்பதாம்.

கலையுரைத்த கற்பனைகளை யெல்லாம் நிலையெனக் கொண்டாடித் தத்தம் சமயம்தான் மெய்; ஏனைய சமயமெல்லாம் பொய் எனச் சாதிக்கும் சமயவாதிகள் ஆட்சி புரிந்தால், சாதிக்கொரு நீதி கூறுவது அரசாங்கத்தின் அன்றாடத் தொழிலாக அமையும் என கவிஞர் நம்பினர் போலும்! இரண்டாவது வரியில்,

நுந்தமரேல் வெஞ்சமராம்

"உம்மவராகிய க்ஷத்திரியர் ஆட்சிபுரியின் ஓயாது போர் விளையும்" என்கிறார்.

க்ஷத்திரியருக்குப் போர் செய்வதே தொழில்; அதில் அடையும் புகழே அவர்க்குரிய சன்மானம். அதனால் தான், "நாணில மதனில் உண்டு போரென நவிலின் அச்சொல் தேனினும் களிப்புச் செய்யும் சிந்தையர்" என்றார் கம்பரும். எனவே, போரை விரும்பும் க்ஷத்திரியர் ஆட்சியில் குடிமக்கள் யுத்த பயமின்றி வாழ்தல் இயலாது. இனி,

கோலெனிலோ ஆங்கே குடிசாயும்

"பொருளை நிறுப்பதற்கு ஏற்பட்ட துலாக்கோலைப் பிடித்த வணிகர் ஆட்சி புரிந்தால் அப்பொழுதே குடிமக்கள் அல்லலுறுவர்" என்கிறார்.

வியாபாரக் கூட்டத்தினர் எப்பொழுதும் தங்கள் சொந்த லாபத்தையே விரும்புவர். இத்தகைய சுயநலச் சிந்தையுடையார் அரசாங்கத்தில் ஆதிக்கம் செலுத்தினால், அந்நாட்டில் பொருளாதாரச் சமத்துவம் இருத்தல் இயலாது. நாட்டின் பொதுச்செல்வம் அனைத்தும் ஒருசாராரிடையே குவிந்து கிடக்கும். இதன் பயனாக, குடிகள் பஞ்சத்திற்கும் பிணிக்கும் இரையாகி வருந்த நேரும். ஆகவே, வர்த்தக—முதலாளிகள் ஆட்சியும் வெறுக்கத் தக்கதே.

—நாலாவான்

மந்திரியும் ஆவான் வழிக்குத் துணையாவான்

"நான்காம் வருணத்தவராகிய உழைப்பாளிகள்தான் மந்திரிகளாக வருவதற்குத் தகுதியுடையவர்கள். மக்களின் வாழ்க்கை வழிக்குத் துணையாவதற்கும் உரியவர்" என்பது இதன் பொருள்.

தொழிலாளி, உழைத்து உண்பவன்; பிறர் உழைப்பில் உண்ணும் சோம்பேறியல்லன். ஆதலால், தொழிலாளி வர்க்கம் ஆட்சி புரிந்தால், நாட்டில் உற்பத்தி பெருகும். உற்பத்தியான பொருள்கள் தேவைக்குத் தக்கபடி எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்படும். ஆம்; மனிதர் உணவை மனிதர் பறிக்கும் மடமையை ஒழிக்க வேண்டுமானால், மனிதனை மனிதன் கொன்று குவிக்கக் காரணமாயிருக்கும் மண்ணாசையை அழிக்க வேண்டுமானால் தொழிலாளர் அரசு ஏற்பட்டே தீர வேண்டும். 'எல்லோரும் ஓர் இனம்' என்ற சமரச நோக்

கத்தையும் நாட்டின் செல்வாணைத்தும் மக்களின் பொதுச் சொத்து என்ற சமத்துவக் கொள்கையையும் நிலைநாட்டக் கூடிய அரசு ஒன்று உண்டானல், அது தொழிலாளர் அரசே! அதனல்தான்,

அந்த அரசே அரசு

என்ருர். இதனல், தொழிலாளரைத் தவிர ஏனைய வர்க்கத்தினரான அரச பரம்பரையினர், சமயவாதிகள், வர்த்தக— முதலாளிகள் ஆகியோரால் நடத்தப்படும் அரசாங்கங்கள் 'அரசு' என்ற பெயருக்கே ஏற்றனவல்ல; அவை, ஒரு கூட்டத்தாரின் ஆதிக்கமே. இனி, முழு வெண்பாவையும் கவனிப்போம்:

நாலெனிலோ கோல்சாயும் நுந்தமரேல் வெஞ்சமராம்
கோலெனிலோ ஆங்கே குடிசாயும்—நாலாவான்
மந்திரியும் ஆவான் வழிக்குத் துணையாவான்
அந்த அரசே அரசு.

வருண பேதத்தைக் கடவுள் வகுத்த சட்டம் என நம்பி, அதையே சமுதாய விதியாக மக்கள் அனுஷ்டித்து வந்த காலத்தில், அதற்கு நேர் விரோதமாக வேருெரு தலைகீழ் விதி வகுத்த கவிஞரை 'புரட்சிக்கவி' என்பது மிகையாகாதல்லவா?

தொழிலரசின் அவசியத்தை உலகுக்குப் போதித்த கவியின் நாயகமாம் தமிழகத்தில், அவரது கனவு நனவாகும் நாள் என்நாளோ!

# இலக்கியத்தில் 'சோஷலிஸம்'

இன்றைய உலகில் எல்லாத்துறைகளிலும் பழைமைக்கும் புதுமைக்கும் போராட்டம் நடந்து வருகின்றது. பழைமையில் கொள்ளத்தக்கது ஒன்றுமே இல்லை என்பது புதுமை விரும்பிகளின் வாதம். இதற்கு நேர்மாறாக, பழைமையில் தள்ளத் தக்கது எதுவுமே இல்லை என்பது பழைமைப் பித்தர்களின் எண்ணம்.

இலக்கியத்திலும் பழைமைக்கும் புதுமைக்கும் போராட்டம் உண்டு. பழைய இலக்கியங்கள் என்றாலே அத்தனையும் பத்தாம் பசலித் தத்துவம்; காரியத்திற்கு உதவாத கற்பனைகள் எனப் பழித்துப் பேசுகின்றனர் புதுமைப் பித்தர்கள். பொதுவாக நோக்குமிடத்து, பழைய இலக்கியங்களில் கொள்ளத் தக்கனவும் உண்டு. தள்ளத் தக்கனவும் உண்டு. தள்ளத் தக்கன வற்றைத் தள்ளி, கொள்ளத் தக்கனவற்றைக் கொண்டால் அவை புதுமைக்குப் பொருந்துவனவாக—ஏன்?—புதுமைக்கும் புதுமையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இன்னும் சொன்னால், காலத்திற்கு ஒவ்வாத—மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படாத—சமூக வளர்ச்சிக்கும் பொருந்தாத பழைமையை நாம் கழிக்கக்கூட வேண்டிய தில்லை. அது தானாகவே கழிந்து விடும். "பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவல கால வகை" என்றார் நன்னூல் ஆசிரியர். ஆம்; 'கழித்தலும்' 'புகுத்தலும்' என்று கூறாமல், 'கழிதலும்' 'புகுதலும்' என்று கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

பண்டைத் தமிழகத்திலும், செல்வமும் வறுமையும் சேர்ந்தே இருந்தன. இருந்துண்டு வாழ்பவரும், இரந்தும் உணவின்றி வருந்துவோரும் இருக்கத்தான் செய்தனர். இதை மறைக்கத் தேவை இல்லை. ஆயினும், அது இயற்கை நியதி என்றோ, கடவுள் திருவுள்ளம் என்றோ யாரும் நம்பவில்லை. வறுமையுள்ள நாட்டை ஒரு நாடாகவே மதித்ததில்லை பண்டைத் தமிழர்.

> பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்
> பசியும் பிணியும் பகையும் நீங்கி
> வசியும் வளனும் சுரக்க.........
>
> —சிலம்பு : 5 : 71—3.

என, தங்கள் மன்னனை வாழ்த்துகின்றனர் புகார் நகரத்து மக்கள். ஆம்; பசியும் பிணியும்பகையும் அற்றதுதான் நாடு என்பது, இளங்கோவடிகளின் எண்ணம். "உறுபசியும் ஓவாப் பிணியும் இல்லாததுதான் நாடு" என்று வள்ளுவப் பெருந்தகையும் கூறுகின்றார். ஆம், சோஷலிஸத் தத்துவத்தின் அடிப்படை எதுவோ, அது பண்டைப் புலவர்களால் அங்கிகரிக்கப்பட்டிருக்கிறது.

ஒருவன் இருந்து உண்பதும், இன்னொருவன் இரந்து திரிவதும் அவனவன் புண்ணிய—பாவங்களின் பலன் என்பது பிற்காலத்தில் எழுந்த மூடநம்பிக்கை. இதற்கு மாறாக,

> இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியற்றி யான்

என்கிறார் வள்ளுவர். இந்தக் குறளுக்கு, "ஒருவனைச் செல்வனாகவும், இன்னொருவனை வறியனாகவும் கடவுளே படைக்கிறான் என்பது உண்மையென்றால், அந்தக் கடவுள் அழி

யட்டும்" என்று பொருள் கூறியிருக்கின்றனர் பண்டை உரையாசிரியர்கள்.

'இல்லை' என்று சொல்லி அல்லற்படும் ஏழை மக்களைப் படைத்த ஆட்சியை பண்டைப் புலவர்கள் பாராட்டியதில்லை; பழித்துப் பேசியிருக்கின்றனர்.

......இல்லோர் கையற
நீ நீடுவாழிய நெடுந்தகை

"இல்லை என்று சொல்கின்ற ஏழைகள் இல்லாது போகும்படி செங்கோலோச்சி நீ நெடுங்காலம் வாழ்வாயாக" என்று பாண்டி வேந்தன் நன்மாறனை, மருதன் இளநாகன் என்னும் புலவர் வாழ்த்துகின்றார்.

"ஒருவனுக்கு ஒரு பொழுதே உணவில்லை என்றாலும், அந்த அவல நிலையைத் தோற்றுவித்த ஆட்சி அழியட்டும்" என்கிறார் ஔவைப் பெருமாட்டி.

'பசிக்குப் பகைவன்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற ஈந்தூர் கிழான் தோயன் மாறன் என்ற கொடை வீரன் ஒருவனைப் புறநானூற்றில் பார்க்கிறோம். உணவின்றி வயிறு காய்ந்து தன்னிடம் வந்த ஒருவனை கொல்லனுக்குக் காட்டி, "இதோ பசியால் வாடும் இவனது வயிற்றைப் பார்! இவனை இந்தக் கதியில் வைத்து வாழும் உலகத்துடன் போராடிப் பொருள்தேடி இவனுடைய பசியைத் தீர்க்க எனக்கு கூர்பொருந்திய வேல்களைச் செய்து கொடு" என்று கேட்கின்றான் பசிக்குப் பகைவன்.

யாந்தன் னிரக்குங் காலைத் தானெம்
உண்ணா மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசி னெனவே

என்ற புறநானூற்று (189) வரிகளில் பசிக்குப்பகைவனின் தனியுடைமை எதிர்ப்புணர்ச்சியைப் படம்பிடித்துக்காட்டு கின்றார் புலவர் மதுரைக் குமரனார்.

"தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதியாரின் பாடலும் மதுரைக் குமரனாரின் கருத்தையே எதிரொலி செய்கின்றது. ஏழை என்றும் செல்வர் என்றும் வர்க்க வேற்று மையை நிலைநிறுத்தி ஏழைக்குத் தானம் தரும்படி செல்வ ருக்கு மனுப்போடும் மானங்கெட்ட நிலை சங்ககாலத் தமி ழகத்தில் இருந்ததில்லை. ஏழ்மை என்பதே இல்லாமல் ஒழியும் நிலையையே எல்லோரும் விரும்பினர். மக்களுடைய வறுமைக்குக் கடவுளைக் காரணம் காட்டாது மன்ன னையே பொறுப்பாக்கினர் சங்க காலத் தமிழர்.

புராண காலத்திற்குப் பிறகுதான் தரித்திரத்திற்குத் 'தலைவிதி' காரணமாகக் கூறப்பட்டது. கோயில்கள் தோறும் குடியேறியுள்ள சனீசுவரனைச் சுற்றினால் தரித் திரம் போகும் என்றும் ஆறுதல் கூறப்பட்டது. சமுதாய வளர்ச்சி விதிக்கும், பொருளாதார சாத்திரத்திற்கும் முரண்பட்ட இந்த மூட நம்பிக்கையினால்தான் தரித்திரம் சாகாவரம் பெற்று விட்டது!

ஒரு பண்டத்தை மற்றொரு பண்டத்திற்கு விற்கும் பண்டமாற்று முறை வழக்கத்தில் இருந்தவரை நாட்டில் பஞ்சமும் பட்டினியும் அதிகரிக்கவில்லை. வானம் பொய்க் கும் காலத்திலன்றி, வறுமை 'பஞ்ச'மாக வளர்ந்ததில்லை. ஏனெனில், பண்டங்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் தேக்கிவைக்க முடியாது. மேலும், காடுகள் செழித் திருந்த காரணத்தால், அந்நாளில் பருவ மழையும் தவ றாது பெய்தது. நிலத்தில் நெல் முப்போகம் விளைந்தது. உழைத்து உண்பதே மதம்; உழைக்காமல் உண்ணும்

சோம்பல் மதத் துரோகம் என்ற நல்ல நெறி நாட்டில் நிலவியது. எனவே, பண்டங்களைத் தேவைக்கதிகமாகத் தேக்கி வைக்கும் செல்வமுடையாளர் தேசத்தில் இல்லை. செல் விருந்தோம்பி வருவிருந்து பார்ப்பது விருந்தோம்பும் பண்பாடாக இருந்தது. அந்நாளில், போக்குவரத்து சாத னங்கள் அதிகம் இல்லாததால் பிறநாட்டு மக்கள் அதிக அளவுக்கு தமிழ்நாட்டில் குடியேற வாய்ப்பில்லை, வசதியு மில்லை. ஆகவே, தமிழ் நாட்டின் வளம் பெரும்பாலும் தமிழர்களுக்கே பயன்பட்டது.

பிற்காலத்தில் இந்த நிலைமாறி பண்டத்தைப் பணத் துக்கு விற்பது வாங்குவது என்ற முறை ஏற்பட்ட பிறகு தான் பட்டினியும் பஞ்சமும் தலைவிரித்தாடத் தொடங் கின. பண்டங்களைப் போலல்லாமல், பணத்தை அதிக அளவுக்கு மிக நீண்ட காலத்திற்கு சேமித்து வைக்க சந்தர்ப்பமிருப்பதால் தனிவுடைமையாளர் பெருகினர்; கூடவே தரித்திரமும் பெருகியது.

இதனால் ஏற்பட்ட கேடுகளைப் போக்குவதற்காகத் தான் கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும், இறந்துபோன பிதுர்க்களின் பெயராலும், தான தருமம் செய்யும்படி புலவர் பெருமக்கள் போதனை புரிந்தனர். இடைக்காலத்தில் தான், இந்தத் தரும உபதேசங்கள் அதிகரித்தன. ஏழைகளின் அல்லல்களைக் குறைத்து ஆறுதல் அளிக்க அற நிலையங்கள் ஏற்படுத் தப்பட்டன; சத்திரங்களும், சாவடிகளும், கோவில்களும், மடங்களும் தோன்றின. ஆயினும், வறுமை கொஞ்ச மேனும் குறையவில்லை. பசியின் கொடுமையை இலக் கியங்களில் படித்தால் நமது கண்ணீரும் வற்றி செந் நீர்த் துளிகள் சிந்தும்! 'பசிவந்திடப் பத்தும் பறந்து போம்' என்ற ஒரு பழமொழியே உணர்த்தும் பசியின

கொடுமையை! வறுமையின் சின்னமாகவும், சிகரமாகவும் விளங்குவது பசி ஒன்றுதான். இந்தப் பசியினைப் போக்கப் புலவர்கள் பலர் பலவிதமாகப் பரிகாரம் கூறினார்கள்.

மதுரைக் கூலவாணிகன் சாத்தனார், 'மணிமேகலை' என்னும் காப்பியத்தில் அட்சய பாத்திரத்தைக் கொண்டு பசிப்பிணி போக்கும் அற்புதத்தைக் கூறுகிறார். இன்று அட்சய பாத்திரத்தைக் காப்பியத்தில் காணலாம் கையில் பெற முடியாதே!

மற்றும், பல புலவர்கள் ஈதல் அறத்தை எடுத்தோதினார்கள்! அந்த ஈதல் அறம் ஏட்டில் இருக்கின்றதேயன்றி, நாட்டில் நடக்கவில்லையே!

ராமலிங்க வள்ளலார் ஏழை மக்களின் அல்லலை நினைந்து அழுதழுது பாடினார்.

உள்ளலேன் உடையார் உண்ணவும்
வறியார் உறுபசி உழந்து
வெந்துயரால்
வள்ளலே நெஞ்சம்
வருந்தவும் படுமோ

என்று கடவுளிடம் முறையிட்டுக் கதறி அழுதார். ஏழைகள் நிலையை நினைக்குந்தோறும்,

கொள்ளலேன் உணவுந்
தரிக்கிலேன் காயம் இந்தக்
குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்

என்று தெய்வத்திற்கு மனுப்போடுவதோடு திருப்தி அடைந்து விட்டார். இல்லறந் துறந்த நல்லற ஞானியான வள்ளலாரால் வேறு என்ன செய்ய முடியும்! பசிப்பிணி போக்க அவர் கண்ட மருந்து கடவுளின் கருணைக்கு மனுப்போடுவது!

செல்வத்தைத் தேவைக்கு அதிகமாகத் திரட்டிச் சேமித்து வைக்கும் சிறுமதியாளர்கள்தான் வறுமைக்குக் காரணமாகின்றனர். இன்று பாங்கில் சேமித்து வைப்பதுபோல பாங்க் இல்லாத பண்டை நாளில் பள்ளம் தோண்டிப் பணத்தைப் புதைத்து வைக்கும் வழக்கம் இருந்தது. பக்கத்தில் ஒருவன் பட்டினி கிடப்பதைப் பார்த்தும் எடுத்துக் கொடுக்கும் இரக்க நெஞ்சமின்றிப் புதைத்து வைக்கும் பாவிகளைப் பார்த்து, "பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும் கேடுகெட்ட மானிடரே!" என்று ஏசிப் பாடினர் இடைக்காலப் புலவர்கள். அதுவும் பலன் தரவில்லை. இந்த நிலையைக் கண்ட கம்பர், சமூகத்தையே மாற்றியமைக்க வழிகாட்டினார். தனியுடைமையாளர் இருக்கும்வரை தரித்திரம் போகாதென்பதை அவர் உணர்ந்தார். ஆகவே, தேவைக்கதிகமாகச் சேமித்து வைக்கும் மூடத்தனத்துக்கு முடிவு கட்ட வழிகாட்டினார்.

"அயோத்தியில், கொள்வாருமில்லை கொடுப்பாருமில்லை" என்கிறார் கம்பர். ஆம்; ராமன் பிறந்த அயோத்தியில் 'இல்லை' என்று கையேந்தி இரக்கும் ஏழையுமில்லை. அந்த ஏழைக்கு எடுத்துக் கொடுக்கும் செல்வருமில்லை என்கிறார் கம்பர். அது, ராமன் காலத்து அயோத்தியுமல்ல; கம்பர் கண்ட தமிழகமுமல்ல. கம்பரின் கற்பனையிலெழுந்த சமதரும சமுதாயமே யாகும். வர்க்க பேதமற்ற சமதரும ஆட்சியில்,

கள்வா ரிலாமை பொருட்காவலுமில்லை யாதுங்
கொள்வா ரிலாமைக் கொடுப்பார்களு மில்லை

என்ற நிலையில், எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் பெற்று இன்பவாழ்வு வாழமுடியும் என்பது கம்பரின் நம்பிக்கை.

பழைய இலக்கியங்கள் அனைத்துமே; அவற்றிலுள்ள கருத்துக்கள் அவ்வளவுமே சமதரும சமுதாயத்திற்குப் பயன்படக் கூடியவை என்று நான் சாதிக்கவில்லை. சங்க கால இலக்கியங்களிலும் தள்ளத்தக்கவை உண்டு. அது போலவே, புராண இலக்கியங்களிலும் கொள்ளத்தக்கவை சில உண்டு. பண்டைக் காலத்தில் வாணிபம் பண்ட மாற்றுமுறையில் நடைபெற்றதாலும், தமிழகத்தின் வளம் தமிழருக்கே பயன்பட்டு வந்ததாலும் சங்ககால இலக்கியங்களில் பொருளாதாரச் சீர்கேடுகள் அதிகமில்லை. சிறப்புக்களே நிறைந்திருக்கின்றன. ஆகவே, சமதரும சமுதாயத்தை அமைக்க விரும்புவோர் சங்ககாலத் தமிழ் இலக்கியங்களைப் புறக்கணிக்கக் கூடாது. அவற்றை நன்கு ஆராய்ந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

# போர்க்களப் புலவன்

வான்புகழ் கொண்ட வள்ளுவர், கவியுலகச் சக்கரவர்த்தி கம்பர், புரட்சிக்கவி இளங்கோ ஆகிய முப் பெரும் புலவர்களைப் பெற்றெடுத்த பெருமை தமிழகத் துக்கே உரிமை.

யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை, உண்மைவெறும்
புகழ்ச்சி யில்லை

என்றார் பாரதியார். வள்ளுவரைப் போன்று சமுதாயத்தின் எல்லாத் துறைகளுக்கும் பயன்படக் கூடிய நீதிநூல் எதுவும் எழுதவில்லை. கம்பரைப் போன்று பன்னீராயிரம் கவிதைகளை மழையாகப் பொழியவில்லை. இளங்கோவைப் போன்று மாபெரும் காப்பியம் செய்யவில்லை. அப்படி இருந்தும், அந்த முப்பெரும் புலவருக்கும் இல்லாத வகையில் பாரதிக்கு நாடெங்கும் விழா நடக்கிறது. பண்டிதரேயன்றி, பாட்டாளி மக்களும், "பாரதி எங்கள் கவி" எனப் பாராட்டுகின்றனர்.

தமிழர் தனி இனத்தவர்; தமிழகம் தனி நாடு. ஆகவே, தமிழருக்கென்று தனிப் பாதையுண்டு; பண்பு உண்டு. பாரதியார் தமிழர் பாதையில் சென்று தமிழ்ப் பண்புவழி பிரசாரம் செய்தார்.

"வந்தேமாதரம் என்போம்"

எனக் கூறிய பாரதி, அடுத்த மூச்சிலேயே,

"எங்கள் மாநிலத் தாயை
வணங்குதும் என்போம்"

என்று முன்னதன் பொருளைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுத்தார். ஆம், தமிழன் எந்தக் கருத்தைச் சொன்னாலும், அதைத் தமிழருக்குப் புரியும் மொழியில் சொல்ல வேண்டுமென்பதே பாரதியாரின் கருத்து.

"ஜேய் ஹிந்த்" என்று சொல்லக் கேட்டாலே காது குளிர்கிறது தேசிய விரோதிகளுக்கு! அதை, "இந்தியா வெல்க" என்று தமிழில் சொல்லுங்கள் என்றால், சீற்றம் வருகிறது சில தேசியத் தோழர்களுக்கு! பிற மொழியை வெறுப்பது, உண்மைத் தமிழ் உணர்ச்சியன்று; அது போன்றே தாய்மொழியை மறந்து புரியாத மொழியில் கோஷிப்பதும் தேசியமன்று.

தமிழ் நாட்டின்பால் தனிப்பற்றுக் கொள்வது பாரத நாட்டின் ஒற்றுமைக்குப் பகை என்று பேசுகின்றனர் சிலர். அப்படியே, பாரத நாட்டை நேசிப்பவன் தமிழினத்தின விரோதி என்று ஏசுகின்றனர் வேறு சிலர். மொழிவழி இன உணர்ச்சியும், நிலவழி நாட்டுணர்ச்சியும் வெவ்வேறானதாயினும், ஒன்றுக் கொன்று விரோதமானவையல்ல. இதை,

வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு

என்ற பாடலில் மிகத் தெளிவாக வற்புறுத்துகின்றார் பாரதியார். முதற்கண் தமிழை வாழ்த்தி, பின்பு தமிழரை வாழ்த்தி, அப்புறம் பாரத நாட்டை

வாழ்த்துகிருர். இந்தப் பாடல் இன்றைய தேசியவாதிகளுக்கு பாரதியார் கற்றுத்தரும் பாலபாடம் எனலாம்.

“அண்ணன் தம்பியாஞலும், வாயும் வயிறும் தனித்தனிதான்” என்பது பழமொழி. அதுபோல, தமிழரல்லாத ஏனைய மொழிவழி இனத்தார், தமிழருக்கு அண்ணன் தம்பிகள்தான். ஆயினும், “தமிழ் நாடு” என்று நினைக்கின்றபோதுதான் தமிழர் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும், ஒரு தனி உணர்ச்சி ஏற்படுகிறது; ஊக்கம் பிறக்கிறது. தமிழருக்கு மட்டுமல்ல—பிற இனத்தாருக்கும் அப்படித்தான்! தன்னை “வங்காளி” என்று நினைத்துக் கொள்ளும்போதுதான் வங்க நாட்டாரின் உள்ளத்திலே உவகை பொங்குகிறது. இந்த இன உணர்ச்சியை மறைக்காமல் வெளியிடுகிருர், பாரதியார்.

பாருக்குள்ளே நல்லநாடு
எங்கள் பாரத நாடு

என்று பாடிய பாரதியாரே,

செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

என்றும் பாடுகிருர்.

ஆம், இன உணர்ச்சியுள்ள தமிழனுக்கு, வேங்கடத்துக்கு வடக்கேயுள்ள பாரத நாடு, பகை நாடன்று; உறவுக்குரிய நல்ல நாடுதான். பகையுணர்ச்சி யற்ற தமிழனுக்குப் பாரத நாட்டைநினைக்கின்றபோது, உள்ளத்திலே உவகை பிறக்கிறதென்பது உண்மையே. ஆனல், தமிழ் நாட்டை நினைக்கின்ற போதோ, அவனது மூச்சிலே ஒரு சக்தி பிறக்கிறது.

தமிழ் நாடு, நம்மைப் பெற்றெடுத்த தாய்க்குச் சம மென்ருல், பாரத நாட்டை நம்மைப் போற்றி வளர்க்கும் செவிலித் தாயெனக் கூறலாம். ஈன்ற தாயைப் போன்றே வளர்த்த செவிலியும் சேயின் அன்புக்குரியவள்தான்.

செந்தமிழ் நாடு, நமது முந்தையோர் நாடு மட்டுமல்ல; தந்தையர் நாடு என்றும் பாடுகிருர் பாரதியார். இதன் பொருளறியாமல், "பாரதியார் ஆரியராதலால், தமிழ் நாட்டைத் தந்தை நாடென்கிருர். அவருக்குத் தாய நாடு வட நாடு போலும்!" என்று வம்பளக்கின்றனர் சிலர்.

பாரதியார் தமிழ் நாட்டைத் தந்தையர் நாடெனக் கூறியது ஓரிடத்தில் தான். பல விடங்களில் தாய் நாடென்றே கூறித் தலைவணங்கிப் போற்றுகிருர்.

சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவுபலவினுஞ் சென்றேறி — அங்கு
தங்கள் புலிக்கொடி மீன் கொடியும்
சால்புறக் கண்டவர் தாய் நாடு

என்றும்,

தமிழ்த் திரு நாடுதன்னை — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா

என்றும் பாடியிருப்பதை மறுப்பார் யார்? அது மட்டுமா? 'தமிழ் நாடு' என்ற சொல்,

அமிழ்தின் இனியதடி பாப்பா

என்று வாயினிக்கக் கூறுகிருர். மற்றும், தமிழ் நாட்டோடு பாரதியாருக்கு—ஆம்—பார்ப்பன சாதியில் பிறந்த பாரதியாருக்கு உள்ள உறவு இன்று, நேற்று முளைத்த தல்ல. தொன்று தொட்டு இன்று வரை தொடர்ந்து வருவது என்பதை,

....................நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா

என்று பெருமையோடு பேசுகின்றார்.

பாரதியார் 'புரட்சிக் கவி' எனப் போற்றப்படுகிறார். அது பொய்யல்ல; உண்மைதான். ஆனால், அவருடைய புரட்சி உள்ளத்தை எதிலே காண்பது?

காலா! உனைநான் சிறு புல்லென மதிக்கின்றேன்;
என்றன்
காலருகே வாடா! சற்றே உனை மிதிக்கின்றேன்.

என்றாரே, அந்தக் கடுஞ் சொற்களிலா?

பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா !—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா

என்றாரே, அந்த வன் சொற்களிலா?

தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

என்றாரே, அந்தச் சுடு சொற்களிலா? இல்லை, இல்லை. 'உயிருண்ணும் காலனை மிதிப்பேன்'' 'பாதகம் செய்வோர் முகத்தில் உமிழ்வேன்', 'உழைப்போருக்கு உணவுதர மறுக்கும் உலகினை அழிப்பேன்' என்ற வாசகங்களெல்லாம் பாரதியாரின் வேதனை உள்ளத்திலிருந்து வெளிவந்த வெறியூட்டும் சொற்கள். ஆனால், புரட்சி என்பது ஆவேசமல்ல; அறிவில் விளையும் மாறுதல்.

பாரதியார் இன்றைய சமுதாயத்தின் ஒவ்வொரு துறையிலும் மாற்றங் காண விரும்பினார்.

பொருளாதாரத் துறையில், தனியுடைமையைத் தகர்த்தெறியும் பொதுவுடைமையை வேண்டினர்.

அரசியல் துறையில், முடியரசுக்கு முடிவு கட்டும் குடியரசை விரும்பினர்.

சமுதாயத் துறையில், ஆண்—பெண் என்ற வேற்றுமையை விலக்கி, ஏழை-பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வைப் போக்கி, பண்டிதர்—பாமரர் என்ற பாகுபாட்டை நீக்கி மனிதர் யாவரும் சரிநிகர் சமானமாக வாழும் நிலையைத் தோற்றுவிக்க விரும்பினர்.

அத்தகைய ஒரு நல்ல சமுதாயத்தை அமைப்பதற்கான வழி வகைகளையும் வரையறுத்துக் கூறினர்.

பாரதியார், கடவுள் நம்பிக்கை கொண்டவர். ஆகவே, தமக்கு வருத்தம் நேர்ந்த போதெல்லாம் கடவுளை நோக்கி வரம் வேண்டினர். ஒரு சமயம் காளி தேவியை நோக்கி கவிதைத் திறம்பெற வரம் வேண்டினர். எதற்காக? தம் பாட்டுத் திறங்கொண்டு பணம் சேர்க்கவா? இல்லை.

பாட்டுத் திறத்தாலே—இவ் வையத்தைப்
பாலித்திட வேணும்

என்றே வரம் வேண்டினர்.

மற்றோர் சமயம் சர்வேசனை நோக்கி,

மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவுங் காண்கிலையோ?

என்று கப்பலோட்டிய தமிழர் சிறையில் பட்ட இன்னலை நினைத்துக் கண்ணீர் விட்டுக் கதறினர்.

பின்னொரு சமயம், பிஜித் தீவின் கரும்புத் தோட்டத்திலே கண்ணகி வழிவந்த பெண்ணனங்குகள் படும் கஷ்டத்தை நினைந்து,

பெண்ணென்று சொல்லிடிலோ—ஒரு
பேயும் இரங்கும் என்பார்; தெய்வமே! நினது
எண்ணம் இரங்காதோ ?

என்று, வந்தனை வழிபாட்டுக் குரிய தெய்வத்தை நிந்தனை செய்து பாடினர்!

தமிழ் ஒரு பெருங்கடல் என்ருல், பாரதி இலக்கியம் அக்கடலிலே மிதந்து செல்லும் ஓடமெனலாம். தமிழ்க் கடலில், கம்பன் கவிதை—இளங்கோவின் காவியம்—வள்ளுவனின் நீதிநூல்—வள்ளலாரின் அருட்பா போன்ற பல ஓடங்கள் மிதந்து செல்கின்றன. எல்லா ஓடங்களும் நமது மதிப்பிற்குரியவைதான்.

பாரதியார், தமிழ்க் கவிஞர் மரபிலே இறுதியானவர் அல்லர்; அவரினும் திறமைமிக்க கவிஞர்கள் இன்னும் எத்தனையோ பேர் தோன்றப் போகிருர்கள். ஏன்? இப்போதே தோன்றியிருக்கிருர்கள். அவர்களை எல்லாம் ஊக்கி, உற்சாகம் தந்து உலகத்திற்கு அறிமுகப்படுத்துவோமாக!

# விடுதலை இந்தியாவுக்கு பாரதியின் செய்தி

ஆண்டுதோறும் ஆகஸ்டு 15-ல் நாம் விடுதலை விழாக் கொண்டாடுகிறோ மல்லவா? அப்போதெல்லாம் பாரதியாரும் நம்மோடு சேர்ந்து விடுதலை விழாக் கொண்டாடுகிறார்:

பறைய ருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை
பரவ ரோடு குறவ ருக்கும் மறவ ருக்கும் விடுதலை

ஆம்! சமூகத்தின் அடித்தளத்திலே சிக்கி அல்லல்படும் பழங்குடி மக்களுடன் கை கோத்து நின்று விடுதலை விழாக் கொண்டாடுகிறார் பாரதியார். அவரது விடுதலைக் களிப்பிலே வருங்கால வாழ்வுக்கான விளக்கமும் இருக்கிறது.

திறமை கொண்ட தீமை யற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ் மிந்த நாட்டிலே

என, வாழ வழி வகுத்துக் காட்டி வாழ்த்து கூறுகிறார்.

"ஆலைகள் வைப்போம்; கல்விச் சாலைகள் வைப்போம்", "பட்டினி லாடையும் பஞ்சிலுடையும் பண்ணி மலைகளென வீதி குவிப்போம்" என்ற வரிகளில் தாம் காணும் "திறமை மிக்க தொழில்" எது என்பதைத் தெளிவாகக் கூறுகிறார் பாரதியார்.

திறமை மிக்க தொழில் மட்டும் போதாது; தீமையற்ற தொழிலாகவும் இருக்க வேண்டும் என்றும் சேர்த்துச் சொல்லியிருப்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். விஞ்ஞானத் துறையில் கண்டு பிடிக்கப்பட்ட திறமை மிக்க தொழில்களில் பல மக்களுக்குத் தீமை பயப் பனவாக முடிந்திருப்பதை யார் மறக்கமுடியும்?

பாரதியார், மதத்தை மறந்து மொழிவழி இனங்களை எண்ணி இந்தியாவில் மொழிவாரி அரசுகள் அமைந்து விட்டதாகக் கற்பனை செய்கிறார். அந்த அரசுகளின் படை கள் தனித்தனியே அணிவகுத்து, இந்தியாவின் ஒருமை யைக் காக்க உறுதி மேற்கொள்வதையும் உணர்த்து கிறார்.

'தாயின் மணிக்கொடி பாரீர்!' என்ற பாடலைப் பாருங் கள்: செந்தமிழ் நாட்டு மறவர்; சிந்தை துணிந்த தெலுங் கரின் சேனை; பஞ்ச நதி பாயும் பாஞ்சாலப் படையினர்; மாற்றலர் அஞ்சும் மராட்டிய வீரர் என இந்தியாவிலுள்ள பல இனத்தவரின் படைகளும் தனித்தனி அணிவகுத்துத் தாயின் மணிக்கொடியின் கீழ் நிற்பதாகக் கற்பனை செய்கி றார். அவை, பகை நாடுகளின் படைகளா? இல்லை! அவை ஒன்றோடொன்று மோதுகின்றனவா? அதுவும் இல்லை. "எங்கள் நல்லுயிர் ஈந்தும் இக்கொடியினைக் காப்போம்!" என்று ஒன்றுபட்ட குரலெழுப்பி உலக நாடுகளுக்கு அறி விக்கின்றனவாம். பாரதி காணும் இந்தக் காட்சி இந்தி யாவில் அமையும் நாள் எந்நாளோ?

நம் இந்திய மக்களின் தாயகம் விடுதலை பெற்றது உண்மை. ஆனால், தாயினமான பெண்ணினம் விடுதலை பெற்றதா? இல்லை. அவர்கள் வாயிருந்தும் ஊமைகள். பெண்ணினம் வாய் பெற்றது அடுப்பூதுவதற்கே யன்றி, அரசியல் பேசுவதற்கல்ல என்பதுதான் ஆணினத்தின்

தீர்ப்பு. அந்தத் தீர்ப்பைத் தீயிலிட்டுப் பொசுக்கி, பாரதி கண்ட பெண்ணினம் செய்யும் உரிமைப் பிரகடனத்தைக் கேளுங்கள்:

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டும் அறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி !

சமூகத்தில் புகுந்த சதிகளை நிலைநிறுத்த சாமியைத் துணைக்கிழுப்பர் சாத்திரவாதிகள். ஆணினத்துக்குப் பெண்ணினம் அடிமைப்பட்டு அறிவிழந்து நிற்பது ஆண்டவனின் தீர்ப்பென்றும் கூறுவர். பாரதியாரோ பெண்ணினம் பெருமையை இழந்ததற்குக் காரணம், சாமியல்ல; சாத்திரம் பேசும் சழக்கர்கள் என்கிறார்.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர்—நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்.

பெண்ணுக்குப் பெருமை தந்தவர் தமிழர். கல்வியைக் கலைமகள் என்றும், செல்வத்தைத் திருமகள் என்றும், கற்பனை செய்தனர் தமிழ்ப் புலவர்கள். ஆம்; ஆக்க வழிப்பட்ட கலைகளையெல்லாம் அம்மை வடிவில் வணங்கியதே ஆதித் தமிழர் பண்பாடு.

ஆனால், பிற்காலத்தில் இந்தியாவில் குடியேறிய பிற இனத்தவரால், அவர்தம் பேயுரைகளால், பெண்ணினத்தின் பெருமை குறைந்தது; உரிமை மறைந்தது. 'அடுப்பூதும் மங்கைக்குப் படிப்பு எதற்கு?' என்ற பழமொழி தமிழகத்தின் இழிமொழி ஆயிற்று. இந்தக் கொடுமை தொலைய தமிழ்ப் பண்பாட்டு வழி நின்று,

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்;

என்று போர்ப் பிரகடனம் செய்கின்றனர் பாரதி கண்ட புதுமைப் பெண்கள். அதோடு நில்லாமல்,

வைய வாழ்வு தன்னில் எந்த வகையி னும் நமக்குள்ளே
தாதர்என்ற நிலைமை மாறிஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக வாழ்வம் இந்த நாட்டிலே

என்று,போரில் வெற்றி பெற்ற பிறகு தாங்கள் அமைக்கவிருக்கும் புதிய சமுதாயத்தைப் பூரிப்போடு அறிவிக்கின்றனர்.

ஆணும் பெண்ணும் நிகரெனக், கொள்வதால்
அறிவி லோங்கி, இவ் வையம் தழைக்குமாம்

என்று சமதர்ம சமுதாயத்திற்கு வாழ்த்துக் கூறுகிறார்.

"பறையன் என்போன் கீழ் சாதி. ஏனெனில், பண்டு செய்த பாவத்தின் பயனே பறைச் சென்மம். அவனைத் தொடவும் கூடாது." இது, சாதி வெறியர்களின் சாத்திர வாதம். ஆம்; மக்களின் நலனுக்கு எதிரான வாதம். ஆனால், 'பாவம்' என்ற சொல்லை மக்களை ஏய்ப்போருக்கு எதிராகப் பயன்படுத்துகிறார் பாரதியார்.

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்

சாதிக்கோர் நீதி கூறி ஏழை மக்களை இழித்துப் பேசி ஏய்த்துப் பிழைப்பதே பாவம்; அப்படிச் செய்வோரே பாவிகள். அத்தகைய,

பாதகம் செய்பவரைக் கண்டால்—நீ
பயங்கொள்ள லாகாது பாப்பா

மோதி மிதித்துவிடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!

என்று சுதந்திர இந்தியாவின் பாப்பாவுக்குச் செய்தி அனுப்புகிறார் சீர்திருத்தக் கவி பாரதி.

இந்தியா ஏகாதிபத்தியக் கொடுமையினின்று மட்டும் தான் விடுதலை பெற்றது. ஆனால் உள்நாட்டு சுரண்டல் வாதிகளின் சுயநலச் சூழ்ச்சிக்காரர்களின் கொடுமையிலிருந்து இன்னும் விடுதலை பெறவில்லை. உழுது விதைத்து அறுப்பாருக்கு உணவில்லாக் கொடுமை ஒழியவில்லை. சமயமுளபடிக் கெல்லாம் பொய்கூறிப் பிழைக்கும் சதிகாரர் ஆதிக்கம் சாயவில்லை.

சோவியத் சோஷயலிசக் குடியரசு பற்றி பாரதி இயற்றிய பாடலில்,

ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்

என்று ஜாரின் வீழ்ச்சியைக் கூறிய பாரதி,

இமயமலை வீழ்ந்தது போல் வீழ்ந்து விட்டான்
ஜாரரசன்; இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசடவென்று சரிந்திட்டார்

என்கிறார். ஆம்; கொடுங்கோலன் ஜாரின் ஆட்சி அழிந்தது; அதோடு, அவனது கொடுங்கோலுக்கும் முதலாளி வர்க்கத்தின் கொள்ளை முறைக்கும் தூபம் போட்டுத் துதி பாடிய பொய்யர்களும் பொசுங்கினராம்.

அப் பொய்யருக்கு அறங் கொன்ற சுமடர் என்று பாரதி தந்த பட்டம் பொருந்துவதுதானே! தமிழகத்துச்

சந்தர்ப்ப வாதிகளைச் சிந்தையில் கொண்டே பாரதி பாடினார் போலும்;

ருஷியாவில் கண்ட அந்த முழு விடுதலை இன்னும் இந்தியாவுக்குக் கிடைக்கவில்லை. ஏகாதிபத்தியம் காலி செய்த இடத்தில் இந்திய முதலாளித்துவம் ஏறிக் கொலு வீற்றிருக்கிறது. இங்கும் சமயமுள்ள படிக்கெல்லாம் பொய் கூறி அறங் கொல்லும் சுமடர்கள் அதற்குத் துதி பாடு கின்றனர். எனவே, அரசியல் விடுதலைபெற்ற இந்தியா, இன்னொரு பொருளாதார விடுதலைப் புரட்சிக்குத் தயா ராகி வருகிறது. அந்தப் புரட்சிக்கும் இதோ கவி பாடு கிறார் பாரதியார்.

தனியொருவனுக் குணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

* * * *

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர் பாய்ச்சி மாய மாட்டோம்—வெறும்
வீணருக்கு உழைத்துடலம் ஓய மாட்டோம்''

இதுவே, விடுதலை இந்தியாவின் பாட்டாளி மக்களுக்கு பாரதி விடுக்கும் செய்தி.

வயிற்றுக்கு உணவற்ற மக்களைப் பார்த்து, 'வந்தே மாதரம்'—இந்தியா வாழ்க'' என்று வாய் வலிக்கக் கூவு கின்றனர் தேச பக்தர்கள். இந்த நிலை கண்டு பாரதி மனமுடைந்து பாடுகிறார்.

தாயைக் கொல்லும் பஞ்சத்தை
தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா—கிளியே
வந்தே மாதர மென்பார்

பஞ்சத்தும் நோய்க ளிலும்
பாரதர் புழுக்கள்போல்
துஞ்சத்தம் கண்ணாற் கண்டும்—கிளியே
சோம்பிக் கிடப்பா ரடி!

*வாழப் பிறந்த மக்கள் பசியால் வேதனையுற, உணவுப் பொருளைப் பதுக்கி வைக்கும் கள்வர்களுக்குப் பாரதி அனுப்பும் செய்தி,*

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ?

*என்பதாகும். 'ஒளித்து வைக்கும் வழக்கம் ஒருவரிடத்தும் இல்லை; உற்பத்திக் குறைவுதான் காரணம்' என்று கூறி ஏய்ப்போருக்கு,*

இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு
கனியும் கிழங்கும் தானியங்களும்
கணக்கின்றித் தரு நாடு

*என்று நாட்டின் நிலவளத்தை நினைவுறுத்துகிறார்.*

*'எல்லாம் சரி; எதிர்கால வாழ்வுக்கு எடுத்து வைக்க வேண்டாமா?' என்று இயம்புவோருக்கு,*

வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்!—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்

*என்று கூறி, இயற்கை அன்னைக்கு 'உழைப்பு' என்னும் காணிக்கை செலுத்தி உயிர் வாழும்படி உபதேசிக்கிறார்.*

*பாரதி காட்டிய ஆக்க வழியில் சென்று சுதந்திர இந்தியா சுகம் பெறுமாக!*

# புரட்சிக் கவி பாரதி

தமிழகத்தில் வாழையடி வாழையாகத் தோன்றிவந்த புலவர்களின் திருக்கூட்டத்திலே பாரதியும் ஒருவர். என்றாலும், தமிழுக்குப் புத்தொளியும் புதுமணமும் தந்த புலவர் பெருமக்களிலே பாரதியாருக்குத் தனியிடம் உண்டு.

தமிழைக் கொண்டு, பொருள் சேர்க்கலாம், புகழும் சேர்க்கலாம். ஆனால், பாரதி அப்படிச் செய்யவில்லை. அவர் தமிழைப் போர்க் கருவியாகக்கொண்டு பழமையைச் சாடி, புதுமைக்கு வித்திடும் புரட்சிக் கவியாகத் திகழ்ந்தார்.

உரிமைக்குப் போரிடும் மக்கள் எங்கெல்லாம் உண்டோ, அவர்களோடெல்லாம் தமது உள்ளத்தால் உறவு கொண்டார் பாரதி. அவர் இயற்றிய "மாஜினியின் பிரதிக்கினை", இத்தாலி தேசபக்தர்களின் எண்ணத்தை எடுத்துக் காட்டும் எழுத்தோவியம்.

போரில், வெற்றிபெற்ற நாட்டுக்கே வாழ்த்துக் கூறிப் பாடுவர் புலவரெல்லாம். ஆனால் ஜெர்மனியிடம் போரிட்டு, வீழ்ச்சியுற்ற பெல்ஜியத்துக்கு வாழ்த்துக் கூறினார் பாரதி. ஏன்? அதன் வீழ்ச்சியிலே நீதியின் வெற்றி அடங்கியிருந்த காரணத்தினால். அறத்தினால் வீழ்ந்துவிட்ட பெல்ஜியத்தின் வீரத்தை, முறத்தினால் புலியை ஓட்டும் குறப் பெண்களின் வீரத்தோடு ஒப்பிட்டு வாழ்த்துக் கூறினார்.

ஜெர்மன் படையை ஊடுருவிப் பாய்ந்து, பெல்ஜியப் படை வீரர் போரிட்ட காட்சியை,

மருளுறு பகைவர் வேந்தன்
வலிமையாற் புகுந்த வேளை
'உருளுக தலைகள்; மானம்
ஓங்குகென்றெதிர்த்து நின்றாய்

என்ற வரிகளில் திறம்பட வருணிக்கிறார்.

பாரதியின் சுதந்தர உணர்ச்சி சோவியத் புரட்சியைப் பாடத் தூண்டியது. ஜார் ரஷ்யாவில், மக்கள் சக்தி பொங்கி எழுந்து புரட்சி விளைத்ததை,

மாகாளி பராசக்தி உருசிய நாட்
டினிற் கடைக்கண் வைத்தாள் அங்கே
'ஆகா'வென் றெழுந்தது பார் யுகப்புரட்சி

என்று இதயத் துடிப்புடன் பாடுகிறார். பாரதியாரின் கருத்திலிருந்த பராசக்தி மக்கள் சக்தியேயன்றி மற்றொன் றன்று. ரஷ்யப் புரட்சியின் விளைவாக,

கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்.

ஆம்; கோடானு கோடி கைகள்—ஓயாது உழைத்தும் உணவைக் காணாத கைகள்—கொடுங்கோலன் ஜாரின் கழுத்தைக் குறிபார்த்தபோது, 'அபயம், அபயம்' என்று அலறினானும்! கொடுங்கோலுக்கு மக்கள் சக்தி மன்னிப்புத் தருவது முடியாத காரியம். ஆண்டாண்டு தோறும் அழுது நொந்த மக்கள், அழுகையை ஆவேசமாக மாற்றி அணிவகுத்துப் படை திரண்டால், கொடுங்கோலனுக்குக் கிடைக்குமிடம் அரியாசனமா? அல்ல; படுகுழி.

பாரதி, ஜார் மன்னனின் கொடுங்கோலைத் திறம்பட உணர்த்தத் தேடுகிறார் உவமானம். ஜாருக்கு முன்னம்

கொடுங்கோலர் பலர் அரசியல் அரங்கிலே தோன்றிய துண்டு. ஆயினும், வரலாற்றில் காணப்படும் கொடுங் கோலரின் வரிசையிலே, ஜாருக்கு இணையான பாதகன் எவனுமில்லை. எனவே, இதிகாசத்தில் வரும் இரணியனை ஈடு காட்டுகிறார், பாரதி.

இரணியன்போல ரசாண்டான் கொடுங்கோலன்
ஜாரெனும் பேரிசைந்த பாவி

அவனது ஆட்சியிலே,

சரணின்றித் தவித்திட்டார் நல்லோரும்
சான்றோரும்; தருமந்தன்னைத்
திரணமெனக்கருதி விட்டான் ஜார்மூடன்

என்கிறார். பாவி ஜார்மன்னன் இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்து விட்டானாம். அவன் மட்டுமா வீழ்ந்தான்? அவனைச் சூழ்ந்து,

சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசடவென்று சரிந்திட்டார்

அவர்கள் சரிந்து விழ்ந்த காட்சி,

புயற்காற்றுச் சூறை தன்னில்
திமுதிமென மரம் வீழ்ந்து காடெல்லாம்
**விறகான**

காட்சியாக இருந்ததாம். ரஷ்யப் புரட்சியைக் கண்ணாரக் கண்ட புலவன் கூட இவ்வாறு உணர்ச்சி கலந்த ஓவியத் தைத் தீட்டிக்காட்ட முடியாது.

ஜாரின் அழிவோடு, அவனைச் சூழ்ந்திருந்த சதிகாரக் கூட்டத்தின் நாசத்தோடு, ரஷ்யாவில் முதலாளி வாக்க

சகாப்தம் முடிந்து, உழைப்பாளி மக்களுக்கு உரிமை தரும் புதிய சகாப்தம் தோன்றியதாம்:

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடி யொன்றி லெழுந்ததுபார்!

கொடுங்கோலரசை அழித்து முடித்ததும், அடுத்தபடியாக அரியாசனம் ஏறியவர்கள் மக்களுக்கு நீதி வழங்க அவகாசம் கேட்டார்களா? இல்லை; ஜார் ஆட்சி வீழ்ச்சியுற்ற மறுகணத்திலேயே ரஷ்ய நாடு,

குடியரசென்று உலகறியக் கூறிவிட்டார்
அடிமைக்குத் தளையில்லை
யாருமிப்போ தடிமையில்லை அறிக

என்றூர்களாம். இந்தப் புரட்சிக்குப் பின் ஜார் ரஷ்யா, சோவியத் ரஷ்யாவாக மாறியது. குடியாட்சி—மொழிவாரி இனங்களுக்குச் சுயாட்சி—கிடைத்தது. இந்த மாறுதல்கள் சாமான்யமாகத் தோன்றவில்லை, பாரதிக்கு. 'யுகப் புரட்சி' என்கிறூர் முக்காலமும் உணரும் சக்தி வாய்ந்த முத்தமிழ்ப்புலவர் பாரதி. இதை,

இடிபட்ட சுவர்போலக் கலிவீழ்ந்தான்
கிருத யுகம் எழுக மாதோ!"

என்ற வரிகளில் அறிகின்றோம்.

சோவியத் புரட்சிக்குப் பிறகு, உலகமெங்கும் தோன்றி வெற்றிபெற விருக்கும் பொருளாதாரப் புரட்சிக்கு அடிப்படைதான் ரஷ்யப்புரட்சி என்பதை பாரதி தெள்ளத்தெளிவாக உணர்ந்திருந்தார். அதனுற்றான், தான் பிறந்த இந்திய நாட்டுக்கு வாழ்த்துக் கூறிய போது,

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடமை
ஒப்பிலாத சமுதாயம் உலகத்திற் கொரு புதுமை

*என்ற எண்ணங்களைத் தெரிவித்தே எதிர்கால இந்தியாவுக்கு வாழ்த்துக் கூறிச் சென்றார்.*

"மனிதருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை யினியுண்டோ ?

*    *    *

இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

*பாரதி வாழ்த்திய இந்தியா, தன்னரசு பெற்ற இந்தியா தான். ஆனால், தனிவுடைமைக்குப் பாதுகாப்பு தரும் இந்தியா அல்ல. சுரண்டலுக்கு முடிவு கட்டி சுரண்டப் பட்ட மக்களுக்குச் சுகவாழ்வு தரும் சோஷலிச இந்தியா! அந்த இந்தியாவை உருவாக்கப் பாரதியாரின் பரம்பரை யினராகிய நாம் பாடுபடுவோமாக!*

# சங்கத் தமிழ்

தமிழரிடையே தமிழ்மொழிப் பற்று பெருகி வருகிறது. முன்பெல்லாம், 'தமிழ் இலக்கியங்கள்' என்றாலே ஏளனம் செய்து வந்தனர் ஆங்கிலங் கற்ற மேதைகள். இப்போது, அவர்கள்கூட தமிழின் பெருமையைப்பற்றி உரிமையோடு பேசுகின்றனர்.

தமிழ் இலக்கியங்களைப் பற்றிப் பேசுவதும், ஆராய்வதும் தங்களுக்கே தனியுரிமை என்றெண்ணியிருந்த தமிழ்ப் பண்டிதர் சிலரும் தங்கள் கருத்தைத் திருத்திக் கொள்ளுமளவுக்குக் கட்டாயப்படுத்தப்பட்டு விட்டனர்.

தமிழ் மறையாகிய திருக்குறளில், இங்குமங்குமாக இரண்டொரு குறட்பாக்களை வைத்துக் கொண்டு வள்ளுவர் கருத்துக்கு மாசு கற்பித்தவர்கள்கூட, இப்பொழுது மாநாடுகள் நடத்தி வள்ளுவர் குறளுக்கு வாழ்த்துக் கூறுகின்றனர்.

இத்தகைய மாறுதல்களால் தமிழ் இலக்கித் துறையில் ஒரு மறுமலர்ச்சி தோன்றி விட்டது. இலக்கிய நூல்களைத் தக்க ஆசிரியரிடம் முறையாகப் படித்துப் பயிற்சி பெறும் சிரமமின்றி, உரை நூற்களைக் கொண்டு மூலத்தைத் தாங்களாகவே கற்கின்ற எளிய முறையை எல்லோரும் பின்பற்றுகின்றனர். என்றாலும், சங்ககால இலக்கியங்களைப் பயில்வோர் இன்னமும் மிகச் சிலராகவே இருந்து வருகின்றனர்.

சங்ககாலத் தமிழ் இலக்கியங்கள், புரியாத தமிழில் எழுதப்பட்டிருப்பதாகக் குறை கூறுகின்றனர் சிலர். இது தவறு. தமிழ் மொழியின் வரலாற்றை அறிந்துகொள்ளாததே இந்தத் தவற்றுக்கு அடிப்படைக் காரணம்.

'புரியாத தமிழ்' என ஒன்று எந்தக் காலத்திலும் இருந்ததே இல்லை. சங்ககாலத்திலிருந்து இன்று நாம் வாழும் காலம் வரையில் தோன்றி மறைந்த புலவர் ஒவ்வொருவரும் அவரவர் காலத்தில் பேச்சுவழக்கிலிருந்த தமிழில்தான் நூல் இயற்றினர். தமிழ் இலக்கியங்களை அவை இயற்றப்பட்ட காலங்களுக்கேற்ப வரிசைப் படுத்தி, அவற்றின் மாறுதலை ஆராய்ந்தால் இந்த உண்மை விளங்கும்.

அகநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பாரதியார் கவிதைகள் ஆகிய நூல்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெவ்வேறு காலத்தில் தோன்றியவையாகும். அவற்றில், அகநானூற்றினும் திருக்குறள் எளிதில் விளங்கக் கூடியது. அதனினும் சிலப்பதிகாரம் இன்னும் தெளிவானது. சிலப்பதிகாரத்தினும் கம்பராமாயணம் மிக்க எளிமை வாய்ந்தது. இவையனைத்தையும்விட பாரதியாரின் கவிதைகள் படித்தறியாப் பாமரனுக்கும் கேட்ட அளவிலேயே பொருள் விளங்கும் தன்மையது.

இப்படி, ஒன்றைவிட ஒன்று எளிமையாக இருப்பதற்குக் காரணம் என்ன? மக்கள் பேசும் தமிழ், பிறமொழிகளோடு கலந்து காலத்திற்குக் காலம் மாறி வந்ததேயாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புலவர்கள் இயற்றிய அகநானூற்றையும், சமீபகாலத்திய புலவரான பாரதியார் இயற்றிய கவிதைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அவற்றிடையே காணப்படும் வேற்றுமை மகத்தானதாக இருக்கும்.

சங்ககாலப் புலவர் எவரும் தாம் எழுதிய நூலுக்குத் தாமே உரை இயற்றியதில்லை; அல்லது அவர்கள் காலத்தில் வாழ்ந்த வேறு புலவர் எவருங்கூட உரை எழுதியதில்லை. இலக்கியம் செய்த புலவருக்குப் பல நூற்றுண்டுகளுக்குப் பின் தோன்றிய அறிஞர்களே அந்த இலக்கியங்களுக்கு உரை எழுதினர் என்பது வெள்ளிடைமலை.

சங்க நூல்களுக்கு உரை இயற்றும் வழக்கம் கி. பி. பத்தாம் நூற்றுண்டுக்குப் பின்னரே ஏற்பட்டது. அதாவது கடைச் சங்ககால இலக்கியங்கள் தோன்றிய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரே அவற்றிற்கு உரை எழுதப்பட்டது. இடைப்பட்ட அந்த ஆயிரம் ஆண்டுகளில்பிறமொழிகளின் கலப்பால் தமிழ் மொழி அடைந்த மாறுதல்கள் மகத்தானவை. இதனுல் எண்ணற்ற தமிழ்ச் சொற்கள் வழக்கற்றுப்போயின. ஆகவே, கி. பி. பத்தாம் நூற்றுண்டிலேயே சங்க நூற்களுக்கு உரை இயற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.

புதிதாக இலக்கியப் பயிற்சி பெறுவோர், தமிழ் வரலாற்றின் உண்மையறியாமல் சங்க இலக்கியங்கள் புரியாத மொழியில் இயற்றப்பட்டதாகக் குறை கூறுவதும், பழங்காலத் தமிழ் நூல்களைப் பயின்ற தமிழ்ப் பண்டிதர்கள் பாரதியாரைப் போன்று எளிய நடையில் கவி இயற்றும் தற்காலப் புலவர்களைக் குறைகூறுவதும் வழக்கமாகி விட்டது.

சங்க இலக்கியங்கள்தாம் தமிழினத்தின் உயர்ந்த பண்புகளுக்கு உரைகல் எனலாம். அங்கே மூட நம்பிக்கைகளைக் காண்பது அரிது; உயர்வு தாழ்வு கற்பிக்கும் சாதி வேற்றுமைகளைக் காண முடியாது. அத்தகைய உயர்ந்த இலக்கியங்களைப் படிக்க மறுப்பதும், புரியாத

நூற்களென்று புறக்கணிப்பதும் தமிழினத்தின் பெருமைக்குப் பொருந்தாத செய்கைகளே.

சங்க இலக்கியங்களைத் தள்ளிவிட்டால் அப்புறம் தமிழில் எஞ்சியிருப்பவை வடமொழி நூற்களைத் தழுவி எழுந்த வழிநூற்களேயாம். அவற்றின் கற்பனையின் அழகை அனுபவிக்கலாம்; புலமையைப் போற்றலாம்; வருணனையின் சிறப்பை வாயாரப் புகழலாம். ஆனால், அவற்றில் காணப்படும் செய்திகளை—வற்புறுத்தப்படும் பண்புகளை தமிழருடையதாகக் கொள்ளமுடியாது.

சங்க நூற்களில் காணப்படும் சொற்களில் பல வழக்கிறந்தவை. என்றாலும், அந்தப் பாடல்கள் நம்மால் புரிந்துகொள்ள முடியாதவையல்ல. சான்றாக, புறநானூற்றை எடுத்துக்கொள்வோம்:

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்

என்பது, புறநானூற்றுப் பாடலொன்றின் முதற் பகுதி. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், இப்பாடலின் பொருளைப் புரிந்துகொள்ள முடியாதென்பது உண்மைதான். ஆனால்,

ஆண்டு பல ஆக நரை இல ஆகுதல்
யாங்கு ஆகியர் என வினவுதிர் ஆயின்
மாண்ட என் மனைவியோடு மக்களும்
நிரம்பினர்

எனச் சந்தி பிரித்துப் படித்தால் எளிதாகப் புரிந்து கொள்ளமுடியும். இதில் 'மாண்ட' எனும் சொல்லுக்கு இக்காலத்தில் இறந்த என்றே எல்லோரும் பொருள் கொள்வர். ஆனால், இங்கே 'மாண்' என்ற சொல்லடியாகப்

பிறந்த மாண்பு, அல்லது பெருமை என்றே பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறே புறநானூறு போன்ற சங்கநூற் பாடல்கள் அனைத்தையும் தேவைப்பட்ட விடத்துச் சந்தி பிரித்தும், வழக்கற்றுவிட்ட சொற்களுக்குப் பதவுரை கொடுத்தும் வெளியிட்டால், சாதாரணமாக தமிழில் பிழையின்றி எழுதப் படிக்கத் தெரிந்த எல்லோரும் சங்ககால இலக்கியங்களை எளிதில் படித்துப் பொருள் விளங்கிக்கொள்ள முடியும்.

சங்ககால இலக்கியங்களைப் படித்து அதிலுள்ள செய்திகளை நமது சிந்தையில் கொண்டால், தமிழராகப் பிறந்த நாம் தமிழ்ப் பண்புகளைக் கடைப்பிடித்து வாழ முடியும். தமிழகத்தில் சோஷலிச சமுதாயம் உருவாக வேண்டுமானால், சங்ககால இலக்கிய ஞானம் ஒவ்வொரு தமிழருக்கும் ஏற்பட வேண்டும்.

காதற் பண்பை விரித்துரைக்கும் அகநானூற்றில், ஒரு ஆணும் பெண்ணும் கூடி இல்வாழ்க்கை நடத்துவதற்கு சாதிக்கட்டுப்பாடோ, பொருளாதார உயர்வு தாழ்வோ தடையாக இருந்ததில்லை என்பதை அறிகிறோம். பண்டைத் தமிழகத்தில், மனமொத்த காதல்தான் ஆணும் பெண்ணும் கூடி வாழ்வதற்கு அடிப்படையாயிருந்தது. பெண்ணை வற்புறுத்திக் கட்டிக் கொடுக்கும் வழக்கம் சங்ககாலத் தமிழர் வரலாற்றில் இல்லை.

புராணங்களை மறுப்பதிலேயே பொழுதைப் போக்குவோர், இதிகாசங்களை எதிர்ப்பதிலேயே எண்ணத்தைச் செலுத்துவோர், அவற்றை விட்டுவிட்டு சங்ககால இலக்கியங்களை வளர்ப்பதிலே ஆக்க வழி நின்று திட்டமிட்டுப் பாடுபட்டால்—கலக உணர்ச்சியின்றிக் கலையுணர்ச்சி கொண்டு கன்னித் தமிழ் வளர்த்தால்—சங்ககாலத் தமிழ

ரின் எண்ணங்கள், இக்காலத் தமிழரின் இதயங்களில் இடம் பெற்றுவிடும். இருளை விலக்க விரும்புவோர், அது இருக்கும் இடத்துக்கு ஒளி கொண்டு சென்றால், இருள் தானே விலகுவது திண்ணம். அதுபோல, மூட நம்பிக்கை என்ற இருள் மக்கள் மனதிலிருந்து விலக வேண்டுமாயின், பகுத்தறிவுச் சுடர் வீசும் சங்ககாலத் தமிழ் இலக்கிய ஒளியைப் பரப்ப வேண்டும்.

# சங்கத் தமிழ் வளர்ப்போம்!

'தமிழ்' என்றால் என்ன? எழுத்துக்களின் எண்ணிக்கையா? சொற்களின் ஜோடிப்பா? இல்லை, இல்லை. பண்டு குமரி முதல் இமயம் வரை பரவி வாழ்ந்து, இன்று வேங்கடம் வரையில் குறுகிவிட்ட மக்களின் எண்ணம்தான் தமிழ். அவர்களது வாழ்க்கை லட்சியம்தான் இலக்கியம். ஆகவே, தமிழ் இலக்கியமென்றால், மக்கள் இலக்கியம்— மக்களின் வாழ்க்கை லட்சியம் என்றே பொருள்.

சங்ககாலத் தமிழ் இலக்கியங்கள் மன்னர்களின் மடியில் வளர்ந்தாலும், மக்களிடையேதான் பிறந்தன. அதனாற்றான் அவற்றை 'மக்கள் இலக்கியம்' என்கிறோம். இடைக்காலத் தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலானவை மடங்களில் பிறந்து, மடத் தலைவர்களின் மடியிலே வளர்ந்தன. அவை, மக்கள் இலக்கியங்களல்ல; மத இலக்கியங்கள்.

'சங்க இலக்கியங்கள்' என்றாலே, அவை புரியாத இலக்கியங்கள் எனப் புறக்கணிக்கின்றனர் சிலர். ஆனால், புரிந்து கொள்ள மனமிருந்தால், அவை காலத்தால் பழையவையாயினும் கருத்துக்குப் புதியவையாயிருப்பதைக் காண்பார்கள்.

மக்கள் சமுதாயம் மாண்புற்று வாழ இன்னின்ன கடமைகளைச் செய்ய வேண்டுமெனத் திட்டமிட்டுத் தெரிவிக்கின்றாள் சங்ககாலத் தமிழ்த் தாய் ஒருத்தி!

ஈன்று புறந்தருதல்
　　என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல்
　　தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல்
　　கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல்
　　வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமமுருக்கிக்
　களிறெறிந்து பெயர்தல்
　　காளைக்குக் கடனே

அன்னையால் உடலும், தந்தையால் அறிவும், உலைக் களத்துக் கொல்லனால் வேலும், ஊராளும் வேந்தனால் ஒழுக்கமும் பெற்ற காளையின் கடனே, அமர்க்களத்தில் யானையின்மேல் வேல் எறிந்து அமரில் வெற்றி பெற்று வீடு திரும்புவதாம்! இதுதான் தமிழர் லட்சியம்.

ஒருசமுதாயத்தின் அமைப்பும், அந்தச் சமுதாயமக்களின் தலையாய கடமைகளும், எவ்வளவு அழகாக இந்தப் பாடலில் எடுத்துக் காட்டப் படுகின்றன!

"ஈன்று புறம் தருதல் என் தலைக் கடனே" என்பதால், பெண்களின் கடமை பிள்ளை பெறுவதோடு முடிந்து விடுவதாக நினைக்க வேண்டாம். பெண்ணுக்கும் ஆணைப் போன்றே கடமைகள் பல உண்டு. பண்டைத் தமிழ்ப் பெண் காதல் புரிவாள்; கவிதை எழுதுவாள்; வளையல் அணிந்த கையில் வாளேந்திப் போர் முனைக்கும் செல்வாள். இவை, பெண்ணின் கடமைகள் மட்டுமல்ல – உரிமைகளும் கூட. ஆனால், இவை யாவற்றினும், 'ஈன்று புறந்தருதல்' என்பதுதான் பெண்ணின் தலைக்கடன். இது,

ஆணினத்தின் சதியல்ல; மனித சமுதாயத்திற்கு இயற்கை வகுத்த விதி.

'இலக்கியத்தைப் பிரசாரத்திற்குப் பயன்படுத்துவதா?' என்று எரிச்சலுடன் கேட்கின்றனர் சிலர். இவர்களை இலக்கியத்தின் வரலாறு அறியாதவர்கள் என்று கூறுவது வாய்மையைத் தெரிவிப்பதே ஒழிய, வசை மொழியல்ல, சங்ககாலத்திற்குப் பிறகு தோன்றிய எந்த இலக்கியத்தை எடுத்துக் கொண்டாலும் அவை அனைத்தும் ஏதாவது ஒரு கொள்கையைப் பிரசாரம் செய்வதற்கு எழுதப்பட்டதாகவே இருக்கும். சிலப்பதிகாரத்தை நோக்கினுல், அங்கே பெண்ணினத்தின் மறக் கற்பைப்பற்றிப் பேசக் கேட்கிறோம். புகார்க்காண்டத்தில், 'கானல் வரி'யில் செங்கோலை வாழ்த்துகிருள் மாதவி. மதுரைக் காண்டத்தில், கொடுங்கோலை வீழ்த்துகிருள் கண்ணகி. இவற்றுல், அறக் கற்போடு மறக் கற்பும் பெண்களுக்கு அவசியம் என்ற புரட்சி நெறியைப் போதிக்கின்றுர் இளங்கோவடிகள்.

புத்த மதக் கொள்கையை மக்களிடை பரப்புவதற்காகவே,' மணிமேகலை' என்னும் காப்பியத்தை இயற்றினுர் சாத்தனுர். புறச் சமயங்களை அழித்து சைவ சமயத்தை நிலைநாட்டுவதற்காகவே நாயன்மார்கள் தேவாரம்–திருவாசகம் பாடினர்.

ஆழ்வாராதியரின் நாலாயிர திவ்வியப் பிரபந்தமும் வைணவ மதத்திற்கு வாழ்வளிக்க வந்த இலக்கியமே!

மற்றும், தேவாரப் பதிகங்களும், பிரபந்தப் பாடல்களும் ஆக்கவழிப் பிரசாரத்திற்காக மட்டுமல்லாமல், பகை மதங்களை அழிப்பதற்கான போர்க் கருவிகளாகவும் முற்காலத்தில் பயன்படுத்தப் பட்டன.

எனவே, 'கலை கலைக்காகவே' என்ற கோஷம் நாட்டைப்பற்றி, நாட்டு மக்களின் நல்வாழ்வு பற்றிக் கவலைப் படாத சுகஜீவிகளின் கண்மூடிக் கொள்கையே.

தமிழன், புதிய தமிழகத்தைக் காண—அதில் வாழும் மக்களுக்குப் புதுவாழ்வு சமைக்க-பண்டைத் தமிழ் இலக்கியங்கள் அத்தனையும் பயன்பட வேண்டும். சிலப்பதிகாரத்தில் பண்டைத் தமிழகத்தின் ஒரு பகுதியான குமரிக் கண்டத்தைக் கடல் விழுங்கிய செய்தியைக் கூறும் இளங்கோவடிகள்,

> பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்து
> குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள

என்று ஆத்திரத்தோடு கூறுகின்றார். தமிழகத்தின் ஒரு பகுதியை எப்போதோ விழுங்கியதற்காக, 'கொடுங்கடல்' எனக்கூறி, கடல்மீது கோபம் கொள்கிறாரென்றால், இன்று நம் கண்ணெதிரே தமிழகத்தின் எல்லைகளைப் பறிக்க நினைப்போரை எதிர்த்து நிற்க இலக்கியங்களை ஏன் பயன் படுத்தக் கூடாது?

பாரதியாருக்குப் பளிங்கு மண்டபம் கட்டிப் பாராட்டு கின்றோமே, சித்திரம் எழுதிச் சிலை நாட்டி ஜெயகோஷம் செய்கின்றோமே, எதற்காக? அவருடைய கவிதைகள் ஏகாதிபத்திய எதிர்ப்புக்குத் துணைசெய்த காரணத்தால் தானே! காங்கிரஸ் கட்சியின் பிரசாரக் கருவியாக பாரதியாரின் கவிதையைப்போல் இன்னொன்றுண்டா? கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம்போன்ற சுவைமிக்க கவிதைகள்—காவியங்கள், இந்தியா விடுதலை பெற்ற பிறகுதானே மக்களின் மனதைக் கவர்ந்து இசை உலகில் பெருமை பெறுகின்றன. இத்தனை நாளும் நாட்டுப் பாடல்களைக் கொண்டுதானே பாரதியாரைப் பாராட்டினோம்.

எனவே, பாரதியாரைப் பாராட்டுவோர்.தேவாரம்,திருவாசகம்,நாலாயிரப் பிரபந்தம் போன்று தத்தம் சமயமே பெரிதெனவற்புறுத்தும் சமய இலக்கியங்களுக்குப் புகழ் மாலை சூட்டுவோர்- மூட நம்பிக்கையை எதிர்க்க-இன உணர்ச்சியை வற்புறுத்த இலக்கியத்தைப் பயன்படுத்தினால்-சங்க கால இலக்கியத்தின் மேன்மையை விளக்கி; இடைக்காலஇலக்கியத்தில் புகுந்துள்ள இழிவுகளை எடுத்துக் காட்டினால் அதைக் கண்டு முணுமுணுப்பானேன்?

வெறும் ஏடுகளில் உள்ளவற்றைக் கொண்டே ஒரு நாடு பெருமை அடித்துக் கொள்ள முடியுமென்பது இந்த இருபதாம் நூற்றாண்டில் இயலாத காரியம். "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை நீ வாழிய நிலனே" என்ற புறநானூற்றுப் பாடல்வரி இதையே போதிக்கிறது. ஆம்; நல்ல ஏடுகளையும்-இலக்கியங்களையும் கொண்டிருப்பதனாலேயே ஒரு நாடு பெருமை அடைந்துவிட முடியாது. நல்ல மக்களையும் பெற்றிருக்க வேண்டும்.

அத்தகைய மக்கள் சமுதாயத்தை அமைப்பதற்கு நமது பண்டைத் தமிழ் இலக்கியங்கள் வழிகாட்டுகின்றன. அவற்றைப் பழங் கதைகள் எனக் கழித்துச் சென்றால், நாம் பாதை தவறியவர்களாவோம். நமது மூதாதையர் தந்த எண்ணங்களை, நம் வருங்கால வாழ்வுக்கான லட்சியங்களாகக் கொள்ளவேண்டும். அவற்றில் தள்ளவேண்டியதைத் தள்ளலாம்; தவறில்லை. ஆனால், கொள்ள வேண்டியதையும் தள்ளிவிடக்கூடாது.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும்; இந்நாடே— அதன்
முந்தைய ராயிரமாண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே — அவர்

சிந்தையிலாயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—அதை
வந்தனைகூறி மனதிலிறுத்தி என்
வாயுற வாழ்த்தேனோ

என்றாரே பாரதியார், அந்தச் சிறந்த எண்ணங்கள் தான் சங்க இலக்கியங்கள். எனவே, அவற்றை வந்தனைசெய்து மனதில் இறுத்தி, 'சங்ககால இலக்கியங்கள் வாழ்க!' என வாயாற வாழ்த்துவோமாக! அவை காட்டும் கருத்துவழி வாழ்வோமாக!

சங்க இலக்கியங்கள் தமிழில், தமிழரால் எழுதப்பட்டாலும், அவற்றில் கூறப்படும் சம்பவங்கள் தமிழ்நாட்டில் நிகழ்ந்திருந்தாலும் உலக மக்கள் அனைவராலும் ஏற்கத் தகுதி உடையனவாம். எனவே, சங்க இலக்கியங்கள் வெறும் பெருமைக் குரியவை மட்டுமல்ல; நமது உரிமைகளையும் உணர்த்துபவை. அந்த உரிமைகளை அடைய நாம் செய்ய வேண்டிய கடமையையும் உணர்த்தும் இலக்கியங்கள்.

பண்டை இலக்கியங்களிலே நம் அறிவை மயக்கும் கற்பனைகள் குறைவு. பாட்டுக்களிலே வருவனவெல்லாம் நடந்த நிகழ்ச்சிகள். அல்லது நடக்கக்கூடிய கற்பனைகள். எனவே, அவற்றைப் பழமை எனப் புறக்கணிக்காது போற்றுவோமாக!.

# சங்ககாலத்து ஆடை

ஒரு நாட்டின் நாகரிகத் தொன்மையை அறிந்து கொள்ள அந்நாட்டின் பழங்குடி மக்கள் அணிந்த ஆடைகளும், அணிகலன்களும் சிறந்த சான்றுகளாகும். தமிழகம், மனித சமுதாயத்தினுடைய நாகரிகத்தின் தொட்டில். ஆகவே, மனித நாகரிகத்தின் வரலாற்றை அறிய விரும்புவோர், தங்கள் ஆராய்ச்சியைத் தமிழகத்தில் இருந்தே தொடங்க வேண்டும். இங்கு வாழ்ந்த ஆதிக் குடிகளின் ஆடை, அணிகலன்களையே ஆராய்ச்சிக் கருவிகளாகக் கொள்ளவேண்டும்.

சங்க காலத் தமிழர் உடுத்திய மெல்லிய ஆடைகளைப் பற்றியும், அவற்றின் வண்ணங்கள், சித்திர வேலைப் பாடுகள் பற்றியும் தமிழ் இலக்கியங்களில் செய்திகள் சிதறிக் கிடக்கின்றன.

தமிழரின் ஆடையும் அறிவும் பிணைந்து கிடக்கும் பெருமையை தமிழ் இலக்கியங்களில் பார்க்க முடிகிறது. 'நூல்' என்ற தமிழ்ச் சொல், ஆடைக்குரிய இழையையும், அறிவுக்குரிய புத்தகத்தையும் குறிப்பிடும் பொதுச் சொல்லாக இருப்பது தமிழருக்கே உரிய தனிச் சிறப்பாகும். அப்படியே, 'பனுவல்' என்ற தமிழ்ச் சொல்லும், ஆடைக்குப் பயன்படும் பஞ்சையும் அறிவு வளர்ச்சிக்குப் பயன்படும் புத்தகத்தையும் ஒருசேர உணர்த்துவது குறிப்பிடத்தக்கது. இதனாற்றான், 'இழைநக்கி நூல் நெருடிய ஏழை நெசவாளி எனப்படும் திருவள்ளுவர் சர்வ தேசமும் புகழும் பேரறிஞராகத் திகழ்கின்றார் போலும்!

கவிதை எழுதும் புலவரோடு, நூல் இழைக்கும் பெண்ணை ஒப்பிட்டுக் கூறும் ஒரு வெண்பா வருமாறு :

பஞ்சிதன் சொல்லாக பனுவலிழையாக
செஞ்சொற் புலவனே சேயிழையாய்—எஞ்சாத
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூன் முடியுமாறு

—நன்னூல் சூத்திரம் : 23.

இவ்வெண்பாவில், புலமைத் தொழிலுக்கு நிகராக நெசவுத் தொழிலை ஒப்பிட்டுக் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.

சங்க காலத்திலேயே மயிராலான விலை உயர்ந்த கம்பளங்களும், பருத்தி நூல் துணிகளும், பட்டு ஆடைகளும் நெய்வதில் தமிழர் திறமை பெற்றிருந்தனர். அந்நாளில் நெசவாளர்கள் 'காருகர்' எனப் பெயர் பெற்றிருந்தனர். சிறப்புமிக்க காவிரிப்பூம் பட்டினத்தில், நெசவாளர்கள் சேர்ந்தாற்போல் வாழ்ந்த வீதியைக் குறிப்பிடுமிடத்து,

பட்டினும் மயிரினும் பருத்தி நூலினுங்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கை

எனக் கூறுகின்றது சிலப்பதிகாரம். எலிமயிர் கொண்டும் ஆடை நெய்தனர் சங்ககாலத்து நெசவாளர்கள்.

சங்க இலக்கியங்களில் பருத்தி ஆடையைக் குறிப்பிடுமிடத்து கலிங்கம், அறுவை, கிரை, காழகம், வற்கலை என்ற பல பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன. இக்காலத்தில் நவீன இயந்திர சாதனங்களைக் கொண்டு நெய்யப்படும் ஆடைகளினும் மிக மிக மெல்லிய ஆடையை சங்ககாலத்து நெசவாளர்கள தயாரித்ததாகத் தெரிகிறது. அக்காலத்தில் தயாரித்த மெல்லிய ஆடைக்குப்

பாம்பு உரித்த தோலை உவமை கூறியிருக்கின்றனர். புலவர் பெருமக்கள். இதற்கு,

பாம்புரித் தன்ன வான்பூங் கலிங்கம்
—புறம்: 396.

அரவுரி யன்ன அறுவை
—பொருந : 83.

நாகம் நல்கிய கலிங்கம்
—சிறுபாண் : 96.

என்று, சங்க இலக்கியங்கள் சான்று கூறுகின்றன.

சங்க காலத்து மக்கள் உடுத்த பருத்தியாடையும் பட்டாடையும், இழைபோன வழிதெரியாதவாறு மிக மிக மெல்லியதாக இருந்ததை,

இழைமருங் கறியா நுழைநூல் கலிங்கம்
—மலைபடு : 561

நோக்கு நுழைகல்லா நுண்மைய அறுவை
—பொருந : 82.

என்ற வரிகளால் அறிந்து கொள்ளுகிறோம். மேலும், பெரும்பாணாற்றுப் படையில்,

ஆவி யன்ன அவிர்நூற் கலிங்கம்

என்ற வரியில், ஆடையின் மென்மைக்கு, பால் காய்ச்சும் போது அதிலிருந்து எழும்ஆவி உவமை கூறப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தி லேயே சித்திர வேலைப்பாடுகள் அமைந்த கண்கவரும்

அழகிய விதானங்களை நம் தமிழ் மக்கள் தயாரித்திருக்கின்றனர். 'ஓவிய விதானம்', 'சித்திர விதானம்' என்ற பெயர்களில் குறிப்பிடப்படும் ஒருவித ஆடை, பெரும்பாலும் மண்டப அலங்காரங்களுக்கே பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

என்னதான் அழகும் அருமையான வேலைப்பாடும் உடையதாயினும், மணமில்லாத ஆடை மகளிருக்கு மகிழ்ச்சி தராதல்லவா ? அதனால், பழங்காலத் தமிழ்ப் பெண்கள், தாங்கள் அணிந்த ஆடைக்கு மணங் கமழும் அகிற்புகை ஊட்டி ஆனந்தமடைந்தார்களாம்.

மணிமேகலையில், 'மலர்வனம்புக்க காதை'யில், வித்தகர் இயற்றிய சித்திர வேலைப்பாடமைந்த ஆடையின் அழகுக்கு உவவனத்தின் அழகை ஒப்பிட்டுக் கூறுகிறார் புலவர் சாத்தனார்.

பலவகை நிறங்களில் நீல நிறமே பழங்காலத் தமிழர்களுக்குப் பிடித்திருந்ததாகத் தெரிகிறது. திருமண மண்டபங்களில் அமைக்கப்படும் பந்தலின் அடிப்பகுதியில் கட்டப்பட்ட சித்திர வேலைப்பாடுகள் அமைந்த விதானம் என்னும் ஆடையும் நீல நிறமுடையதே. கண்ணகி—கோவலன் தம்பதிகளின் திருமணத்திற்காக அமைக்கப்பட்ட முத்துப் பந்தலின் உட்பரப்பில், 'நீல விதானம்' கட்டப்பட்டிருந்ததாக சிலப்பதிகாரத்தால் அறிகிறோம். ஔவை பெருமாட்டிக்குப் பாரிவேந்தன் மக்கள் அளித்த ஆடையும் நீல நிறமுடையதென்றே தனிப்பாடல் கூறுகின்றது. போர்வீரர்கள் அணியும் பூ வேலைகள் அமைந்த ஒருவகைக் கச்சையும் நீல நிறமுடையதென்பதை,

நீலக் கச்சைப் பூவா ராடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்

—புறம் : 274

நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்

—மதுரைக் காஞ்சி : 639

என்ற வரிகளால் அறிகிறோம்.

சங்ககாலத் தமிழ் அரசர்கள், தங்கள் மார்பிலும் தோளிலும் போர்த்திய மேலாடையும் நீல நிறமுடைய தென்றே தெரிகிறது. மயிலுக்கு மன்னன் பேகன் போர்த்திய ஆடையும், ஆலமர்ச் செல்வனுக்கு ஆய என்னும் அரசன் தந்த ஆடையும் நீல நிறமுடையனவாம்.

தமிழ்ப் பெண்கள் தம் மார்பை மறைக்கக் கட்டிய 'கச்சை' என்னும் ஒருவகை ஆடையும் நீல நிறமுடைய தென்றே இலக்கியங்கள் கூறுகின்றன.

பண்டைத் தமிழகத்தில், உடம்பை மறைக்க ஆடவர் சட்டை அணியும் பழக்கம் இருந்திருக்கிறது. அந்தச் சட்டைக்கு 'மெய்ப் பை' என்று பெயர் கொடுக்கிறார் இளங்கோவடிகள். 'மெய்' என்னும் உடல் புகுந்திருக்கும் 'பை'போன்று இருப்பதால், 'மெய்ப்பை' என்றார் போலும் !

ஆடை தைக்கும் தையற்காரர்கள் 'துன்ன'காரர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

# சமயமும் தமிழும்

தமிழ்மொழி எல்லாத்துறைகளிலும் மெல்ல மெல்ல முன்னேறி வருகிறது. ஆங்கிலத்தில் வழங்கி வரும் கலைச் சொற்களெல்லாம் தமிழில் பெயர்க்கப்படுகின்றன. தமிழை அரசியல் மொழியாக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் தமிழே அரசியல் மொழியாக வரப்போகிற காலம் அதிக தூரத்திலில்லை.

ஆனால், சமயத்துறையில் மட்டும் தமிழுக்குரிய இடத்தை வடமொழி ஆக்கிரமித்திருக்கும் நிலை இன்னும் அகன்றபாடில்லை. இந்த நிலை நீங்கி, மக்கள் வாழும் இல்லங்கள்தோறும்—வழிபடும் கடவுளரின் ஆலயங்கள் தோறும்—தமிழே ஆட்சி பெறச் செய்ய வேண்டும்.

திருமணம் முதல், இழவு வரை எல்லாச் சடங்குகளும் வடமொழியிலேயே நடந்துவந்த நிலை ஓரளவு மாறி, தமிழிலேயே நடைபெறும் வழக்கம் தொடங்கிவிட்டது.

ஆனால், பெருவாரியான தமிழர்களிடையே இன்னும் வடமொழி மோகம் விட்டபாடில்லை. பண்டைக்காலத்தில் வடமொழியில்தான் திருமணங்கள் நடைபெற்று வந்ததாக நம்புகின்றனர் மக்கள். இது தவறான எண்ணம்.

ஹரப்பா, மொகஞ்சதாரோ நகரங்களைப் பற்றிய ஆராய்ச்சியிலிருந்து சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் நாகரிகம் படைத்த மக்களாக வாழ்ந்திருந்தனர் என்று நிச்சயிக்க முடிகிறது. எனவே, உலகத்திலேயே

மிகப் புராதன கால நாகரிகத்தைப் படைத்த நமக்கு, இடையே வந்த வடமொழிதான் வாழ்க்கைக்கான சடங்கு மொழியாக இருக்க முடியும்—இருக்க வேண்டும் என்று நம்புவது எவ்வளவு அறியாமை!

பண்டைத் தமிழரிடையே காதல் வாழ்க்கை எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்ததென்பதையும் அகநானூறு போன்ற நூல்களால் அறிகிறோம். அவ்வளவு உயர்ந்த தன்மையில் வாழ்ந்த—ஏன்—இன்றும் வாழ்ந்து வருகின்ற—நாம், வாழ்க்கைச் சடங்குகளை இன்னொரு மொழியில் நடத்தும் அளவுக்கு அடிமைகளாக இருக்கிறோமென்பதை நினைத்தால் வெட்கித் தலைகுனியத்தான் வேண்டும்.

பிள்ளைகளுக்குப் பெயரிடுவதிலும் வடமொழி மோகம் நம்மை விட்டபாடில்லை. எந்தப் பக்கம் திரும்பினாலும் மக்களின் பெயர்கள் வடமொழியிலேயே இருந்து வரப் பார்க்கிறோம். இரண்டொருவர் பெயர்கூட நமது இன்பத் தமிழிலே இருப்பதில்லை.

பிள்ளைக்குப் பெயர் வைப்பதுகூட அன்னை மொழியில் இல்லையென்றால், இந்த அநீதியை என்னென்று உரைப்பது! பண்டைத் தமிழ்ப் புலவர்களின்—பாராண்ட மன்னர்களின்—பெயர்களை நோக்குங்கள்; எல்லாம், தமிழ்! தமிழ்!! தமிழ்!!! இடைக்காலத்தில், மதம் என்னும் மதுவுண்ட மயக்கத்தால் மாண்புமிக்க தமிழ்மொழியை மறந்தனர் மக்கள். இனியேனும் இந்த நிலை மாறித் தீர வேண்டும.

ஆலயங்களிலும், வழிபாட்டுக்குரிய மந்திரங்கள்—வாசகங்கள்—எல்லாம் வடமொழியிலேயே சொல்லப்படுகின்றன. ஏன்? மூவர் தேவாரத்தைப் பாடினால், அர்ச்

சகருக்கு மூச்சு முட்டிப் போகுமோ! மணிவாசகரின் திருவாசகப் பாடல், இறைவனின் திருவுள்ளத்திற்கு ஏற்காதா?

வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேன்
திருவா சகமிங் கொருகா லோதின்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
கொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை உலகின் மற்றைய ரிலரே''

என்பது சிவப்பிரகாசரின் திருவாக்கு. அத்தகைய திருவாசகத்திற்கு இறைவனின் திருக்கோயிலில் இடமில்லையென்றால், அதைத் தமிழர் பொறுத்துக்கொள்ளலாமா?

தமிழகத்தில் வடமொழி புகுமுன்னரே, தமிழருக்கு இறை வழிபாடு இருந்து வந்ததென்று ஆராய்ச்சியாளர்கள் அறிவிக்கின்றனர். வடமொழி புகுந்த பிற்காலத்தில் வழிபாட்டு முறைகளிலே மாறுதல்கள் தோன்றியிருக்கலாம். ஆனால், வழிபாட்டு வழக்கம் தொன்று தொட்டே இருந்து வந்திருக்கிறதென்பதை மறுப்பதற்கில்லை. இடைக்காலத்தில்தான் ஆலய வழிபாட்டுத் துறையில் வடமொழி ஆதிக்கம் பெற்றுவிட்டது.

'ஆலய வழிபாட்டு வழக்கம் குறைந்து வருகிறதே என்று அங்கலாய்க்கின்றனர் ஆத்திகர்கள். வாழ்வில் சஞ்சலப்படும் மனதுக்கு, சாந்தி தேடும் இடந்தானே கோயில். ஆனால், ஆலயத்திலே புரியாத மொழியில், தெரியாத மந்திரத்தைக் கேட்டுக்கொண்டு நிற்பதாலோ, அர்ச்சகருக்குக்காணிக்கை தந்து, அவர் தயவால் ஆண்டவனைக் கை

தொழுது கன்னத்தில் போட்டுக்கொள்வதாலோ, சிந்தை தெளிந்துவிடுமா? அலைபோன்ற நம் உள்ளம் அமைதி பெற முடியுமா? சஞ்சலப்படும் மனம் சாந்தியடைய இயலுமா? இதைச் சமய வாதிகள் சிந்திக்க வேண்டும்.

சாதிக்குச் சாதி உயர்வு தாழ்வு காணும் வேற்றுமைப் புத்தி ஒழியவேண்டும் என்ற கொள்கை பொதுவாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படும் காலம் இது. ஆனால், எல்லா உயிர்களுக்கும் பொதுவான இறைவன் கோயிலில் இன்றளவும் சாதிவேற்றுமை இருந்துவரக் காண்கிறோம்!

ஆலய வழிபாடு தமிழிலேயே நடைபெற வேண்டும் எனக்கூறுவதோ, வழிபாட்டுத் தொழிலில் சாதி வேற்றுமை கூடாதென்று வற்புறுத்துவதோ நாத்திகவாதமல்ல; நாட்டில் பரவிவரும் நாத்திகத்தைத் தடுக்கும் வழி.

என்று ஆலயத்திலிருந்து தமிழ் வெளியேற்றப்பட்டதோ, என்று சமயத்தின் பெயரால் மக்களை ஏய்க்கும் சடங்குகள் தோன்றியதோ, அன்றுமுதல்தான் நாத்திகம் நாட்டில் பரவலாயிற்று.

வடமொழியை தேவமொழி என்று நாட்டுமக்கள் நம்பியிருந்த காலத்தில், அம்மொழி ஆலயத்தில் ஆட்சி பெற்றிருக்கலாம். ஆனால், மக்கள் பேசும் மொழிகளிலே தேவமொழியென்றும், மக்கள் மொழியென்றும், முன்னது உயர்ந்த மொழி, பின்னது தாழ்ந்த மொழி என்றும் சொல்லப்படும் கூற்றை நம்பும் காலம் மலையேறிவிட்டது.

எனவே, தமிழகத்தில் தமிழ் மக்களின் வாழ்வுக்கான எல்லாத் துறைகளிலும் தமிழ்மொழியே ஆட்சி செலுத்த

வேண்டும். மக்கள் பெயரெல்லாம் தமிழ் மயமாக வேண்டும். திருமணம் முதலிய சடங்குகள் அனைத்தும் தமிழிலேயே நடைபெற வேண்டும். ஆலயத்தில் புகுந்துள்ள பிறமொழிக்கு விடைகொடுத்து, தமிழ்மொழிக்கு இடந்தரவேண்டும். அப்போதுதான் தமிழ் வாழும். தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழ்வர்.

# கம்பன் கண்ட தமிழகம்

கவியரசர் கம்பரை அறியாதார் இலர். தமிழ்நாட்டுக்குச் சிறப்புக் கூறவந்த பாரதியார், "புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்று பாடியுள்ளார். கவிதையுலகிலே, கற்பனைத் திறத்திலே கம்பர் ஈடு இணையற்று விளங்குகின்றார். இதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது.

தமிழில் கம்பர் இயற்றிய இராமகதை வழி நூலேயன்றி, முதல் நூலன்று. வால்மீகி வடமொழியில் இயற்றிய இராம கதையையே, கம்பர் தமிழில் காவியமாக்கினார். எனவே, தமிழரது பண்பாட்டிற்கும் வரலாற்றுக்கும் பொருந்தாத கருத்துக்கள் அல்லது மாறுபட்ட கூற்றுக்கள் கம்பர் காவியத்தில் காணப்படுவது இயற்கையே

இராமாயணக் கதையைத் தமிழரது பண்பாட்டிற்குடி ஏற்ற முறையில் திருத்தியமைக்கக் கம்பர் பெரிதும் முயன்றிருக்கிறார் என்பது, அவரது காவியத்தை நுண்ணறிவு கொண்டு நோக்குவோருக்குப் புலப்படும். ஆயினும், அவர் தமது முயற்சியில் பூரணமாக வெற்றி பெற்றாரென்று கூறுவதற்கில்லை. வால்மீகி இராமாயணத்தின் கதையமைப்பையும் பாத்திரங்களையும் மாற்ற முயலாதது, அல்லது மாற்ற முடியாதது அதற்குக் காரணமாகும்.

எனவே, மொழிப்பற்றுடையோர் கம்ப இராமாயணத்தின் புலமை நயத்தைப் போற்றுவதும், இனப்பற்றுடையோர் அந்நூல் தமிழர்களின் பண்பாட்டுக்கு ஒவ்வாதது

எனத் தோற்றுவதும் இயல்பாயிற்று. முன்னவர், அதைக் காவியமாகமட்டும் கொள்கின்றனர்; பின்னவர், அதை வரலாறாகவும் காண்கின்றனர்!

இராமாயணத்தை வரலாற்றுக் கண்கொண்டு ஆராய்ந்த அறிஞர்கள் வெளியிட்ட கருத்துக்கள் பலவும், இந்த அபிப்பிராய பேதங்களுக்கு அடிப்படையாயின. ஆனால், ஆராய்ச்சி என்பது, முற்றுப் பெறாத ஒன்று. எனவே, அதைப் போர்க்கருவியாகக் கொள்வது கூடாது.

எது எப்படியாயினும், கம்ப இராமாயணத்தைப்பற்றிய கருத்து வேற்றுமைகள் யாவும் கதையையும், கதையோடு கலந்துள்ள கற்பனையையும் ஒட்டியதேயன்றி, கம்பரது கவித்திறனைப் பற்றியதல்ல.

கம்பரின் புலமைத் திறனையும், கருத்தின் ஆழத்தையும் காணுகின்றபொழுது, "இவர் இளங்கோவைப்போல் ஒரு புதிய காவியத்தை இயற்றியிருக்கக் கூடாதா?" என்று எண்ணுகிறோம். மறுகணம், அவர் அப்படிச் செய்யாததற்கான காரணத்தையும் உணருகிறோம்.

கம்பர் காலத் தமிழகத்தில் வடமொழிக் காவியங்கள் ஆதிக்கம் பெற்றிருந்தன. ஆளுவோர் தமிழ் வேந்தராயினும், அவர்களை ஆட்டுவிப்போர் வடமொழிப் புலமையுடைய மதவாதிகளாயிருந்தனர்.

இராமாயணக் கதை கி. பி. 2-ம் நூற்றாண்டுக்கு முன்னரே—அதாவது, கம்பர் காலத்துக்குச் சற்றேறக்குறைய எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே—தமிழகத்தில் பரவியிருந்தது. சிலப்பதிகாரம் போன்ற பழைய காவியங்களிலேயே இராமாயணக் கருத்துக்கள் உவமானமாகக் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம்.

எனவே, அகற்ற முடியாத அளவுக்கு தமிழகத்தில் ஆதிக்கம் பெற்றுவிட்ட இராம கதையைத் தமிழ்ப் பண்பு வழி திருத்துவதற்குக் கம்பர் முயற்சி செய்தார் எனக் கொள்வது பிழையல்ல. ஆனால், அதி தீவிரப் போக்கில் இராமாயணத்தைத் திருத்தியமைக்க அன்று நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த மதவாதிகளும், அவர்கள் சொற்படி ஆடிவந்த அரசர்களும் அனுமதித்திருக்கமாட்டார்கள்.

கம்ப இராமாயணம் பாலகாண்டத்தில் முதல் நான்கு படலங்களாகிய ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், நகரப் படலம், அரசியல் படலம் ஆகியவை எவ்விதக் கருத்து வேற்றுமைக்கும் இடமின்றி நமது கவனத்தைக் கவருகின்றன. இந்தப் படலங்களில்தான் கமபர், வால்மீகி இராமாயணத்தையே மறந்து தமது கண்ணால் காணும் தமிழகத்தின் நல்ல அம்சங்களையும், தமது கற்பனையில் உள்ள பொருளாதார—சமூகக் கொள்கைகளையும் ஒன்றுபடுத்தி, கோசலநாட்டின்மேல் வைத்து ஒரு புதிய தமிழகத்தையே சித்தரித்துக் காட்டுகிறார். இங்கு, திருக்குறள், புறநானூறு, மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய தமிழ் நூற்களின் சிறந்த கருத்துக்களைக் கம்பர் கையாண்டிருக்கிறார். இந்தப் படலங்களில் கம்பர் வெளியிடும் அரசியல், சமூக, பொருளாதாரக் கருத்துக்கள் தற்கால முற்போக்கு அரசியல்வாதிகளுக்கு ஒரு நல்விருந்தாக அமைந்திருக்கின்றன.

கம்பர் காலத்தில் உலகெங்கும் முடியரசே நிலவியது. மன்னனில்லாத ஒரு அரசாங்கத்தைப் பற்றி அக்கால மக்கள் நினைத்திருக்கவும் முடியாது. எனவே, கம்பரும் முடியரசுடைய நாட்டையே நமக்கு அறிமுகப்படுத்துகிறார். என்றாலும், அவர் காட்டுவது குடிதழுவிக் கோலோச்சும் முடியரசேயன்றி, எதேச்சாதிகார முடியரசல்ல.

செயிரிலா உலகினில்
சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர்
உடம்பும் ஆயினுன்

என்று, கோசல நாட்டு மன்னனின் குடியோம்புங் குணத்தைக் கூறுகிருர்.

மன்னுயி ரெல்லாம்
மண்ணுள் வேந்தன்
தன்னுயிர்......

என்ற மணிமேகலேயின் கருத்தையே கம்பர் இங்கு கையாண்டிருக்கிருர்.

மன்னுயிரோம்பும் மன்னனுடைய ஆட்சியில், மாதம் மும்மாரி பெய்யும்; பறவைகள், தம் இனத்தோடு பகையின்றிக் கூடிவாழும். விலங்குகள் நாட்டில் புகுந்து குடிமக்களுக்குக் கொடுமைகள் செய்யா. வேசையரும் தாம் காதலித்தவனேயன்றி மற்றவனேக் கண்ணெடுத்தும் பாரார். இவற்றை,

வெள்ளமும் பறவையும்
விலங்கும் வேசையர்
உள்ளமு மொருவழி
போட நின்றவன்

என்ற வரிகளில் விளக்குகிருர்.

அறநெறி பிசகாது அன்புநெறி நின்று மன்னுயிரெல்லாம் தன்னுயிராகக் கொண்டு அரசாளும் வேந்தனின் நாட்டிலே பருவமழை தவருது பெய்கின்றதாம்!

உள்ளி யுள்ளவெலாம்
உவந்து ஈயும்அவ்
வள்ளி யோரின்
வழங்கின மேகமே

வரையாது வழங்கிய வள்ளல்கள், இரவலர் வேண்டிய போது கணமும் தாமதியாது ஈவர். அதுமட்டுமா? இரவலர் வேண்டும் பொருள் எவ்வளவோ அவ்வளவுக்குக் குறையாமல் கொடுத்து அவரை மகிழ்வித்துத் தாமும் மகிழ்வர். இது வள்ளல்களின் குணம். இதுபோலவே, கம்பர் காணும் புதிய தமிழகத்திலும் மேகமானது பருவ காலம் பிறழாது—நாட்டின் வளத்துக்குத் தேவையான அளவில் குறையாது—மழையைப் பொழிகின்றதாம்.

நீர்வளம் மிகுந்த நாட்டில் அதற்கு ஏற்றாற்போல நிலவளமும் சிறந்திருப்பது இயற்கை. எனவே, கம்பர் காணும் தமிழகத்தில் விளைநிலங்களில் முப்போகம் விளைகின்றது. அறுவடைக்குப் பிறகு, வயற்புறத்தில் நெற்போர்கள் ஆகாயமளாவி நிற்கின்றன.

அங்கயினர்களாயும், வயோதிகர்களாயும் உள்ள வறியர்களுக்குக் களத்திலேயே நெற்களை வழங்கிய பின்னர், மிகுதியான நெற்களை வண்டிகளில் ஏற்றி இல்லங்களுக்குக் கொண்டு செல்லுகின்றனர் உழவர்கள். தாமும் தமது மனைவி மக்களும் மட்டும் உண்பதற்காக அல்ல; விருந்தினர்களையும் உண்பிப்பதற்காக.

நெற்பாரம் மிகுந்த வண்டிகள் அணியணியாகச் செல்வதால், பாரம் தாங்காமல் மண்ணும் நெளிகின்றதாம்.

எறிதரு மரியின் சும்மை
எடுத்துவா னிட்ட போர்கள்
குறிகளும் போற்றிக் கொள்வார்
கொன்றநெற் குவைகள் செய்வார்
வறியவர்க் குதவி மிக்க
விருந்துண மனையி னுய்ப்பான்
நெறிகளும் புதையப் பண்டி
நிறைத்து மண்ணெளிய ஊர்வார்.

கம்பர் காட்டும் மன்னன், குடிகளை முறைசெய்து காக்கும் இறையென விளங்குகின்றான். அதிக வரி வாங்கும் அவா வின்றி மக்களின் சக்திக்கேற்ப வரிவாங்குகின்றான். அந்த வருவாயையும் நாட்டின் நன்மைக்காகவே செலவிடுகின்றான். ஆகவே அவனை, "இறையறிந்து உயிர்க்கு நல்கும் இசைகெழு வேந்தன்" என்று ஏற்றங்கூறிப் போற்றுகின்றார் கம்பர்.

காவலன் முறைசெய்து காக்கின்ற நாட்டில் ஆ பயன் குன்றாதென்பது ஆன்றோர் கண்ட முடிவு. எனவே கம்பர் நாட்டில் பால்வளம் மிகுந்திருக்கிறது. பசுக்கள் குடம் குடமாகப் பாலைப் பொழிகின்றன.

கம்பர் காணும் தமிழகத்தில் பெண்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குகின்றனர். "அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு?" என்று கேட்கும் அறிவிலிகள் அந்த நாட்டில் இல்லை. ஆண்களுக்கு இருப்பது போன்ற சொத்துரிமை பெண்களுக்கும் உண்டு. அறிவும் செல்வமும் படைத்த மங்கையர்கள் நாள்தோறும் வருவிருந்து ஓம்பி வாழ்வாங்கு வாழ்கின்றனர். இதை,

பெருந்த டங்கண்
பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும்
கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்(கு)
ஈதலும் வைகலும்
விருந்து மன்றி
விளைவன யாவையே

என்ற வரிகளில் கூறுகின்றார்.

நல்லாட்சி நடைபெறும் எந்த நாட்டிலும் மனிதனுக்கு மனிதன் ஏற்றத்தாழ்வு காணும் மதியற்ற செய்கை இருக்க முடியாது. மக்கள், காரணமின்றி பகைகொள்வதோ, கொலை-கொள்ளை போன்ற குற்றங்கள் புரிவதோ, இயலாத காரியம்.

கம்பர் காணும் புதிய தமிழகத்திலும் மக்களிடையே பகை இல்லை; கோபம் இல்லை. அதன் விளைவாக, கொலை கொள்ளை முதலிய குற்றங்களும் இல்லை. ஏன்? மக்கள் எல்லோரும் ஓர்நிலை என்ற சமநிலையன்றி, ஏற்றத்தாழ்வு இல்லை.

கூற்ற மில்லையோர்
குற்ற மிலாமையால்
சீற்ற மில்லைதஞ்
சிந்தையிற் செய்கையால்
ஆற்ற நல்லறம்
அல்ல திலாமையால்
ஏற்ற மல்ல(து)
இழிவு மில்லையே

என்று பெருமையுடன் பேசுகிறார் கம்பர்.

சுருங்கக் கூறின் கம்பர் காண விரும்பியது, வறுமையற்று வளங்கொழிக்கும் தமிழகம்; கள்வரிலாமையால் காவலற்ற தமிழகம்; கொள்வாரில்லாததால் கொடுப்பாரற்ற தமிழகம்; பெண்ணுக்கும் ஆணுக்கும் பேதங் காணாத தமிழகம்; பண்டிதர்—பாமரர் என்ற பாகுபாடற்ற தமிழகம்; சாதிக்கொரு நீதி கூறும் சழக்கரற்ற தமிழகம்!

மக்களுக்காக நடக்கும் மன்னன் ஆட்சியாக இருக்கட்டும்; அல்லது மக்களுக்காக மக்களே நடத்தும் மக்கள் ஆட்சியாக இருக்கட்டும். ஆளும்நெறி தெரிந்தோரால் ஆட்சி நடத்தப்பட வேண்டும் என்பதே கம்பர் கருத்து. அத்தகைய ஒரு ஆட்சியைப்படைத்த நாடு எப்படியிருக்கும் என்பதையும் பின்வரும் வரிகளால் எடுத்துக் காட்டுகிறார்:

...........அன்பு அரும்பித்
தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று
பழுத்தது போலுமன்றே

கம்பர் கண்ணால் கண்ட தமிழகமன்று நாம் அவரது காப்பியத்தில் காண்பது. அவர் காணவிரும்பிய லட்சியத் தமிழகமே. அதைத் தமது கவித்துவத்தால், கண்டது போலவே கூறி, அவர் காணாத தமிழகத்தை நாம் காணத் தூண்டுகிறார். அந்தப் போகக் கனிபோன்ற புதிய தமிழகத்தை அமைக்க நாம் பாடுபடுவோமாக!

# கட்டிடக் கலை

கட்டிட (எஞ்ஜினீயரிங்) கலை இன்று ஆங்கில மொழியில் கற்றுத் தரப்படுகிறது. 'தமிழில் கற்றுத் தாருங்கள்' என்ருல், 'தரம் குறைந்து விடுமே!' என்கின்றனர் ஆங்கில பக்தர்கள். கட்டிடக் கலையைக் கற்றுக்கொடுக்கும் திறமை தமிழனுக்கு இல்லை, அது தங்களுக்கே உண்டு என்றனர் ஆங்கிலேயர்கள். 'தமிழனுக்கு உண்டு; ஆனல், தமிழுக்கு இல்லை' என்கின்றனர், ஆங்கில பக்தர்கள்.

கடவுள்பக்திக் கலையையும், அந்தக் கடவுளை உணரும் நிலையையும் கற்றுத்தரும் திறமை ஆரிய மொழிக்கே உண்டு என்று ஒரு காலத்தில் கூறப்பட்டது. அந்தப் பொய்யை மெய்யென்றே நம்பினர் தமிழ்ப் புலவரிலும் சிலர். ஆனல், பிற்காலத்தில் தமிழில் தோன்றிய புராணங்கள், இதிகாசங்கள், பிரபந்தங்கள் எல்லாம் அந்த வாதம் பொய் என்பதைப் புலப்படுத்திவிட்டன.

கடவுட் கலையைக் கற்றுத்தரும் திறமை வடமொழியைக் காட்டிலும் தமிழுக்கே அதிகம் உண்டு என்பது உறுதியாகி விட்டது.

கடவுட் கலையையே கற்றுத்தரும் தமிழ், கட்டிடக் கலைக்கு மட்டும் புறம்பானதா? ஆங்கிலம் பிறந்த பிறகு தான் கட்டிடக் கலை பிறந்ததா? இல்லையே. கட்டிடக் கலையின் மேன்மைகளை யெல்லாம் உலக நாடுகள் தமிழ் நாட்டிடமிருந்துதான் கற்றன. தமிழ் இலக்கியங்களைப் பழுதறப் பயின்ருர்க்கு இதில் ஐயமிருக்காது.

மதுரை நகரின் அமைப்பையும் அழகையும் கூறவந்த இளங்கோவடிகள்,

ஆயிரங் கண்ணோன் அருங்கலச் செப்பு
வாய்திறந் தன்ன மதிலக வரைப்பு

என்கிறார். நாற்புறமும் மதிலால் சூழப்பட்ட நகரமானது அதன் தலைப்பிலுள்ள நுழை வாயிலண்டை நின்று கொண்டு பார்க்கும் கோவலனுக்கு, இந்திரனுடைய பெறுதற்கரிய அணிகலன்கள் நிரம்பிய பெட்டியைத் திறந்து வைத்தாற்போலக் காட்சி யளித்ததாம். அதாவது, திறந்திருக்கும் தலைவாயிலண்டை நின்று பார்த்தாலே நகரம் முழுவதும் தெரியும் வகையில் அதன் அமைப்பு (டவுன் பிளானிங்) முறை இருந்தது என்கிறார் இளங்கோ.

'மனையறம்படுத்த காதை'யில், திருமணத்திற்குப் பிறகு கோவலனும் கண்ணகியும், "நெடுநிலை மாடத்து இடை நிலையில் குடியேறினார்கள்" என்கிறது சிலப்பதிகாரம். 'நெடு நிலை' என்பதற்கு 'எழு நிலை' அதாவது ஏழு அடுக்குகளையுடைய மாளிகை என்கிறார் உரையாசிரியர். இதனால், சிலப்பதிகாரக் காலத்தில் எழு நிலைகளையுடைய மாபெருங் கட்டிடங்கள் இருந்தது உறுதிப்படுகின்றது. கட்டிடங்களின் உயரத்தை அளவிடுமிடத்து,

'மழைதோயும் உயர்மாடம்' பட்டி: 145
'முகில்தோய் மாடம்' சிலப்:
'விண்பொர நிவந்த வேயா மாடம்'
'வானுற நிவந்த மேனிலை' சிலப்: 8: 17—18,

என்ற வரிகளில், மாளிகையின் மேல்நிலை, மேகங்கள் தவழும் வண்ணம் வானோங்கி வளர்ந்திருந்ததாகக் கூறப்படுகிறது. மற்றும்,

'வானம் ஊன்றிய மதலை போல'

என்ற பெரும்பாணாற்றுப்படை வரியால், வானநாடு கீழே விழாதபடி கொடுத்த முட்டுக்கல் போன்று இருந்தன நீண்டோங்கிய கட்டிடங்கள் என்று தெரிகிறது. மற்றும்,

'விண்ணுறு நூர்புக அமைத்த படிகால்'

என்கிறார் கம்பர். மணிமேகலையில், மாளிகைகளின் அழகு பற்றிப் பொதுப்படக் கூறுங்கால்,

'மயன்பண் டிழைத்த மரபின தநுதான்'

தேவருலகச் சிற்பி எனப்படும், கட்டிடக் கலையில் கைதேர்ந்த மயன் பண்டொரு காலத்தில் அமைத்துத் தந்த மாளிகைகள் போன்றிருந்தனவாம்.

சங்ககாலத் தமிழகத்தில் கட்டிடச் சுவர்களின் மேற் பூச்சுக்கு சுண்ணும்பே பயன்படுத்தப்பட்டது. 'சுதை என்ற பெயரில், அந்தச் சுண்ணும்பின் சிறப்பெல்லாம் கூறப்படுகின்றன.

'வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
கண்கவர் ஓவியம்'

வெண் சுண்ணத்தைக் கொண்டு, திறமை மிக்க சிற்பிகள் செய்த கண்கவரும் பதுமைகள் கட்டிடங்களை அழகு செய் தனவாம்.

சுண்ணத்தின் வெண்ணிறத்துக்கு திங்களின் வெண் மையை ஒப்பிட்டு, "புதுப்பிறை யன்ன சுதை" என்று கூறுகின்றது புறநானூறு. அதன் வெண்மை,

'வெள்ளியன்ன வெண்சுதை'

அதாவது, வெள்ளியை நிகர்த்தது என்கிறது மணிமேகலை.

திங்களும் கரிதென வெண்மை தீட்டிய
சங்க வெண்சுதை

என்ற வரிகளில், திங்களைவிட வெண்மையானது என்கிறது கம்ப ராமாயணம்.

## மணித் திரைச் சாளரம்

பண்டை நாள் கட்டிடங்களில் அமைக்கப்பட்டிருந்த சாளரங்களை,

'வளிநுழையும் வாய்'

காற்று நுழைகின்ற வாய் என்றும்,

'வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர்வாய்......'

கோடைக் காலப் பள்ளியறைக்கு தென்றற் காற்றைத் திரட்டித் தரும் வாய் என்றும்,

'மான்கண் காலதர்'

மான்கண் போன்று துவாரங்களையுடைய காற்று நுழையும் சாளரம் என்றும் தமிழ் இலக்கியங்கள் வருணிக்கின்றன.

'மாலைத் தாமத்து மணிநிரைத்து வகுத்த
கோலச் சாளரம்'

சன்னல்களெல்லாம் பல வண்ணங்களுடைய மணிகளைக் கோத்து மாலையாகத் தொங்கவிட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தனவாம்.

## உயிரோவியம்

கட்டிடங்களில் சித்திரிக்கப்பட்டுள்ள பதுமைகள் மிக்க அழகு வாய்ந்தன; தம்மைப் பார்ப்போரின் கருத்

தைக் கவர்ந்து அவர்களை மேலே செல்லவொட்டாது தடுத்து நிறுத்தும் பெருமை வாய்ந்தன. இதை,

கயவாய் மருங்கிற் காண்போர் தடுக்கும்
யவனர் இருக்கை

என்ற சிலப்பதிகார வரிகளால் அறிகிறோம்.

கட்டிடத்துப் பதுமைகளெல்லாம் ஒன்றுபோல்வன அல்ல. பறவைகள், மிருகங்கள், மானிடர், தேவர் போன்ற பல்வேறு வடிவங்களுடையன. இதை,

மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகரியற்றிய
கண்கவர் ஓவியம்

என்ற, மணிமேகலை வரிகள் படம் பிடித்துக்காட்டுகின்றன. இன்று தெய்வங்களுறையும் கோயில் கோபுரங்களில் காணுகின்ற உயிரோவியங்களெல்லாம் பண்டை நாளில் மக்கள் வாழ்ந்த மாளிகைகளிலும் காட்சியளித்தன போலும்!

## படுக்கை அறைகள்

மக்கள் பருவ மாறுதல்களால் பாதிக்கப்படாமல் வாழ்வதற் கேற்ற வசதிகளுடன் மாளிகைகள் கட்டப்பட்டிருந்தன. கோடைக் காலத்தில் தென்றலும், குளிர் காலத்தில் வெப்பமும் தரக்கூடிய வகையில் பல்வேறு பள்ளியறைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றிற்கு 'வேனிற் பள்ளி', 'கூதிர்ப் பள்ளி' என்று பெயர்களிடப்பட்டிருந்தன.

வேனிற் காலத்துப் பள்ளியறைச் சன்னல், தென்றற் காற்று வீசுதற்கேற்ற பெரிய வாய்களை யுடையதாக

இருந்தது. குளிர் காலத்துப் பள்ளியறைச் சன்னல், வாடைக் காற்றை உள்ளே புகவிடாமல் தடுக்கத் தக்க குறுங்கண் படைத்ததாக இருந்தது.

முகில்தோய் மாடத்து அகில்தரு விறகின்
மடவரல் மகளிர் தடவுநெருப் பமர்ந்து
நறுஞ்சாந் தகலத்து நம்பியர் தம்மொடு
குறுங்கண் அடைக்கும் கூதிர்க் காலையும்

இளங் காதலர் நூன் முறைப்படி கட்டப்பட்ட மாளிகையில், குளிர் காலத்துப் பள்ளி யறைக்குள் புகுந்து, கண் போன்ற சிறு துவாரங்களை யுடைய சன்னல்களை அடைத்து நெருப்பருகே அமர்ந்து குளிர் காய்வர்.

நூலோர் சிறப்பின் முகில்தோய் மாடம்

என்பதனுல், சங்க காலத்தில் கட்டடக் கலையைப் போதிக்கும் நூல்களும் தமிழில் இருந்திருப்பதாகத் தெரிகிறது.

## வேயா மாடம்

மற்றும், ஏழாம் நிலையான மேல்மாடம், "வேயா மாடம்" அதாவது, கூரை வேயாத திறந்த வெளி என்று கூறப்படுகிறது.

இளங் காதலர்கள், இரவின் முற்பகுதியில் இந்த வேயா மாடத்தில் அமர்ந்து நிலவொளியில் விளையாடி மகிழ்வர். இதனுல், இந்த வேயா மாடம், 'இள நிலா முன்றில்' என்ற மற்ருெரு பெயரும் பெற்றது.

நிலவொளியில் மட்டுமின்றி, காலைக் கதிரவன் வெளிப்படும் போதும்,

வளமனை மகளிரும் மைந்தரும் விரும்பி
இளநிலா முன்றிலின் இளவெயில் நுகர

காதலர்கள் வேயா மாடத் தமர்ந்து இளம் வெயில்

நுகர்ந்து உடல்நலம் பெறுவர். 'இள நிலா', 'இளவெயில்' எனக் கூறியதற்குக் காரணம், பின் இரவு நிலவொளியும் மத்தியான கதிரொளியும் நோய் செய்யும் என்பதாம்.

முற்காலத்தில் சுடுமண் கொண்டே கட்டிடங்கள் கட்டப்பட்டன. சுடுமண் என்றால், செங்கல் என்று பொருள்.

## பாதையோரத்தில் பள்ளியறை

முன்னாளில், தொழில்வாரி வீதிகள் அமைந்திருந்தன. தொழிலின் சிறப்புக்கும் வருவாய்க்கும் ஏற்ப மனையழகும் மாண்பு பெற்றிருந்தது.

'நாடக மடந்தையர் நலங்கெழு வீதி
ஆடகச் செய்வினை மாடம்.........'

[ஆடகம்—பொன்]

நாடக மங்கையர் வாழும் வீதியில், வீடுகளின் நிறம் பொன் வண்ணத்தோடு போட்டியிட்டன.

சாளரம் பொளித்த கால்போகு பெருவழி
வீதிமருங் கியன்ற பூவணைப் பள்ளி

வீதியோரத்திலுள்ள காற்று வாங்கும் சன்னல்களையொட்டிப்படுக்கை யறைகள் அமைக்கப்பட்டிருந்தனவாம்.

இன்னும், பழங்காலக் கட்டிடங்களின் சிறப்புப்பற்றித் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகள், கட்டிடக் கலையில் முற்காலத் தமிழர் பெற்றிருந்த அறிவுக்கு அத்தாட்சிகளாகும்.

# இமயத்தில் எங்கள் கொடி

தமிழகம், இன்றளவும் உரிமையிழந்த நாடாகவே இருந்து வருகிறது. ஆகவே, அதன் உரிமையைப் பெறுவதற்கு, பண்டைப் பெருமைகளை நினைவூட்டிக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் செய்திகள், நமது உரிமைக்குப் போராட உணர்வூட்டத்தக்கவையாகும்.

உரிமைக்கு எல்லை வேங்கடம்
உறவுக்கு எல்லை இமயம்

என்பது இற்றைத் தமிழரின் குறிக்கோள். ஆனால், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில்,

உரிமைக்கு எல்லை இமயம் ..
உறவுக்கு எல்லை உலகம்

என்ற நிலையில், தமிழர் பெருமையோடு வாழ்ந்தனர். இது எனது கூற்றல்ல; ஆராய்ச்சியாளர் கூறும் செய்தி.

இன்று நாம் காணும் குமரி முனைக்குத் தெற்கே ஒரு காலத்தில் மிகப் பெரிய நிலப் பரப்பு இருந்ததாகத் தெரிகிறது. அதில். பஃறுளி என்ற ஆறு பாய்ந்ததாம். குமரிக்கோடு, மணிமலை முதலிய மலைகள் பலவும் இருந்தனவாம். அந்த நிலப்பரப்பு பிற்காலத்தில் கடலால் விழுங்கப்பட்டு தமிழகத்தின் தெற்கெல்லை, இன்று காணப்படும் குமரிமுனை வரை குறுகிவிட்டதாக நில நூல் வல்லார் கூறுகின்றனர்.

தெற்கே இருந்த இந்த நிலத்தை, அக்காலத் தமிழ் வேந்தர் வடக்கே ஈடுசெய்து விட்டனர் என்பதை சிலப்பதிகாரத்தால் அறிகிறோம்.

பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள

அதற்குப் பதிலாக,

வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை யாண்ட தென்னவ வாழி!

ஆம். பஃறுளியாற்றுக்குப் பதில் கங்கை நதியையும், குமரிக் கோடு போன்ற சிறு குன்றுகளுக்குப் பதிலாக உலகில் உயர்ந்த இமய மலையையும் தமிழகத்தோடு இணைத்து விட்டான் அக்காலத்தில் தென்திசையாண்ட தமிழ் வேந்தன்.

எந்தக் காரணத்தாலும் தமிழகத்தின் எல்லைசுருங்காமல் பார்த்துக் கொள்வதில் நம் தமிழ் வேந்தருக்கிருந்த அக்கறையையே இது புலப்படுத்துகிறது. ஒரு நாட்டின் எல்லை சுருங்கச் சுருங்க, அந் நாட்டுக்கு அந்நியரால் தொல்லை நேருமென்பதை அறியாதார் யார்?

ஆனல், நம் தமிழ் வேந்தர் தங்கள் தாய்நாட்டை எதிரிகள் கவராமல் காத்தும், இயற்கையின் பறிமுதலுக்கு ஈடு செய்துங்கூட இமயம்வரை பரந்திருந்த தமிழகத்தின் எல்லை, இன்று வேங்கடம்வரை குறுகிவிட்ட வேதனையை என்னென்பது?

வடக்கே கைபர் கணவாய் வழியாக ஆரிய மக்கள் 'தமிழ் இந்தியா'வில் புகுந்த காலத்தில், அங்கே வாழ்ந்த தமிழர், ஆரியருடன் போரிட்டோ அல்லது அவர்தம் தொல்லை பொறுக்காது விட்டுக் கொடுத்தோ விந்தியம் வரை பின் வாங்கினர் என ஆராய்ச்சிகளால் அறிகிறோம். அதற்குப் பின்னர், ஆரியரின் மொழி, அம்மொழிவழிப் பட்ட பண்பு, பழக்க வழக்கங்கள் தென்னட்டில் ஆதிக்

கம் பெற்றதால் தமிழ் திரிந்து தெலுங்கு, கேரளம், கன்னடம் ஆகிய கிளை மொழிகள் தோன்றின. அதுபோலவே, தமிழரா யிருந்தோர் ஆந்திரர், கேரளர், கன்னடர் எனவும் பெயர் பெற்றனர் என்பது இடைக்கால ஆராய்ச்சியாளர் எழுதி வைத்த ஏடுகள் காட்டும் வரலாறு.

தமிழர், சந்தர்ப்ப வசத்தால் இமயத்திலிருந்து பின் வாங்கி, விந்தியத்தில் தங்கி, பின்னர் அவர்தம் உரிமைக்குரிய எல்லை வேங்கடத்தோடு நின்று விட்டாலும், தங்கள் பண்டைத் தமிழகத்தின் எல்லையாகிய இமயத்தைப் பற்றிய எண்ணத்தை மறந்துவிடவில்லை.

எனவே, சமயம் நேர்ந்த பொழுதெல்லாம் இமயத்திலே தங்கள் வீரத்தமிழ்க் கொடியைப் பொறித்துவைக்க தமிழ்வேந்தர் மறக்கவில்லை. தமிழகத்தில் சேர—சோழ—பாண்டிய பகுதிகளில் அரியணை ஏறிய ஒவ்வொரு வேந்தரும், தத்தம் ஆட்சிக் காலத்தில் இமயத்தில் கொடி பொறித்து மீளுவதைத் தங்கள் வீரத்தை விளக்கும் செயலாகக் கருதினர்.

"வரையளந் தறிபா பொன்படு நெடுங்கோட்டு
இமயஞ் சூட்டிய வேம விற்பொறி"
—புறம்: 39.

அளந்தறியாப் பொன் உறையும் இமயத்தின் உச்சியில் சேரன் தனது விற்கொடியைப் பொறித்த வீரச்செய்தியை விளக்குகின்றன இந்த வரிகள்.

"அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கிய(து)இப் பயங்கெழு மலையென
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி யொற்றிக் கொள்கையிற் பெயர்வோன்"

சோழன் கரிகால் வளவன் இமயம் செல்ல எழுந்த காலை, தனது படைக்கு வழிவிட மறுத்த வடவேந்தருடன்

போரிட்டு, வெற்றி கண்டு மேற்சென்றபோது, அவனது படையை அப்பாற் செல்லவிடாமல் வழிமறித்து நின்றதாம் இமயமலை. மனிதரால் புறங்காண முடியாத மறத் தமிழர் வீரத்தை இந்த மலை தடுத்ததே என்று வருந்தி, இமயத்தில் தனது வருகையின் அடையாளமாக புலிக் கொடி பொறித்துமீண்டதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

"கொற்கைக் கோண்கன்
குமரித் துறைவன்
பொற்கோட்டு வரம்பன்......"

என்ற சிலப்பதிகார வரிகளால், குமரித்துறையைத் தெற் கெல்லையாகவும், பொன்படு இமயத்தை வடக்கெல்லை யாகவும் கொண்டு பாண்டி வேந்தன் பரம்பரை ஆட்சி புரிந்தது என்பதை அறிகிறோம்.

தமிழ் மூவேந்தரும் இமயத்தில் தத்தம் கொடியை நாட்டுவதில் ஒருவரோ டொருவர் போட்டியிட்ட செய்தி கள், 'மக்கள் மனவழிப்பட்ட வீரமல்ல; மண் ணாசை கொண்ட மன்னர்களின் நாடு பிடிக்கும் வேட்டை' என்று சிலர் கூறலாம். இது தவறு.

தமிழ்வேந்தர் இமயத்தில் கொடி பொறிக்க அடிக்கடி படையெடுத்துச் சென்றது வெறும் சடங்கல்ல; அல்லது அரசுநெறி மறந்த—போர்வெறி பிடித்த செயலுமல்ல. வேங்கடம்வரை ஆதிக்கம்கொண்ட வடவர்-வேங்கடத் துக்குத் தெற்கேயும் புகுந்து தீமை செய்யாதவாறு அடக் குவதற்கென்றே தமிழ்வேந்தர் அடிக்கடி வடக்கு நோக்கிப் படையெடுத்து வெற்றிக்குப் பின்னர் இமயத்தில் கொடி பொறித்து, தங்கள் இன்பத் தமிழகம் மீண்டனர். இதை,

"நெஞ்சு நடுங்க அவலம் பாய
துஞ்சாக் கண்ணர் வடபுலத் தரசே"

என்ற வரிகள் அறிவிக்கின்றன. எந்த நேரத்திலும் தமிழ்

வேந்தர் படை தங்கள் நாட்டில் புகுந்து விடுமென்ற அச்சத்தால் வடவேந்தர் நெஞ்சு நடுங்க, கவலை மேலிட, கண்ணுறங்காமல் காலங் கழித்தனராம்.

இழந்துவிட்ட இமயத்தை மீண்டும் பெற்று குமரி முதல் இமயம்வரை தமிழர் ஆட்சி புரிய வேண்டுமென்ற முயற்சி இடையிடையே தலைதூக்கிய துண்டு.

வடவாரியர் படைகடந்து
தென்தமிழ் நாடு ஒருங்கு காண

பாண்டிவேந்தன் முயன்ற செய்தியைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

நம் தமிழ் வேந்தர், இமயத்தில் வில், புலி, மீன் பொறித்துத் திரும்பிய வீரச்செயலைக் கண்டு வடவேந்தர் பொருமை கொள்ளாமலில்லை. அந்தப் பொருமை. போராக மூண்டதுதான் ஆரிய மன்னர் கனக—விஜயர், கண்ணகி சிலைக்குக் கல்சுமந்த கதை.

"தமிழ் நாட்டு மூவேந்தர் போர் விரும்பிப் புறப்பட்டு எமது முன்னோரைப் புறங்கண்டு இமயத்தில் தத்தம் கொடிகளை நாட்டியபோது எம் போன்ற வீர மன்னர் இங்கு நாடாளவில்லை போலும்!" என்று கூறி, தமிழ் வேந்தரின் ஆற்றலைப் பழித்துப் பேசினர். கனக—விசயர். இச்செய்தியைக்கேட்ட சேரன், வடக்கே படையெடுத்து கனக-விஜயரைப் போரில் புறமுதுகிடச் செய்து, தனது விற்கொடியை இமயத்தில் பொறித்தது மன்றி, வீரக் கண்ணகியின் சிலைக்கு இமயத்தில் கல்லெடுத்து அதைக் கனக-விஜயர் தலையில் சுமத்தித் தமிழ்நாடு கொண்டு வந்த வரலாற்றை சிலப்பதிகாரம் கூறுகிறது.

தமிழ் வேந்தரின் வீரத்திற்கு அடையாளம இமயத்தில் பொறித்த விற்கொடி. வடவேந்தரின் தோல்விக்கு

அடையாளம் வஞ்சியில் நாட்டிய கண்ணகியின் கற்சிலை. வாழ்க தமிழினத்தின் வீரம்!

இமயமலையே தமிழகத்தின் வடக்கெல்லை என்ற எண்ணத்தை தமிழர் தங்கள் பழக்க வழக்கங்களில்கூட வற்புறுத்தி வந்திருக்கின்றனர். "பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்று நீ வாழ்வா யாக!" என்று புவியரசரைக் கவியரசர் வாழ்த்தியதாகப் புறநானூறு 2-ம் பாடல் உணர்த்துகிறது. தமிழகத்தின் எல்லைகளைக் கூறும்போதெல்லாம், தெற்கே குமரிமுனை, வடக்கே இமயமலை, மேற்கிலும் கிழக்கிலும் கடல்—இவைதான் தமிழகத்தின் நாற்பாங் கெல்லைகள் என்கிறது புறநானூற்றுப் பாடல். இவை, தமிழ்நாட்டின் எல்லைகள் மட்டுமன்று; தமிழரசின் எல்லைகளுமாம். இதை,

"தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா எல்லை
தொன்று மொழிந்து
தொழில் கேட்ப"

என்ற மதுரைக் காஞ்சி வரிகள் வற்புறுத்துகின்றன.

இமயமலையை நம் தமிழ்வேந்தர் எவ்வளவு உயர்வாக்ப் போற்றினர் என்பதை,

"முடிமன்னர் மூவரும்
காத்தோம்பும் தெய்வ
வடபே ரிமயமலை"

என்ற சிலப்பதிகார வாழ்த்துக் காதை வரிகளால் அறிகிறோம். பகை நாட்டாரின் மலைகளில் தமிழ்க்கொடி பெருமையுடன் பறக்க வேண்டுமென்பது புலவர் பெருமக்களின் விருப்பம்.

"நெடுநீர்க் கெண்டையொடு பொறித்த
குடுமிய வாகபிறர் குன்றுகெழு நாடே"

"அயல் வேந்தர் நாடுகளிலுள்ள மலைகளின் உச்சியில் நமது தமிழ்க்கொடி என்றென்றும் பறப்பதாகுக" என்பதே இப்பாடலின் பொருள்.

வரலாற்று வழியே பார்க்குமிடத்து நம் தமிழ் மூவேந்தர் ஒருவரை யொருவர் எதிர்த்துப் போரிட்டதுண்டு. ஆனால், வடநாட்டு வேந்தர் தமிழ் நாட்டை ஆக்ரமிக்காதவாறு தற்காப்புக்காக அடிக்கடி படையெடுத்து அவர்களை அடக்கி வருவதில் தமிழ் மூவேந்தருக்குள் கருத்து வேற்றுமை இருந்ததாக எண்ணுவதற்கில்லை. ஆட்சியின் எல்லை எதுவானாலும் தமிழினத்தின் தாயகம், சேர சோழ, பாண்டிய நாடுகள் மூன்றையும் கொண்ட தமிழகமே என்பதை மூவேந்தர் மறந்ததாகத் தெரியவில்லை.

தமிழ் வேந்தரின் ஆற்றலைப் பழித்த் கனக-விஜயரின் மீது சீற்றங் கொண்டு புறப்பட்ட சேர வேந்தனை நோக்கி, "சேர வேந்தே! கனக-விஜயர் பழித்தது உம்மையன்று; சோழ, பாண்டியரையே" என்று அமைச்சர் அறிவித்த போது "தமிழ் வேந்தரில் எவரைப் பழித்ததாயினும் அது தமிழரை அவமதித்ததாகும்" என்று பதில் கூறிப் படைதிரட்டி வெற்றி கண்டான் செங்குட்டுவன்.

"தென்றமிழ் நன்னாட்டுச் செழுவில் கயல்புலி
மண்தலை யேற்ற வரைக........"

"வில், புலி, கயல் ஆகிய மூவேந்தரின் சின்னங்களையும் பொறித்து நமது படையெடுப்பை அறிவிக்கும் ஓலையை வடவேந்தருக்கு அனுப்புங்கள்" என்று செங்குட்டுவன் கூறியதிலிருந்து அவனது இன உணர்ச்சி வெளிப்படுகிறது.

தமிழ் இலங்கியங்கள் கூறும் செய்திகளெல்லாம் நமது இன உணர்ச்சியைத் தூண்டுவனவாக இருக்கின்றன. தமிழகத்தின் எல்லை இமயந்தான் என்ற உரிமையை மறுக்க முடியாதவாறு நமது புலவர்கள் தக்க ஆதாரங்களுடன் அறிவித்துள்ளனர். அதை ஆராய்ச்சியாளர்களும் ஆமோதித்துள்ளனர்.

இமயமலை ஒரு காலத்தில் தமிழகத்தின் எல்லையாக இருந்த தென்றாலும், வரலாற்றைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னே கொண்டு செல்ல முடியாது. விந்தியத்தைப் பற்றியும், இமயத்தைப் பற்றியும் பெருமை கொள்ள உரிமையுண்டு. என்றாலும், அவற்றை உரிமைக்கு எல்லையாகக் கொள்வது கலகத்திற்கு வித்திடுவதே தவிர, மக்கள் கைகோர்த்து வாழ்வதற்கு வழியல்ல.

ஆனால், தமிழகத்தை தமிழருக்கே யுரிய தனி நாடாக்கி வேங்கடத்தின் உச்சியில் தமிழ்க் கொடியை—இல்லை, தமிழரசுக் கொடியை—உயர்த்துவோம். அன்று, இமயத்தில் நமது கொடி! எண்ணியதுபோல் செயல் முடிந்தால், உரிமைக்காக அல்லாவிடினும், உறவுக்காக மீண்டும் நமது இன்பத் தமிழ்க்கொடி இமயத்தில் பறப்பதென்பது நடக்காத காரியமல்ல.

# வாழும் நாள் எந்நாளோ ?

தமிழகம் பண்டை நாளில், உலக நாடுகளோடு வாணிபம், அரசியல் ஆகிய துறைகளில் தனியே தொடர்பு கொண்டிருந்தது. இதர மொழிகள் வழங்கும் இந்திய நாடுகளைவிட தமிழகத்துக்கே உலகில் அதிக மதிப்பிருந்தது. அன்று, உலக நாடுகளின் மதிப்புக்குரிய இந்தியத் துறைமுகம் காவிரிப்பூம்பட்டினத் துறைமுகம் ஒன்றேயாம். "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற ஔவையின் முதுமொழியொன்றே, தமிழர் கடல் கடந்து வாணிபம் செய்வதைக் கடமையாகவும் கொண்டிருந்தனர் என்பதை விளக்கும்.

மிகப் பழைய காலத்திலேயே தமிழ் நாட்டு வணிகர் கிழக்கு நோக்கிக் கடல்கடந்து சென்று மத்திய அமெரிக்காவை அடைந்து அங்கு தங்கள் நாகரிகத்தைப் பரப்பினர் என, 'இந்து அமெரிக்கா' என்ற நூலில் அறிஞர் சமன்லால் கூறுகிறார். தமிழ் வணிகர், உலக நாடுகளுக்குத் தங்கள் பண்டத்தை ஈந்துப் பொருள் தேடியதோடு, தமிழ்ப் பண்பாட்டையும் தந்து, தமிழகத்துக்குப் புகழ் தேடினர்.

வேதங்கள் மிகப் பழையதென்பர் சமய வாதிகள். ஆனால், அந்த வேதங்கள் தோன்று முன்னரே தமிழர் சாலடியரோடு வாணிபம் நடத்தி வந்ததாக ஆராய்ச்சியாளர்கள் அறிவிக்கின்றனர். மத்தியதரைக்கடல் நாடுகளுடன் தமிழகத்தின் ஒரு பகுதியான பாண்டிய நாடு வாணிபஞ் செய்து வந்ததாக 'பிளினி' என்ற மிகச் சிறந்த ஆராய்ச்சியாளர் கூறுகிறார்.

முற்காலத்தில், நாகரிகப் பொருள்கள் அனைத்திற்கும் உலக நாடுகள் தமிழகத்தையே எதிர்பார்த்திருந்தன. ஏலம், சந்தனம், கிராம்புபோன்ற வாசனைப் பொருள்கள் தமிழகத்திலிருந்துதான் பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. எகிப்து நாட்டு வணிகர் நம் தமிழகம் வந்து வாசனைச் சாமான்களை வாங்கி ஒட்டகங்கள் மூலம் கொண்டு சென்றதாக யூதரின் சமய நூல் கூறுகிறது. அரேபிய நாட்டார் பாண்டி நாட்டாருடன் குதிரை வாணிபம் செய்து வந்ததாகவும் அறிகிறோம். இதை, மாணிக்க வாசகர் வரலாறும் அறிவிக்கும். கி. பி. முதல் நூற்றாண்டில் கிரேக்க வணிகர்களுக்கு உபயோகமாகவிருக்கும்படி எழுதப்பட்ட நூல்களில் தமிழகத்தின் கப்பல் வாணிபச் சிறப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தின் மூலமே நம் நாட்டிலிருந்து உணவுப் பொருள்கள், வாசனைப் பொருள்கள், முத்து—பவளம் போன்ற மணிவகைகள் பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. இந்தத் துறைமுகத்தில், ஏற்றுமதியாகக் கூடிய பொருள்களும் இறக்குமதியாகும் பொருள்களும், சோழ அரசாங்கத்தின் சின்னமான புலி முத்திரையிடப்பட்டு மூட்டை மூட்டையாகப் போரேறி நின்றன. துறைமுகத்தில், எல்லாப் பருவத்திலும் தமிழ்நாட்டுக் கப்பல்களும், பிறநாட்டுக் கப்பல்களும் அணியணியாக நின்று காட்சியளித்தன. காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில்,

> "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
> ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
> அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி"

"கடல்வழியே வந்த குதிரைகளும், ஈழ (இலங்கை) நாட்டிலிருந்து வந்த உணவுப் பொருள்களும், காழக (பர்மா) நாட்டிலிருந்து வந்த வாசனைப் பொருள்களும், பிற அரிய

பெரிய பொருள்கள் யாவும் நிறையக் குவிந்திருந்தன" எனப் பட்டினப்பாலை பகர்கின்றது.

இவ்வாறு, புகார்த் துறைமுகம் மூலம் தமிழர் பெற்றிருந்த உலக வாணிபச் சிறப்பை ஒருதனி நூலாகவே எழுதலாம். பிற நாடுகளிலிருந்து தமிழர் பெற்ற பொருள்களை அறிந்தால் அக்காலத் தமிழரின் நாகரிகச் சிறப்பு தெற்றென விளங்கும். யவனர் பெரிய கப்பல்களில் தங்கம் கொண்டுவந்து தமிழருக்குத் தந்து, அதற்கு ஈடாக தமிழகத்திலிருந்து மிளகை வாங்கிச் செல்வார்களாம். அலாரிக் என்பவன், ரோம் நாட்டின் மீது படையெடுத்து வந்தபோது, அவனுக்கு 3000 பவுண்டு மிளகு கொடுத்து சமாதானம் செய்தனராம் ரோம நாட்டினர். இது, தமிழ் நாட்டு மிளகுதான் என்பதைக் கூறவும் வேண்டுமோ? அந்நாளில் தமிழ் நாட்டிற்கும், உலக நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற வாணிபத்தில் மிளகுக்கு இருந்த மதிப்புப் பிற பொருள்களுக்கில்லை யென்றால் மிகையன்று.

பாண்டி நாட்டின் காயற்பட்டினத் துறைமுகத்தைப் பற்றி **மார்க்கபோலோ** என்ற புகழ்பெற்ற யாத்ரீகர் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:

"காயல் பட்டினத்தில் சுறுசுறுப்பான வாணிபம் நடந்தது. மேற்கிருந்து வரும் கப்பல்கள் காயல் பட்டினத்தில் தங்காமல் போவதில்லை. சீனு மற்றும் மேனுடுகளின் பொருள்களெல்லாம் இங்கு வந்து குவியும்; சுதேசிகளின் சாமான்கள் ஏராளமாக ஏற்றுமதியாகிப் பொன் குவியும். **இந்நாடே (தமிழ் நாடே) இந்திய வாணிகத்தின் திறவுகோல்.**"

இவ்வாறு உலக அறிஞர்களால் பாராட்டப்பட்ட காயல் பட்டினத் துறைமுகம் இற்றைநாளில் சிறப்பிழந்து

நிற்கிறது. ஒருகாலத்தில் அரசியல், வாணிபம், நாகரிகம், கலை ஆகிய துறைகளில் உலகில் சிறப்புற்று விளங்கிய நாடு ரோமாபுரி யாகும். அந்த ரோமாபுரியோடு எல்லாத் துறைகளிலும் போட்டியிட்ட இன்னொரு நாடு உண்டென்றால், அது தமிழ்நாடேயன்றி வேறன்று. தமிழ் நாட்டின் வளர்ச்சியைக் கண்டு ரோமாபுரியும் பொறாமை கொண்டதாம்.

"இந்தியா, வாணிபத்தால் ரோமாபுரியை வற்றடிக்கிறது. இந்தியாவுக்குள் பொன்னாறு பாய்கிறது." என்று, கி. பி. 140-ல் வாழ்ந்த தாலமி (Ttolemy) என்பான் அங்கலாய்த்துக் கொண்டான். அவன் கூறும் இந்தியா, தமிழ் நாடே. தமிழர் ரோம சாம்ராஜ்யத்துடன் வாணிபத் தொடர்பு கொண்டதற்கு அடையாளமாக தமிழகத்தில் ரோம நாணயங்கள் அடிக்கடி அகப்படுகின்றன. பழனி தாலுகா கலயமுத்தூரில் ரோம சக்ரவர்த்தியான அகுஸ்தனது தலைபோட்ட 63 தங்க நாணயங்கள் ஒரு மண் செப்பில் கிடைத்தன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே ரோமர்களுக்கும் தமிழர்களுக்கும் வாணிபத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது. அது மட்டுமல்ல; சுமார் ஆறுயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் வாணிபத் துறையில் நன்கு பயிற்சி பெற்றிருந்ததாக ஆராய்ச்சியாளர் அறிவிக்கின்றனர்.

கி. பி. 7-வது நூற்றாண்டில் சோழர், ஜப்பானோடு வாணிபம் செய்துவந்தனர். இராஜராஜ சோழன் காலத்தில் கப்பல் வாணிபம் தமிழகத்தில் முன்னெப்போதும் இருந்ததைவிட முதன்மை பெற்றிருந்தது. சோழரது கப்பல்கள் நாகபட்டினத்தி லிருந்து சாவகத் தீவிற்குத் தினமும் போய்க்கொண்டிருந்தன.

## கப்பல் தொழில்

தமிழகத்தில் கப்பற்றொழில் மிகவும் உயர்ந்த நிலையி லிருந்ததும் தமிழர் வாணிபத்தில் முதன்மை பெற்றிருந்த தற்கு முக்கிய காரணமாகும். கப்பற் றொழிலின் நுட்பங் களை விளக்கும் தனி நூல் தமிழில் இருந்துவந்ததாகத் தெரிகிறது. இதை தமிழகத்துடன் வாணிபம் செய்து வந்த அராபியர்களில் சிலர் எழுதி வைத்துள்ள குறிப்பு களிலிருந்து அறிய முடிகிறது. மிகப் பெரிய அளவில் முன்னேற்ற மடைந்திருந்த ரோம் சாம்ராஜ்யத்திலும் பிற நாடுகளிலும் ஆணியடித்துப் பலகைகளை ஒன்றுசேர்த்து, கப்பல் கட்டிய காலத்திலேயே, தமிழ் நாட்டினர் பலகை களை ஒன்றோடொன்று பொருத்தப்பட்டிருப்பது தெரியாத வாறு பிணைத்து அழகான கப்பல்களைக் கட்டினர்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எகிப்து தேச மன்னன் சாலமன் தமிழ் நாட்டிலிருந்து குரங்கு, மயில் முதலியவைகளைப் பெற்றுச் சென்றதாகத் தெரிகிறது.

சுருங்கக் கூறின், இன்று உணவு உட்பட பிற எல்லா வாழ்க்கைப் பொருள்களுக்கும் தமிழகம் வெளி நாடுகளை எதிர்பார்க்கிறதல்லவா? இதற்கு நேர்மாறாக, உலக நாடு கள் அனைத்தும் தமது தேவைக்குத் தமிழகத்தை எதிர் பார்த்து நின்றன. இந்தியா என்ற பெயரில் பண்டை நாள் வாணிபம், அரசியலைப்பற்றி உலக அறிஞர்கள் கூறி யுள்ள புகழ் மொழிகள் பெரும்பாலும் தமிழகத்துக்கே உரியனவாகும்.

★